உதயன்

சுடர் : 36 கதிர் : 147 | வியாழக்கிழமை | சித்திரை 09 ஆம் நாள் 22 ஏப்ரல் 2021 | வள்ளுவர் ஆண்டு 2051 | பக்கங்கள்: 20 விலை : ரூ.30 | செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

## அல்வாய் கொலை; நால்வர் கைது!

**மேலும் இருவரைத் தேடி வலைவீச்சு**

யாழ்ப்பாணம், ஏப். 22
பருத்தித்துறை அல்வாய் பகுதியில் குடும்பத் தகராறு காரணமாக இடம்பெற்ற மோதலில் குடும்பத்தலைவர் 18 ➤

## ஏழு பவுண் நகைகள் வவு.வில் கொள்ளை!

வவுனியா, ஏப். 22
வவுனியா ஓமந்தை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் வீடொன்றுக் குள் நுழைந்த திருடர்கள், திருமணத்துக்காகச் சேர்த்துவைக்கப்பட்ட ஏழு பவுண் தங்க நகைகளைத் திருடிச் சென்றுள்ளனர். இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது: 18 ➤



உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் கொல்லப்பட்டவர்களுக்கான அஞ்சலி நிகழ்வுகள் நேற்று நாடெங்கும் பரவலாக முன்னெடுக்கப்பட்டன. இன, மத, மொழி பேதம் இன்றி அனைத்து வழிபாட்டுத் தலங்களிலும் இந்த அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்றன. (ம)

ஈஸ்டர் தாக்குதல்:

## தவறிழைத்தோரை மன்னிப்போம்!

*பாப்பரசர் தெரிவிப்பு*

கொழும்பு, ஏப்ரல் 22
கத்தோலிக்க சபையானது தவறிழைப்பவர்களுக்கு மன்னிப்பு வழங்கும் பண்பு கொண்டது. பழிவாங்குவதன் மூலம் பாதிக்கப்பட்டவர்களைத் திருப்திப்படுத்த முடியாது. அதேபோன்று 18 ➤

வடமாகாணத்தில்

# அடுத்தடுத்த வாரங்களில் கொரோனா அதிகரிக்கும்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 22
வடக்கில் கொரோனாத் தொற்று வீதம் அதிகரிக்கும் நிலை காணப்படுகின்றது. எதிர்வரும் மூன்று வாரங்கள் அவதானம் மிக்கவை. வட பகுதி மக்கள் கொரோனாத் தொற்று தொடர்பில் முழுமையான விழிப்புணர்வு அற்றநிலையில் காணப்படுகின்றனர் என வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார். 18 ➤



## தடுப்பூசி ஏற்றியதை அடுத்து குருதி உறைந்து மூவர் பலி

*சுகாதார அமைச்சர் தகவல்*

கொழும்பு, ஏப். 22
இலங்கையில் கொரோனாத் தடுப்பூசி ஏற்றப்பட்டவர்களில் மூவர் குருதி உறைவு காரணமாக உயிரிழந்துள்ளனர் என்று சுகா 18 ➤

காணிப் பிரச்சினை

## யூனியன் கல்லூரிக்கு சாதகமாகத் தீர்ப்பு!

யாழ்ப்பாணம், ஏப். 22
அமெரிக்கன் மிஷன் உரிமைகோரும் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் பராமரிப்பில் உள்ள ஆதனத்தை கல்லூரியிடம் பொறுப்பளித்து மல்லாகம் நீதிவான் நீதிமன்றம் நேற்றுக் கட்டளையிட்டது. 06 ➤

முச்சந்தி முரளி



"புத்தர், இயேசு எண்டு மதத்தின்ர பேரைச் சொல்லி காணி பிடிக்கிறவைக்கு இந்தத் தீர்ப்பு ஒரு பாடம் பாருங்கோ..."

## தரமிறக்கப்பட்டுள்ளது தமிழ் பிரதேச செயலகம்

கொழும்பு, ஏப். 22
கல்முனை தமிழ் பிரதேச செயலகம் மீளவும் உப பிரதேச செயலகமாக தரமிறக்கப்பட்டுள்ளது. கல்முனை உப பிரதேச செயலகத்தை, தமிழ் பிரதேச செயலக 18 ➤

## இலங்கைக் கடலில் மீன்பிடிக்க இந்திய மீனவரை அனுமதியோம்!

*கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு*

கொழும்பு, ஏப். 22
'இலங்கை கடலில் மீன் பிடிக்க இந்திய மீனவர்களுக்கு அனுமதி வழங்கப்படும்' என்று டக்ளஸ் தெரிவித்த 18 ➤

## வடக்கில் கொரோனா 21



யாழ்ப்பாணம், ஏப். 22
யாழ்ப்பாணம் பொலிஸ் நிலைய உத்தியோகத்தர்கள் 11 பேர் உட்பட வடக்கில் மேலும் 21 பேருக்கு கொரோனாத் தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்று வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் 18 ➤

## நாடாளுமன்றத்தில் கடும் அமளிதுமளி

*கறுப்புப் படையானது சஜித் அணி*

கொழும்பு, ஏப். 22
நாடாளுமன்றத்தில் நேற்று ஆளுங் கட்சியினருக்கும், பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கிடையில் சொற்போர் மூண்டதுடன், இரு தரப்பினரும் சபைக்கு நடுவில் வந்து கோசமெழுப்பியதால் கடும் அமளிதுமளியும் ஏற்பட்டது. இதனால், சபை நடவடிக்கைகளை 10 நிமிடங்களுக்கு ஒத்தி வைக்கவேண்டிய நிலை 17 ➤

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# உரிமைகளை மறுதலிப்பது ஜனநாயகத்துக்கு விரோதம்

## அரசை இயக்கும் முக்கிய 'புள்ளியை' சாடுகிறார் விமல் வீரவன்ச



**கொழும்பு, ஏப். 22**
**ஜனாதிபதியையும், பிரதமரையும் இயக்கும் முக்கிய புள்ளிதான், மே தின நிகழ்வுகளுக்கு தடை விதிக்கப்படுவதற்குக் காரணம். மக்களின் உரிமைகளை வெளிக்காட்டும் நிகழ்வுகளைத் தடை செய்வது ஜனநாயக விரோதம். இவ்வாறு அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:
மே தின நிகழ்வுகளை அரசு தடுத்து நிறுத்தியமை ஜனநாயக விரோதமாகும். இலங்கையில் கொரோனாவைக் காரணம் காட்டி மே தினத்தன்று எந்த நிகழ்வுகளையும் நடத்தவேண்டாம் என்று இராணுவத்தளபதி ஊடாக ஜனாதிபதி உத்தரவு பிறப்பித்துள்ளார்.

ஜனாதிபதியும் பிரதமரும் ஒன்றை மட்டும் கவனத்தில் கொள்ளவேண்டும். இது மக்கள் ஆணையுடன் அமைக்கப்பட்ட அரசு. எனவே மக்களின் உரிமைகளை வெளிக்காட்டும் நிகழ்வு களை அடியோடு நிறுத்துவது ஜனநாயக விரோதம்.

சுகாதார விதிகளை கடைப்பிடித்துக்கொண்டு நிகழ்வுகளை பெரும் எடுப்பில் அல்லாமல் ஒரு கட்டமைப்புக்குள் நடத்தலாம் என்று அரசு அறிவித்திருக்கலாம்.

ஆனால் அரசுக்குள் இருக்கும் முக்கிய இரு தலைவர்களையும் (ஜனாதிபதி, பிரதமர்) இயக்குகின்ற ஒரு பெரும்புள்ளிதான் இந்த நிகழ்வுகளை நிறுத்துவதற்கு மூல காரணமாக அமைந்துள்ளார். அரசுக்குள் இன்று எழுந்துள்ள முரண்பாடுகளுக்கு அந்த முக்கிய புள்ளிதான் காரணம். பங்காளிக் கட்சித் தலைவர்களின் கூட்டத்தை நாம் புறக்கணித்ததில் நியாயம் உண்டு.

இந்த நிலையில் மே தின நிகழ்வுகளை நாம் எவ்வாறு நடத்துவது என்று ஆலோசித்துக் கொண்டிருந்த நிலையில் அந்த நிகழ்வுகள் அனைத்தையும் நடத்துவதற்கு அரசு தடை விதித்துள்ளது. அரசுக்குள் இருக்கின்ற வேற்றுமைகளை ஜனாதிபதியும், பிரதமரும் உடன் களையவேண்டும். இல்லையேல் அரசை எவராலும் காப்பாற்ற முடியாது, என்றார். (ஒ,5,22)



## அரசுக்குள் முறுகலால் தடை விதிக்கவில்லை

**பஸில் ராஜபக்ச தெரிவிப்பு**

கொழும்பு, ஏப். 22
அரச கூட்டணிக்குள் ஏற்பட்டுள்ள முறுகல் நிலை காரணமாகவே மே தின நிகழ்வுகள் இரத்துச் செய்யப்பட்டுள்ளன என முன்வைக்கப்படும் குற்றச் சாட்டு களை அரச கூட்டணியின் தலைமைக் கட்சியான சிறிலங்கா பொதுஜன பெரமுன நிராகரித்துள்ளது.

நாட்டில் மீண்டும் கொரோனா வைரஸ் பரவும் அபாயம் இருப்பதால் இம்முறை மேதினக் கூட்டங்களை நடத்துவதற்கு அனுமதி வழங்குவதில்லை என்று கொரோனா வைரஸ் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையம் அறிவித்துள்ளது.

இந்நிலையில் அரச தரப்புக்குள் ஏற்பட்டுள்ள மோதலை தடுப்பதற்கும், அரசியல் குழப்பங்களை மறைப்பதற்காகவுமே மே தினத்துக்கு தடை விதிக்கப் பட்டுள்ளது என எதிர்க்கட்சிகளும், ஆளும் கட்சியின் பங்காளிகளும் குற்றஞ்சாட்டியுள்ளன.

இது தொடர்பில் வினவியபோதே பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ச மேற்கண்டவாறு கூறினார்.

கொரோனா வைரஸ் தாக்கத்தால் தேர்தல்கூட பிற்போடப்பட்டது. எனவே, மே தினம் குறித்து சுகாதார தரப்பினரே முடிவெடுத்துள்ளனர். கட்சி என்ற அடிப்படையில் மே தின நிகழ்வுகளை நடத்துவதற்கு நாமும் தயார்.

ஆனாலும் அரசு என்ற வகையில் பொறுப்புடன் செயற்பட வேண்டும். ஏனெனில் அண்டை நாடான இந்தியாவில் தற்போது வைரஸ் தொற்று வேகமாக பரவிவருகின்றது, என்றார். (ஒ,44)

## மே தினக் கொண்டாட்டத் தடை பிளவுகளை அம்பலப்படுத்துகிறது

*அரசை போட்டுத் தாக்குகிறார் சஜித்*



கொழும்பு, ஏப்.22
மே தினக் கொண்டாட்டங்களைக் கொரோனாவைக் காரணம் காட்டி தடை செய்தமை ஊடாக அரசினுள் உள்ள பிளவு வெளிச்சத்துக்கு வந்துள்ளது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
பிரதமர் மஹிந்த ராஜபக்ச பங்காளிக் கட்சிகளின் தலைவர்களுடன் நடத்திய கலந்துரையாடலின்போதும் முக்கிய பங்காளிகள் அந்தக் கூட்டத்தைப் புறக்கணித்திருந்தனர்.

வேண்டா மனதுடன் பங்கேற்ற மைத்திரிபால சிறிசேன தலைமையிலான சிறிலங்கா சுதந்திரக் கட்சி மறுநாள் மே தின நிகழ்வுகளை தனித்து நடத்துவோம் என்று பகிரங்கமாக அறிவித்தது.

அரசின் ஏனைய பங்காளிகள் அரசுடன் கைகோர்க்காமல் மே தின நிகழ்வுகளைத் தனித் தனியே நடத்த ஆலோசித்து வந்த நிலையில் மே தினம் அன்று எந்த நிகழ்வுகளையும் பேரணிகளையும் நடத்த வேண்டாம் என்று கொரோனாத் தடுப்புச் செயலணியும் கேட்டுக் கொண்டுள்ளது.

பங்காளிகளுடனான கலந்துரையாடலின் பின்னர் அரசு பிளவடையும் என்று நான் பகிரங்கமாகச் சொல்லியிருந்தேன். அதை மூடி மறைக்கும் விதத்தில் மே தின நிகழ்வுகளுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

மே தின நிகழ்வுகளின் தடைக்கு உண்மையில் கொரோனாதான் காரணம் எனில் ஜனாதிபதி தலைமையிலும் பிரதமர் தலைமையிலும் அமைச்சர்கள் தலைமையிலும் நாட்டில் ஆங்காங்கே இடம்பெறும் நிகழ்வுகளுக்கு கொரோனாத் தடுப்புச் சட்டம் விதிவிலக்கில்லையா?, என்று அவர் கேள்வி எழுப்பினார். (ஒ,5,22)



## இந்து ஆலயங்களிலும் உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு அஞ்சலி

வவுனியா,ஏப்.22
உதிர்த்த ஞாயிறு தாக்குதலில் கொல்லப்பட்ட மக்களின் இரண்டாம் ஆண்டு நினைவை முன்னிட்டு வவுனியாவில் உள்ள இந்து ஆலயங்களிலும் நேற்று சிறப்பு வழிபாடுகள் முன்னெடுக்கப்பட்டன.

கடந்த 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் 21 ஆம் திகதி உதிர்த்த ஞாயிறு தினத்தன்று தேவாலயங்கள் மற்றும் விருந்தினர் விடுதிகள் என்பவற்றில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதலில் பொதுமக்கள் பலர் கொல்லப்பட்டனர்.

அத் தாக்குதல் நடைபெற்று நேற்றுடன் இரண்டு ஆண்டுகள் நிறைவடைந்ததை யடுத்து தேவாலயங்களில் சிறப்பு வழிபாடுகள் இடம்பெற்ற நிலையில், இந்து ஆலயங்களிலும் உயிரிழந்த உறவுகளின் நினைவாக விசேட ஆத்ம சாந்திப் பிரார்த்தனை நடைபெற்றது. அந்தவகையில் நேற்று காலை 8.45 மணிக்கு வவுனியா, குட்செட் வீதி, கருமாரி அம்மன் ஆலயத்தில் ஆலயக் குரு பிரபாகரக்குருக்கள் தலைமையில் விசேட வழிபாடு நடைபெற்றது. (ஜ-18)

## அரசுக்குள் ஏற்பட்டுள்ள நெருக்கடியே மே தின நிகழ்வு தடைக்குக் காரணம்

*ஜே.வி.பி. சுட்டிக்காட்டு*

கொழும்பு, ஏப். 22
மே தினப் பேரணியை அரசு நடத்த முடியாத நெருக்கடியில் இருப்பதால்தான் மே தின நிகழ்வுகள் அனைத்தும் கொரோனாத் தடுப்புச் செயலணியால் இடைநிறுத்தப்பட்டுள்ளன என்று அநுர குமார திஸாநாயக்க தலைமையிலான மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி) தெரிவித்துள்ளது.

'அரசுக்குள் இன்று மோதல் வலுப்பெற்றுள்ளது. அரசின் பங்காளிக் கட்சிகள் எந்த அரசியல் மேடையில் ஏறுவது என்பதில் குழப்பமடைந்துள்ளனர்' என்றும் ஜே.வி.பி. சுட்டிக்காட்டியுள்ளது.

இது தொடர்பில் அந்தக் கட்சி மேலும் தெரிவித்துள்ளதாவது:
மே முதலாம் திகதி நடைபெறவிருக்கும் மே தின நிகழ்வுகளை நிறுத்துவதென எடுக்கப்பட்டுள்ள முடிவுக்கு நாங்கள் இணங்கவில்லை. சுகாதார நடைமுறைகளைக் கவனத்தில் எடுத்து மே தினத்தை நடத்தவிடாமல் தடுப்பதாக தீர்மானம் எடுப்பதாயின், சுகாதார விதிமுறைகளைக் கவனத்தில் கொள்ளாத பல நிகழ்வுகள் கடந்த காலங்களின் நாட்டில் இடம்பெற்றுள்ளன.

ஜனாதிபதி மற்றும் அதிகாரிகள் கலந்துகொண்ட கிராமத்துடன் கலந்துரையாடல் என்ற தொடர் நிகழ்ச்சிகளில் ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டனர். அதேபோல், சிங்கள தமிழ் புதுவருட காலத்தில் இலட்சக்கணக்கான மக்கள் ஒன்றுகூடினார்கள். அப்போது இடம்பெறாத காரணத்தைத் தற்போது உருவாக்கி அதனை முன்கொண்டு செல்ல அரசு எதிர்பார்க்கின்றது.

இதன் மூலமாக அரசுக்குள் ஏற்பட்டிருக்கின்ற அரசியல் நெருக்கடி காரணமாக, அரசால் மே தினப் பேரணியை நடத்த முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது என்பது தெளிவாகியுள்ளது, என்றார். (ஒ,5,22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணுசக்தியின் மூலக்கூறுகளுடன் இலங்கைக்குள் சர்வதேசக் கப்பலா?

## நாடாளுமன்றில் சஜித் எச்சரிக்கையுடன் கேள்விக்கணை

கொழும்பு, ஏப். 22

அம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு வேதியல் அணுமூலக்கூறுகளுடன் சர்வதேசக் கப்பல் ஒன்று வந்துள்ளமை உண்மையா? குறித்த நாட்டின் தூதரகத்தின் வலியுறுத்தலுக்கு கட்டுப்பட்டு அரசு இதனைக் கண்டுகொள்ளாது மௌனம் காக்கின்றதா? இது உண்மையென்றால் நாட்டின் நிலைமை என்னவாகும் எனத் தெரியுமா?



இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ சபையில் கேள்வி எழுப்பினார்.

அதேபோல் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு நாளை வெள்ளிக்கிழமை துறைமுக நகருக்கு கற்கை விஜயம் மேற்கொள்ள வருமாறு சீனத் தூதரகத்தால் விடுக்கப்பட்டுள்ள அழைப்பு குறித்தும் எதிர்க்கட்சியினர் கேள்வி எழுப்பினர்.

நாடாளுமன்ற அமர்வுகள் நேற்று இடம்பெற்றுக்கொண்டிருந்த வேளையில் ஒழுங்குப் பிரச்சினை எழுப்பிய எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, அம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு வந்துள்ள கப்பல் குறித்து வெளிவரும் செய்தி தொடர்பில் சபையில் கேள்வி எழுப்பினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

"சமூக வலைத்தளங்களில் செய்தி ஒன்று பகிரப்பட்டு வருகின்றது. நேற்று (நேற்றுமுன்தினம்) 20ஆம் திகதி அம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு சர்வதேச கப்பல் ஒன்று வேதியல் அணு மூலக்கூறுகளுடன் உள்நுழைந்துள்ளது. இதனை இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவினர் கண்டறிந்துள்ளனர். இது உண்மையான செய்தி என்று நாம் நம்புகின்றோம், அது தவறான செய்தி என்றால் அது குறித்து அரசு அறிவிக்க முடியும். ஆனால் இலங்கை கடற்படைக்குக்கூட இந்தக் கப்பலைப் பரிசோதனை செய்ய அனுமதிக்கவில்லை எனக் கூறப்படுகின்றது.

துறைமுகத்திலிருந்து இந்தக் கப்பலை உடனடியாக வெளியேற்ற வேண்டும் என்று இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு வலியுறுத்தியுள்ளது. ஆனால், இப்போது வரையிலும் இந்த விடயத்தில் அரசு மௌனக் கொள்கையைப் பின்பற்றி வருகின்றது. ஒரு வெளிநாட்டு தூதரகத்தின் வலியுறுத்தலுக்குக் கட்டுப்பட்டே அரசு இவ்வாறு செயற்பட்டு வருகின்றது எனக் கூறப்படுகின்றது. எனவே, இந்தச் செய்தியின் உண்மைத்தன்மையை நன்கு ஆராய்ந்து அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வேதியல் அணு மூலக்கூறுகள் எமது நாட்டுக்குள் கொண்டுவருவது என்பது பெரும் அச்சுறுத்தலாகும். எனவே, அரசு உடனடியாக இதனை ஆராய்ந்து உண்மை பொய்த்தமைகளை ஆராய்ந்து உண்மையென்றால், உடனடியாக கப்பலை வெளியேற்ற வேண்டும் அல்லது இலங்கைக் கடற்படையைக் கொண்டு ஆராய அனுமதிக்க வேண்டும்" என்றார்.

அதேபோல் எதிர்க்கட்சி உறுப்பினர் ஹர்ஷன ராஜகருணா ஒழுங்குப் பிரச்சினை எழுப்பி சீனத் தூதரக அறிவித்தல் தொடர்பில் கேள்வி எழுப்பினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

"நாடாளுமன்றத்திலிருந்து எமது அலைபேசிக்கு குறுந்தகவல் (எஸ்.எம்.எஸ்.) ஒன்று அனுப்பப்பட்டுள்ளது. அதனை உங்களின் கவனத்துக்குக் கொண்டுவர விரும்புகின்றேன்.

கொழும்புத் துறைமுக நகர் கற்கை விஜயம் ஒன்றை சீனத் தூதரகம் ஏற்பாடு செய்துள்ளது எனவும், நாளைமறுதினம் (நாளை) வெள்ளிக்கிழமை இந்த விஜயம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது எனவும் குறித்த குறுந்தகவலில் கூறப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர் எமது ஆட்சியிலும் இவ்வாறு ஏற்பாடு செய்யப்பட்டபோதும் நகர அபிவிருத்தி அதிகார சபையே ஏற்பாடு செய்திருந்தது. ஆனால், எமது நாட்டின் நிலப்பரப்பில் விஜயம் செய்ய சீனத் தூதரகம் எவ்வாறு ஏற்பாடுகள் செய்ய முடியும்?" என்று கேள்வி எழுப்பினார்.

இதனைக் கைவிடுமாறு அமைச்சர் தினேஷ் குணவர்த்தன சபையில் தெரிவித்த வேளையில், குறித்த குறுஞ்செய்தி தொடர்பில் தான் ஆராய்ந்து பார்க்கின்றேன் என்று சபாநாயகர் அறிவித்தார். (து-22)

## கல்வியங்காட்டில் வெடிச்சத்தம்: ஓடிச்சென்ற இராணுவம்

யாழ்ப்பாணம் -கல்வியங்காடு பகுதியில் நேற்றிரவு 7.30 மணியளவில் வெடிச்சத்தம் கேட்டதால் சம்பவ இடத்துக்கு இராணுவத்தினர் விரைந்தனர்.

அங்குசென்ற பின்னரே, கல்வியங்காடு வீரபத்திரர் கோவில் மஞ்சத் திருவிழா நடைபெறுவதால் அங்கு வாண வேடிக்கைகள் நடைபெற்றுக்கொண்டிருந்தன என்பதை அவர்கள் . அறிந்து கொண்டனர்.

ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் நிகழ்ந்து 2 ஆம் ஆண்டு நினைவு நாள் நேற்று என்பதால், வெடிச்சத்தத்தை அடுத்து சந்தேகம் எழுந்ததால் அங்கு விரைந்தோம் என்று இராணுவத்தினர் கூறிச் சென்றனர். (து-27)

## மருதனார்மடம் விபத்தில் ஒருவர் காயம்

யாழ்ப்பாணம், ஏப். 22

கோப்பாய் மருதனார்மடம் வீதியில் நேற்று இடம்பெற்ற வாகன விபத்தில் மோட்டார் சைக்கிளைச் செலுத்தி வந்தவர் காயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (து-20)

# சீனா மூலமாக இந்தியாவை அச்சுறுத்துகின்றது இலங்கை!

## சாடுகின்றார் சுரேஸ் பிரேமசந்திரன்

யாழ்ப்பாணம், ஏப். 22

கொழும்புத் துறைமுக நகரத்தையும் அதன் நிர்வாகத்தையும் சீனாவிடம் ஒப்படைப்பதானது இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலானது. இந்தியாவின் பாதுகாப்பை கேள்விக்குட்படுத்தும் வகையிலேயே இந்த அரசு செயற்படுகின்றது.

இவ்வாறு ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான க.சுரேஸ் பிரேமசந்திரன் தெரிவித்தார்.

கொழும்புத் துறைமுக நகரத்துக்கான பொருளாதார ஆணைக்குழுவை உருவாக்கும் சட்டவரைவு தொடர்பில் கேட்டபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கொழும்புத்துறைமுக நகரத்தின் நிலப் பகுதியின் நிர்வாகம் இலங்கை அரசுக்கு உட்பட்டதல்ல என்றால் அதனை எப்படிச் சொல்லுவது? அதனை நிர்வகிக்க 7 பேரை ஜனாதிபதி நியமிக்கப் போகின்றாராம். தனித்துத் தீர்மானம் இயற்றப் போகின்றாராம். அவ்வாறு நியமிக்கப்படவுள்ளவர்கள் இலங்கையர்களா என்று கேட்டால் இல்லை. அங்கிருந்து பொருள்களைக் கொண்டுசெல்ல வரி விதிக்கப்படுமாம். அந்த வரி எந்த நாட்டுக்கு வருமானமாகச் செல்லவுள்ளது? அந்தத் துறைமுக நகரத்துக்கான பொருள்கள் உள்ளிட்டவை எப்படி வரப்போகின்றன?

இலங்கையின் நீதி, நிர்வாக கட்டமைப்புக்குள் வராத ஒரு பிரதேசத்தை அல்லது தனி நாட்டை உருவாக்கும் சட்டவரைவை ஆளும் கட்சியினராகட்டும், எதிர்க்கட்சியினராகட்டும் எப்படி ஏற்றுக்கொள்ளப்போகின்றனர். சீனாவின் ஆளுகைக்குள் அம்பாந்தோட்டை துறைமுகம் கொடுக்கப்பட்டாயிற்று. கொழும்புத் துறைமுகத்தின் ஒரு முனையமும் வழங்கப்பட்டாயிற்று. இப்போது கொழும்புத்துறைமுக நகரம் முழுவதுமாய் சீனா வசமாகின்றது. இவை எல்லாம் இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலான விடயங்களே. இது இலங்கைக்கு உகந்ததல்ல. இந்தியாவைப் பகைத்துக்கொண்டு அதன் பாதுகாப்பை கேள்விக்குட்படுத்திக்கொண்டு இந்தப் பிராந்தியத்தில் இலங்கையால் செயலாற்ற முடியாது. இந்தியாவின் பாதுகாப்புக்கு இலங்கை என்ன பதில் சொல்லப் போகின்றது? என்று அவர் கேள்வி எழுப்பினார். (ஒ.5)

## முகக்கவசம் அணியாதமையால் 45 பேருக்கு கட்டாய பி.சி.ஆர்.

கிளிநொச்சி, ஏப்.22

பளை நகரில் முகக்கவசம் அணியாது நடமாடினர் என்று கூறப்படும் 45 பேருக்கு, நேற்று பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

புதுவருட தினத்துக்குப் பின்னர் நாட்டில் கொவிட்-19 தொற்று அதிகரித்துள்ளது. அதேவேளை, முகக்கவசம் அணிகின்றமையும் வீழ்ச்சியடைந்துள்ளது. இது ஆபத்தானது என்று சுகாதாரத் துறையினர் எச்சரித்துவரும் நிலையில் முகக்கவசம் அணியாது நடமாடியுள்ளனர்

இந்த நிலையில், பளை பிராந்திய சுகாதாரப் பிரிவினரும் பளை பொலிஸாரும் இணைந்து பளை நகரில் நேற்று முகக்கவசம் அணியாது நடமாடிய 45 பேரிடம் எழுமாற்றாக மாதிரிகளைப் பெற்றுக் கொண்டனர்.

பளை, உடையார்கட்டு, விசுவமடு மற்றும் வவுனியா ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 45 பேரே முகக்கவசம் அணியாது நடமாடினர் என்று பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர். (து-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோக மயமானது சீயோன் தேவாலயம்

## மக்கள் கூடி அஞ்சலி

மட்டக்களப்பு,ஏப்.22

**ஈஸ்டர் நாளன்று நாட்டில் நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலில், அதிகளவானோர் கொல்லப்பட்ட மட்டக்களப்பு சீயோன் தேவாலயத்தில் நேற்று விசேட வழிபாடுகள் நடத்தப்பட்டன. அதிகளவான மக்கள் ஒன்றுகூடி தமது உறவுகளுக்கு அஞ்சலி செலுத்தினர்.**

இலங்கையை உலுக்கிய உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் நடைபெற்று நேற்றுடன் இரண்டு வருடங்கள் நிறைவடைந்தன. தாக்குதலுக்குள்ளான தேவாலயத்தில், தாக்குதலுக்குப் பின்னர் முதன்முறையாக நேற்று விசேட வழிபாடுகள் நடத்தப்பட்டன. பலத்த பாதுகாப்புடன், தாக்குதலில் உயிரிழந்தவர்களின் உறவினர்



கள் வழிபாட்டில் கலந்து கொண்டனர். சீயோன் தேவாலயத்தின் பிரதம போதகர் ரொசான் மகேசன் தலைமையில் வழிபாடுகள் முன்னெடுக்கப்பட்டன.

தாக்குதலில் கொல்லப்பட்டவர்களின் ஆத்மா சாந்தியடையவும், தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்கள் அந்தச் சம்பவத்தின் அதிர்ச்சியிலிருந்து மீட்சிபெறவும் வழிபாடுகள் முன்னெடுக்கப்பட்டன. சீயோன் தேவாலயத்தின் மீதான தாக்குதலில் 31பேர் உயிரிழந்தனர். 80 க்கும் அதிகமானோர் படுகாயமடைந்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ப-4,150)



# உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்; மீண்டும் விசாரணை நடத்துக

## கத்தோலிக்க மக்கள் அமைப்புக்களின் கூட்டணி கோரிக்கை

கொழும்பு,ஏப்.22

நாட்டில் உயிர்த்த ஞாயிறன்று நடத்தப்பட்ட தாக்குதல் தொடர்பில் மீண்டும் விசாரணையை நடத்துவதற்கு, ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு அதிகாரத்தை வழங்க வேண்டும் என்று கத்தோலிக்க மக்கள் அமைப்புக்களின் கூட்டணி கோரிக்கை விடுத்துள்ளது. இது தொடர்பில் கத்தோலிக்க மக்கள் அமைப்புக்களின் கூட்டணியின் ஏற்பாட்டாளர் திலின அளஹகோன் தெரிவித்ததாவது.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பாக கடந்த நல்லாட்சி அரசின் காலத்தில் நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவால் வெளியிடப்பட்ட அறிக்கை முழுமையானதும், பூரணமானதும் என நாம் ஏற்றுக் கொள்ளவில்லை. வெளியிடப்பட்ட அறிக்கையில் பல குறைகள் காணப்படுகின்றன. சில விடயங்கள் தொடர்பில் ஆராயப்படவில்லை. இந்தத் தாக்குதலில் தொடர்புடைய சிலரைத் தப்பிக்க விட்டுள்ளனர்

இந்த தாக்குதலுக்குப் பின்புலமாக அரசியல்வாதிகள், தொழிலதிபர்கள்,மதத் தலைவர்கள் மற்றும் மத அடிப்படைவாதிகள் என்று பல்வேறு தரப்பினர் சம்பந்தப்பட்டுள்ளனர். அவ்வாறானவர்களைச் சட்டத்திலிருந்து தப்பிக்க விடாது உயிரிழந்தவர்கள் மற்றும் பாதிக்கப்பட்டவர்களுக்கு அரசு நியாயமான தீர்ப்பொன்றைப் பெற்றுக்கொடுக்க வேண்டும். தாக்குதலுடன் தொடர்புடையவர்களை இரண்டே மாதங்களில் கண்டுபிடித்து தண்டனை வழங்குவோம் எனக் கூறி ஆட்சிப்பீடமேறினார் ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ச. ஆனால் 2 வருடங்கள் கடந்த நிலையிலும் தொடர்புடையவர்களைக் கண்டுபிடித்து, சட்டத்தின் முன்நிறுத்த முடியாமல் போயுள்ளது. குற்றவாளிகள் தண்டிக்கப்படவில்லை. பாதிக்கப்பட்டவர்களுக்கு நியாயம் வழங்கப்படவில்லை. என்றார். (ப-4)



# 5 புத்தர் சிலைகள் சேதம்; 16 பேருக்கு எதிராக வழக்கு

கொழும்பு,ஏப்.22

மாவனெலை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில் 5 புத்தர் சிலைகளை சேதப்படுத்தினர் என்ற குற்றச்சாட்டில், 16 பேருக்கு எதிராக, கேகாலை மேல் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலின் பின்னர் கைதுசெய்யப்பட்ட சஹ்ரானின் நெருங்கிய சகாவும், தேசிய தௌஹீத் ஜமாஅத்தின் சிரேஷ்ட தலைவருமான நௌபர் மௌலவி, புத்தர் சிலை உடைப்பை அடுத்து கைது செய்யப்பட்ட இப்ராஹீம் மௌலவி அவரது மகன்மார் இருவர் உள்ளிட்ட 16 பேருக்கு எதிராகவே வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1979 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ், இரு சமூகங்களிடையே மோதலை உருவாக்கச் சதித் திட்டம் தீட்டியமை, 5 புத்தர் சிலைகலை தகர்த்தமை,சமூகங்களுக்கிடையே வெறுப்புணர்வைத் தூண்டியமை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்கள் பிரதிவாதிகளுக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ளன.

இந்த வழக்கை விசாரணை செய்வதற்கு, சிறப்பு ட்ரயல் அட்பார் நீதிமன்றம் ஒன்றை அமைக்குமாறு சட்ட மா அதிபர் தப்புல டி லிவேரா, பிரதம நீதியரசரிடம் கோரிக்கை விடுத்துள்ளார். (ப-4)

# கறுப்பு உடையுடன் ஐ.ம.சக்தி அஞ்சலி

கொழும்பு,ஏப்.22

ஏப்ரல் 21உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலில் உயிரிழந்தவர்களை நினைவுகூர்ந்து, ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் உறுப்பினர்கள் கறுப்பு உடை அணிந்து இரண்டு நிமிடங்கள் மௌன அஞ்சலி செலுத்தினர். கட்சியின் தலைவர் சஜித் பிரேமதாச தலைமையில் ஒன்று கூடிய உறுப்பினர்கள், நேற்றுக் காலை 8.45 மணியளவில் அஞ்சலி செலுத்தினர்.

உயிர்த்த ஞாயிறு தினத்தன்று கத்தோலிக்க தேவாலயங்கள், நட்சத்திர ஹொட்டல்கள் ஆகியவற்றை இலக்கு வைத்து தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. தாக்குதல்கள் நடத்தப்பட்டு நேற்றுடன் இரண்டு ஆண்டுகள் நிறைவடைவதை முன்னிட்டு, நாட்டில் பல இடங்களிலும் அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ப-4)

# முஸ்லிம் அரசியல்வாதிகள் சிலருக்கு இரண்டு முகங்கள்

## கலையரசன் எம்.பி.தெரிவிப்பு

அம்பாறை,ஏப்.22

தமிழ் பேசும் உறவுகளாக இருக்கின்ற முஸ்லிம் அரசியல்வாதிகள், எமக்கு ஒரு முகத்தையும், அரசுக்கு இன்னொரு முகத்தையும் காட்டும் செயற்பாடுகளையே மேற்கொள்கின்றனர். கடந்த காலங்களிலும் ஜனநாயக ரீதியான விடயங்களை முன்னெடுக்க வேண்டும் என்று எம்மிடம் தெரிவித்து விட்டு, அதற்கு மாறாக அரசுடன் இணைந்த பல சம்பவங்களே இடம் பெற்றுள்ளன. இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அம்பாறை மாவட்டப் நாடாளுமன்ற உறுப்பினர் த.கலையரசன் தெரிவித்தார்.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் திருக்கோவில் பிரதேசக் கிளை புனரமைப்புத் தொடர்பான கலந்துரையாடலில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது.

தமிழ் பேசும் இனம் என்ற அடிப்படையில் ஒன்றாகச் செயற்பட வேண்டும் என்று நாங்கள் சிந்தித்தாலும், முஸ்லிம் அரசியல்வாதிகள் சிலர் அவ்வாறு சிந்திப்பதில்லை. இந்த நாட்டில் ஜனநாயகத்தை நிலைநிறுத்த வேண்டுமாயின், ஜனநாயக ரீதியான அரசியலைப் பலப்படுத்த வேண்டும். தற்போது மிகவும் மோசமானதொரு அடக்கு முறையை எமது தமிழ்ச் சமூகம் சந்தித்துக் கொண்டிருக்கின்றது. நாங்கள் இறைவழிபாட்டைக் கூட சுதந்திரமாக மேற்கொள்ள முடியாத ஒருநிலைமை இந்த நாட்டிலே நிலவுகின்றது. இந்து ஆலயம் அமைப்பதென்றால் பல இழுத்தடிப்புகளும், பௌத்த ஆலயம் அமைப்பதென்றால் உடனடி நடைமுறைகளுமே இங்கு இடம்பெறுகின்றன. நாங்கள் வடக்கு, கிழக்கு என்ற ரீதியில் மாத்திரமல்லாமல் இலங்கையில் வாழும் அனைத்து தமிழ் பேசும் மக்களுக்குமான ஒரு தீர்வை வேண்டி நிற்கின்றோம். கிழக்கில் இருக்கின்ற ஒரு சில முஸ்லிம் அரசியல்வாதிகள் தங்களுடைய சுய நலன்களுக்காக எமது சமூகத்தில் இருக்கின்ற சில அதிகாரங்களை இல்லாமல் செய்வதற்காக இப்போதும் முனைப்பான முயற்சிகளை மேற்கொள்கின்றனர். இதனால் எதிர்காலத்தில் தமிழ் முஸ்லிம் சமூகங்கள் மத்தியில் ஒரு ஒற்றுமையை ஏற்படுத்த முடியாத நிலைமையே ஏற்படும்- என்றார். (ப-4)

# 8 நாள்களில் 75 பேர் சாவு

கொழும்பு,ஏப்.22

கடந்த 8 நாள்களில் வீதி விபத்துக்களால் 75 பேர் உயிரிழந்துள்ளனர். சுமார் ஆயிரம் பேர் காயமடைந்துள்ளனர் என்று பிரதிப்பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தனர்.

கடந்த 13 ஆம் திகதி தொடக்கம் நேற்றுக் காலை வரை பதிவான வீதி விபத்துக்களிலேயே 75 பேர் உயிரிழந்துள்ளனர். இதேவேளை மதுபோதை மற்றும் பொறுப்பற்ற ரீதியில் வாகனம் செலுத்துவோரை அடையாளம் காண்பதற்கு, பொலிஸார் சிறப்புச் சோதனை நடவடிக்கைகளில் தொடர்ச்சியாக ஈடுபட்டுள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார். (ப-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## பாடம் படிக்கும் பேரினம்

தென்கிழக்கு ஆசிய நாடு மியான்மர். அங்கு இராணுவ ஆட்சி கோலோச்சியுள்ளது. சில காலங்களுக்கு முன்னர் ரோஹிங்கிய முஸ்லிம்கள் அந்த நாட்டு இராணுவத்தினரால் இனவழிப்புச் செய்யப்பட்டனர். அவர்கள் சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டு கொல்லப்பட்டு நாட்டில் வாழவே முடியாத நிலைக்குத் தள்ளிச் செல்லப்பட்டனர். இவற்றைச் செய்தது அந்த நாட்டு இராணுவம். ஆங்சாங்சூகியின் அரசின் காலத்திலேயே இராணுவம் இதனைச் செய்தது. அந்த நாட்டு மக்களோ, அரசோ இராணுவம் செய்வதை வேடிக்கை பார்த்தபடியே கடந்து சென்றனர். கால ஓட்டத்தில் அந்த நாட்டின் ஆட்சிப் பீடத்தைக் கைப் பற்றியுள்ளது இராணுவம். இராணுவ ஆட்சிக்கு எதிராகப் போராடுபவர்கள் கொல்லப்படுகின்றனர். பல நூற்றுக் கணக்கானோர் இதுவரை இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளனர். அன்று ரோஹிஞ்சிய முஸ்லிம்களுக்கு எதிராக மியான்மர் இராணுவத்தின் எதேச்சாதிகாரப் போக்கை, கண்டும் காணாமலும் விட்டதன் பலனை அந்த நாட்டு மக்கள் இப்போது அனுபவிக்கின்றனர்.

ஆசியாவின் அதிசயம் என்று தனக்கு தானே மகுடம் சூட்டிக் கொள்ளும் இலங்கையும், அந்த நாட்டின் பெரும்பான்மையினரான பௌத்த சிங்களவர்களும் இப்போதாவது மியான்மரிடமிருந்து பாடத்தைக் கற்றுக்கொள்ள வேண்டும்.

காலம் திரும்பத் தொடங்கியிருக்கின்றது என்பதற்கு ஆகப் பிந்திய சான்றாக அமைந்திருக்கின்றது மே தினக் கொண்டாட்டத் தடை.

கொரோனாவைக் காரணம் காண்பித்து மே தினக் கொண்டாட்டத்துக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. அரசின் பங்காளிகளுக்கு இடையேயான மோதல் உச்சத்தைத் தொட்டுள்ள நிலையில், அவை ஒவ்வொன்றும் தனித்து மே தினத்தை நடத்த எத்தனித்ததன் சூழலில் இந்தத் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அரசியல் காரணங்களை ஈடேற்றிக் கொள்ள 'கொரோனாக் கவசத்தை' தென்னிலங்கைச் சக்திகளுக்கு எதிராக சிறிலங்காவின் பௌத்த - சிங்கள அரசு முதன் முதலில் பயன்படுத்திக் கொண்டுள்ளது.

கடந்த ஆண்டு மே மாதம் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல், தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல், அதற்கான உணவு தவிர்ப்புப் போராட்டம், மாவீரர் நாள் நிகழ்வு, பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலான பேரணி என்று பலவற்றுக்கு 'கொரோனாக் கவசத்தை' பயன்படுத்தியே சிறிலங்காவின் பௌத்த - சிங்கள அரசின் முகவர்களான பொலிஸார் தடைகளைத் தமிழர் தாயகத்தில் பெற்றனர்.

அப்போது தமிழ் மக்கள் தங்கள் உரிமைகளை கொரோனாவைக் காரணம் காட்டிப் பறிக்கும் அரசின் செயலுக்கு எதிராக வெஞ்சினம் கொண்டு கொதித்தபோது, தென்னிலங்கைச் சிங்கள தேசமும், அரசின் பங்காளிகளும் அரசுடன் கூடவிருந்து எக்காளமிட்டனர். தமிழர்களை அடக்கிவிட்டோம், அவர்களின் உரிமைகளை மறுத்துவிட்டோம் என்ற திமிரில் இருந்தனர்.

ஆனால் இப்போது அதே 'கொரோனாக் கவசத்தை' தென்னிலங்கைக்கு எதிராக, அரசின் பங்காளிகளுக்கு எதிராகவே திருப்பியுள்ளனர் ராஜபக்சவினர். தமக்கு எதிராகத் திமிறினால் - திரும்பினால் எதுவும் செய்வோம் என்பதைப் பங்காளிகளுக்கு முரசறைந்துள்ளனர்.

2011ஆம் ஆண்டு கட்டுநாயக்கா சுதந்திர வர்த்தக வலயத்தில், ஜனநாயக வழியில் தமது உரிமைக்காக போராடிய மீனவர் ஒருவர் சிறிலங்காப் படைகளால் சுட்டுக்கொல்லப்பட்டிருந்தார். அதேபோன்று 2013ஆம் ஆண்டு ரதுபஸ்வெல பிரதேசத்தில் சுத்தமான குடிதண்ணீர் கேட்டுப் போராடிய 14 வயது பாடசாலை மாணவன் உள்ளிட்ட 3 பேர் இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டிருந்தனர். அதுவரை தமிழர்களுக்கு எதிராகவே துப்பாக்கிச் சுடுகலன்களை இயக்கிக் கொண்டிருந்த இராணுவம், சிங்கள தேசத்தில் சிங்களவர்களுக்கு எதிராகவும் அவற்றைப் பாவித்தது. தமிழர்கள் ஒடுக்கப்பட்டபோது அதனை ரசித்த சிங்களவர்கள், தமக்கு எதிராகவே சிங்கள இராணுவம் திரும்பிய போதுதான் விழித்துக் கொண்டார்கள். ஆட்சி மாற்றத்துக்கு விரும்பினார்கள். கால ஓட்டம் எல்லாவற்றையும் மறக்கச் செய்து விட்டது.

இப்போதும் வரலாறு மீளத் திரும்புகின்றது என்பதைச் சிங்கள தேசம் இனியாவது உணர்ந்துகொள்ள வேண்டும்.

அநீதி தனக்கு நடந்தாலும் பிறருக்கு நடந்தாலும் [illegible] கொடுக்கவேண்டும். இதைச் சிங்கள தேசம் புரிந்து கொள்ள வேண்டும்.



# தாக்குதலுக்கு காரணமானோர் நீதியின்முன் நிறுத்தப்படுவார்கள்

## மஹிந்த உறுதி



**கொழும்பு, ஏப். 22**

**ஈஸ்டர் கொடூரத் தாக்குதலுக்கு காரணமான அனைவரும் நீதியின்முன் நிறுத்தப்படுவார்கள் என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ச தெரிவித்தார்.**

நாடாளுமன்றம் நேற்றுக் கூடியதும் ஈஸ்டர் தாக்குதலுக்கு ஒரு நிமிடம் அஞ்சலி செலுத்தப்பட்டது. இதன் பின்னர் நாடாளுமன்றில் நேற்று விசேட அறிவிப்பொன்றை விடுத்து உரையாற்றுகையிலேயே பிரதமர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான விசாரணை ஆணைக்குழுவால் வெளிப்படுத்தப்பட்ட தகவல்களுக்கமைய தயாரிக்கப்பட்ட அறிக்கை மற்றும் பிற ஆவணங்களை அடிப்படையாகக்கொண்டு சட்ட நடவடிக்கை மேற்கொள்ள சட்டமா அதிபருக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

நீதிமன்ற நடவடிக்கைகளின் ஊடாக இவ்விடயத்தில் நாம் தலையீடு செய்யாவிடினும், அச்செயற்பாட்டை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்வதற்கான அனைத்து ஒத்துழைப்பையும் நல்குவதற்கு அரசு என்ற ரீதியில் தயாராக இருப்பதை குறிப்பிட விரும்புகிறேன்.

அத்துடன் ஆணைக்குழுவுக்கு மேலதிகமாகச் செயற்படும் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் மற்றும் பயங்கரவாத விசாரணைப் பிரிவு ஆகியவற்றின் விசாரணைகளை சுயாதீனமான முறையில் முன்னெடுப்பதற்குத் தேவையான வசதிகளை ஜனாதிபதி ஏற்படுத்திக் கொடுத்துள்ளார். அவ்விசாரணைகளின் இறுதியில் அந்தந்த திணைக்களங்களின் ஊடாக நீதிமன்ற நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று நாம் நம்புகின்றோம்.

கடந்த அரசால் குற்றங்கள் அலட்சியம் செய்யப்பட்டமையாலும், தேசிய பாதுகாப்பையும், தமது அரசியல் நடவடிக்கைகளையும் குழப்பிக் கொண்டமையாலும் இறுதியில் பாதிக்கப்பட்டது அப்பாவி பொதுமக்களே ஆகும்.

இன்றும், தாக்குதலுக்குக் காரணமான தரப்புகள் பல்வேறு பொய்களை சமூகத்தில் பரப்பி, விசாரணைகளில் செல்வாக்குச் செலுத்துவதன் மூலம் சமூக கவனத்தை திசை திருப்பும் வகையில் செயற்பட்டு வருகின்றன. நாம் அவர்கள் குறித்து வருந்துகின்றோம். மேலும், உயிரிழந்த அனைவரையும் நினைவுகூரும் அதே வேளை, இதுபோன்ற துரதிர்ஷ்டவசமான சூழ்நிலை இனி எப்போதும் ஏற்படாது தடுக்க ஒரு அரசு என்ற ரீதியில் நாங்கள் நடவடிக்கை எடுத்து வருகின்றோம்.

அத்துடன், இந்த கொடூரத் தாக்குதலுக்கு காரணமான அனைவரையும் நீதியின் முன் நிறுத்த நாம் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றோம் என்றும் கூறிக்கொள்ள விரும்புகின்றேன், என்றார்.

(ஒ.44)

# பரீட்சையில் சித்தியடையாதோருக்கு முறைகேடாக மருத்துவர் நியமனம்

## மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவிப்பு

கொழும்பு.ஏப்.22

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் மூன்று பாடங்களில் சித்தி பெறாதவர்கள் மாத்திரமின்றி, பரீட்சையில் தோற்றாத நபர்களும், இலங்கை மருத்துவ சபை ஊடாக மருத்துவர்களாகப் பணியாற்றுகின்றமை அவதானிக்கப்பட்டுள்ளது என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் சுட்டிக் காட்டியுள்ளது.

இது தொடர்பில் விசாரணை மேற்கொள்ளுமாறு கோரி பொலிஸ்மா அதிபரிடம் முறைப்பாடு பதிவு செய்வதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இலங்கை மருத்துவ சபையின் வெளிநாட்டு பட்டதாரி நிறுவகம் தொடர்பான ஆவணங்கள் மறைக்கப்பட்டுள்ளன என்றும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது. (ப-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டமா அதிபரின் ஆலோசனை பெற்றுத்தான் பொலிஸார் வழக்குத் தாக்கல் செய்யவேண்டும்

## வலி.கிழக்குத் தவிசாளர் மீதான வழக்கில் நீதிமன்று தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 22
வலி. கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தொல்லியல் திணைக்களத்தின் அரச கருமங்களுக்குத் தடை ஏற்படுத்தினார் என குற்றஞ்சாட்டப்பட்ட வழக்கில், சட்டமா அதிபரின் ஆலோசனையைப் பெற்றே பொலிஸார் வழக்குத் தாக்கல் செய்ய வேண்டும் என்று மல்லாகம் நீதிமன்று பொலிஸாருக்கு அறிவுறுத்தியது. அதுமட்டுமன்றி, தவிசாளரை ஒரு லட்சம் ரூபா சொந்தப் பிணையில் செல்லவும் நீதிமன்று அனுமதித்தது.

தொல்லியல் திணைக்களம் நிலாவரையில் மேற்கொள்ளவிருந்த நடவடிக்கைக்கு தவிசாளர் தடை ஏற்படுத்தினார் என்றும், இதன் மூலம் அரச கருமத்துக்குத் தடை ஏற்படுத்தினார் என்றும் குற்றம்சாட்டி தொல்லியல் திணைக்களத்தின் முறைப்பாட்டுக்கமைய அச்சுவேலி பொலிஸார் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.

இந்த வழக்கு மல்லாகம் நீதிமன்றில் நீதிபதி ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

தவிசாளர் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி வி.திருக்குமரன் தலைமையிலான சட்டத்தரணிகள் முன்னிலையாகினர். அவர்கள் தொல்லியல் திணைக்களத்தின் வர்த்தமானியில் நிலாவரைக் கிணறு என்றே அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. குறித்த கிணற்றுக்கு சற்றுத் தொலைவிலிருந்தே தொல்லியல் திணைக்களத்தின் வேலை இடம்பெற்றுள்ளது. பிரதேச சபை தொடர்சியாக குறித்த இடத்தை அரச பெறுகை கேள்விக்கோரல் நடைமுறைகளின் பிரகாரம் குத்தகைக்கு வழங்கி வந்துள்ளது. பொலிஸார் தாக்கல் செய்துள்ள குற்றவியல் சட்டக்கோவை சரத்தின் பிரகாரம் சட்டமா அதிபரிடம் ஆலோசனை பெற்றே மேற்படி வழக்கின் குற்றப்பத்திரத்தைத் தாக்கல் செய்திருக்க வேண்டும்.

நிலாவரையில் பிரதேச சபை பல முதலீடுகளைச் செய்துள்ளது. தொல்லியல் திணைக்களத்துக்குப் பொறுப்பான அமைச்சர்கூட, மாவட்ட அபிவிருத்திக் குழுவின் அனுமதி பெற்றே தொல்லியல் திணைக்களம் செயற்படும் என உத்தரவாதமளித்துள்ளார். ஆனால் இங்கு பிரதேச சபை ஒன்றின் தவிசாளர் என்ன நடக்கிறது என்ற விவரத்தைக் கேட்டால் அரச கருமத்துக்குத் தடை ஏற்படுத்தினார் என்கின்றனர்.

மக்களால் தெரிவுசெய்யப்பட்ட பிரதேச சபையின் தலைவர் என்ற வகையில் தவிசாளர் அங்கு என்ன நடக்கின்றது எனக் கேள்வி எழுப்பியமையை அரச கடமைக்கு தடை ஏற்படுத்தப்பட்டது எனக் கருதமுடியாது. நிர்வாக ரீதியாக இரு அரச நிறுவனங்களுக்கு இடையே எழும் பிரச்சினையை குற்றவியல் சட்டக்கோவையின் பிரகாரம் அணுகமுடியாது. எனவே, இந்த வழக்கைத் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று வாதிடப்பட்டது.

தனியாராக இருந்தாலென்ன அரச ஸ்தாபனமாக இருந்தாலென்ன பிரதேச சபையின் அனுமதி பெற்றே எந்தக் கட்டுமானத்தையும் செய்ய முடியும் என்றும் சட்டத்தரணிகள் சுட்டிக்காட்டினர்.

தொல்லியல் திணைக்களத்தின் முறைப்பாட்டின் அடிப்படையில் வழக்குத் தாக்கல்செய்த அச்சுவேலிப் பொலிஸார், தாம் இவ்வரை முதலாவது எதிராளியாகக் கொண்டு மேலும் பலருக்கு எதிராக இந்த விடயத்தில் நடவடிக்கை எடுக்கவுள்ளோம் என்று மன்றில் தெரிவித்தனர்.

இருதரப்பு வாதங்களையும் பரிசீலித்த நீதிபதி, பொலிஸார் தாக்கல் செய்துள்ள குற்றவியல் சட்டக்கோவை சரத்தின் பிரகாரம் வலி.கிழக்கு பிரதேச சபைத் தவிசாளரை விசாரிப்பதற்கு சட்டமா அதிபரின் ஆலோசனை பெறப்பட்டது என எங்கும் வெளிப்படுத்தப்படவில்லை. அத்துடன் தொல்லியல் திணைக்களத்தின் வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் கிணறு என்றே அடையாளப்படுத்தப்பட்டுள்ளது என்று தெரிவித்த நீதிபதி, இந்த வழக்கை நடத்துவதாயின் சட்டமா அதிபரின் ஆலோசனை பெற்று வழக்கைத் தொடருங்கள் என்று பொலிஸாருக்கு அறிவுறுத்தினார். (த-26)

# கைதடி பிள்ளையாருக்கு நாளை வேட்டை

கைதடி வீரகத்திப் பிள்ளையார் கோவில் பெருந்திருவிழாவின் வேட்டைத் திருவிழா நாளை வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

கோவிலில் 12 நாள்கள் பெருந்திருவிழா கடந்த வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. அதன்படி நாளைமறுதினம் சனிக்கிழமை சப்பறத் திருவிழாவும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை தேர்த்திருவிழாவும் எதிர்வரும் திங்கட்கிழமை தீர்த்தத் திருவிழாவும் மறுநாள் செவ்வாய்க்கிழமை பிராயச்சித்த அபிஷேகமும் வைரவர் சுவாமி ஆராதனையும் நடைபெறும். (த-159)

# மணல் ஏற்றிச் சென்ற ரைக்ரர் மீது இராணுவத்தினர் துப்பாக்கிச் சூடு

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பாலாவி பகுதியில் சட்டவிரோதமாக மணல் ஏற்றிச்சென்றதாகக் கூறப்படும் உழவு இயந்திரத்தை நோக்கி இராணுவத்தினர் துப்பாக்கிச்சூடு நடத்தினர் என்று தெரிவிக்கப்பட்டது. அதனால் உழவு இயந்திரத்தின் ஒரு சில்லு காற்றுப் போய்விட்டதால், அதைக் கைவிட்டு மணல் ஏற்றிச் சென்றவர்கள் தப்பிச் சென்றுவிட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பில் கொடிகாமம் பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (த-159)

## முதலாம் பக்கத் தொடர்ச்சி

### யூனியன் கல்லூரிக்கு ...

அத்துடன், அமைதிக்கு பங்கம் விளைவித்தனர் என குற்றஞ்சாட்டப்பட்ட அமெரிக்க மிஷனின் அருட்தந்தையர்கள் இருவரை தலா 5 லட்சம் பெறுமதியான பிணை முறியில் விடுவித்த நீதிமன்று, அவர்கள் இருவரும் 6 மாதகாலத்துக்குள் அமைதிக்கு பங்கம் விளைவித்தால் பிணை முறிக்கான பணத்தைச் செலுத்த வேண்டும் எனவும் உத்தரவிட்டது.

கல்லூரியின் மாணவர்களுக்கான உணவுத் திட்ட சமையல் பகுதி மற்றும் துவிச்சக்கர வண்டித் தரிப்பிடம் அமைந்துள்ள காணி யாருக்கு சொந்தம் என கல்லூரி நிர்வாகத்துக்கும் அமெரிக்க மிஷனுக்கும் இடையில் பிரச்சினை எழுந்தது.

தமக்கே சொந்தம் என சட்ட ரீதியான ஆவணங்களை கல்லூரி நிர்வாகத்தினர் வைத்துள்ளனர். அத்துடன் அமெரிக்க மிஷனின் அத்துமீறல்கள் தொடர்பில் தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடும் செய்யப்பட்டது.

இந்தநிலையில் கடந்த 9ஆம் திகதி கல்லூரி மாணவர்கள் துவிச்சக்கர வண்டிகளை நிறுத்தும் இடம் தமது சபைக்கு சொந்தமான காணி எனவும் அங்கு துவிச்சக்கர வண்டிகளை நிறுத்த வேண்டாம் எனவும் கூறி, மாணவர்களுடன் முரண்பட்டு மாணவர்கள்மீது அமெரிக்க மிஷனைச் சேர்ந்த சிலர் தாக்குதல்களையும் மேற்கொண்டனர்.

அதனையடுத்து அமைதிக்கு பங்கம் விளைவித்தனர் என அமெரிக்க மிஷன் அருட்தந்தையர்கள் இருவருக்கு எதிராக தெல்லிப்பழை பொலிஸாரால், மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

அந்த வழக்கு நேற்று மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் அழைக்கப்பட்டது. தெல்லிப்பழை யூனியன் கல்லூரி சார்பில் மூத்த சட்டத்தரணி வி.திருக்குமரன் தலைமையில் சட்டத்தரணிகள் முன்னிலையாகினர்.

குற்றஞ்சாட்டப்பட்ட அருட்தந்தையர்கள் இருவரும் மன்றில் முற்படுத்தப்பட்டனர்.

'பாடசாலையின் மாணவர்களுக்கு உணவு வழங்கும் திட்டத்துக்குப் பயன்படுத்தப்படும் சமையல் பகுதி அமைந்துள்ள காணியில் மாணவர்களின் துவிச்சக்கர வண்டி தரிப்பிடமும் உள்ளது. அந்த ஆதனம் கல்லூரியின் பயன்பாட்டில் உள்ளமைக்கு அரச வர்த்தமானி அறிவிப்பும் உள்ளது' என்று சமர்ப்பணம் செய்த மூத்த சட்டத்தரணி வி.திருக்குமரன், ஆவணங்களை மன்றில் சமர்ப்பித்தார்.

அருட்தந்தையர்கள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணியும் தமது ஆட்சேபனையை முன்வைத்து சமர்ப்பணம் செய்தார்.

இரு தரப்பு சமர்ப்பணங்களையும் ஆராய்ந்த மல்லாகம் நீதவான் நீதிமன்றம், அமெரிக்கன் மிஷன் உரிமை கோரும் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் பராமரிப்பில் உள்ள ஆதனத்தை கல்லூரியிடம் பொறுப்பளித்து கட்டளையிட்டு வழக்கை முடிவுறுத்தியது.

அத்துடன், அமைதிக்குப் பங்கம் விளைவித்தனர் என குற்றஞ்சாட்டப்பட்ட அமெரிக்க மிஷனின் அருட்தந்தையர்கள் இருவரை தலா 5 லட்சம் பெறுமதியான பிணை முறியில் விடுவித்த நீதிமன்று, கட்டளை 6 மாதங்களுக்கு நடைமுறையில் இருக்கும் எனவும் சுட்டிக்காட்டியது. அதனால் அவர்கள் இருவரும் 6 மாத காலத்துக்குள் அமைதிக்கு பங்கம் விளைவித்தால் பிணை முறிக்கான பணத்தைச் செலுத்த வேண்டும் என உத்தரவிட்டது. (ம-26)

# மரண அறிவித்தல்

தோற்றம் 24 . 08 . 1941



மறைவு 21 . 04 . 2021

## கந்தன் செல்லத்துரை J.P

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

சரசாலையைப் பிறப்பிடமாகவும் துன்னாலை தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தன் செல்லத்துரை J.P அவர்கள் நேற்று (21.04.2021) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தன்- சின்னாச்சி தம்பதியரின் மகனும், காலஞ்சென்ற கணபதி-பாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும், தேம்பாமலரின் பாசமிகு கணவரும், செல்வநேசன் (UK), செல்வராணி (யா/புலோலி மெ.மி.த.க பாடசாலை) தேவநேசன் (UK), யுவராணி (UK) ஆகியோரின் அன்புத் தந்தையும், சகிஷ்னா (சம்பத் வங்கி), சகிஷ்மனா (ஆசிரியர்,கிளி/புனித அந்தோனியார் R.C. வித்தியாலயம்) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.04.2021) வியாழக்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, வேரூண்டை இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும் என்பதை அறியத் தருகின்றோம்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

துன்னாலை கிழக்கு,
தாமரைக் குளத்தடி, கரவெட்டி.

தகவல்:
குடும்பத்தினர்
0777 031 807

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் நீச்சல் தடாகத்தை சீரமைக்க முடிவு

யாழ்ப்பாணம்,ஏப்.22
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் நீச்சல் தடாகத்தை சீரமைத்து சிறப்பான முறையில் பயன்படுத்துவதற்கான பொறிமுறையை உருவாக்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் குறித்த விடயம் தொடர்பாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் பிரஸ்தாபிக்கப்பட்ட நிலையில், அதனை சீரமைப்பதற்கு ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோரால் இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் ஆட்சிக் காலத்தில், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் அப்போதைய வடக்கு ஆளுநர் ஜீ.ஏ. சந்திரசிறி ஆகியோரின் முயற்சியால், நாமல் ராஜபக்சவின் தலைமையில் இயங்கிய 'நாளைய இளைஞர்கள்' அமைப்பின் நிதிப் பங்களிப்பில் குறித்த நீச்சல் தடாகம் உருவாக்கப்பட்டது.

சுமார் இருபது மில்லியன் ரூபா செலவில் உருவாக்கப்பட்டு மக்கள் பாவனைக்காக 2013 ஆம் ஆண்டு கையளிக்கப்பட்ட நீச்சல் தடாகம், ஆட்சி மாற்றங்களைத் தொடர்ந்து சீராக பராமரிக்கப்படாமல் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ-இ)

## தடுப்பூசியால் பக்கவிளைவெனில் அறிவிக்கலாம்

கொழும்பு,ஏப்.22
கொவிட்19 தடுப்பூசி செலுத்திய பின்னர் ஏதேனும் பக்க விளைவுகள் ஏற்படின், அது தொடர்பில் அறிவிப்பதற்கு விசேட தொலைபேசி இலக்கம் அறிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு தேசிய மருத்துவமனையின் 0113415985 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு அழைத்து பாதிக்கப்பட்டவர்கள் தகவல் வழங்க முடியும் என்று சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்துள்ளார். (ப-4)





வாகனம் வாங்க மிகச் சிறந்த காலம்
கொமர்ஷல் வங்கியின் லீசிங் காலம்

புதிய வாகனத்தை வாங்க அல்லது தற்போது இருக்கும் வாகனத்தை மேம்படுத்திக் கொள்ள இப்பொழுது கொமர்ஷல் வங்கியின் லீசிங் காலத்தில் மிகக் குறைவான லீசிங் கட்டணம்.

- ரூ.100,000 க்கு 7 ஆண்டுகளுக்கு குறைவான லீசிங் கட்டணம் மாதாந்தம் ரூ.1,622 மட்டுமே.
- பதிவுசெய்த, பதிவுசெய்யாத மற்றும் இலங்கையில் ஒன்றிணைக்கப்பட்ட வாகனங்களுக்கு லீசிங் வசதி
- உங்கள் வருமானத்திற்கேற்ற இலகு கொடுப்பனவு முறை
- துரித சேவை மற்றும் நாடளாவிய கிளை வலையமைப்பு

மேலதிக விபரங்களுக்கு அருகிலுள்ள கொமர்ஷல் வங்கிக் கிளைக்கு வாருங்கள் அல்லது அழையுங்கள்: 0112 353 333

லீசிங் COMMERCIAL BANK
உங்கள் நலனே எங்கள் நோக்கம்

*நிபந்தனைகளுக்கு உட்பட்டது | Fitch Rating AA-(lka) | +94 112 353 333 | www.combank.lk


## வீதிகளின் விவரங்கள் விரைவில் வர்த்தமானியில்

### வடக்கு ஆளுநர் சார்ள்ஸ் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.22
ஜி.பி.எஸ் மூலம் அளவை செய்யப்பட்டு முழுமையாக தொகுக்கப்பட்ட உள்ளூராட்சி சபை வீதிகள் அனைத்தும் விரைவில் வர்த்தமானியில் பிரசுரித்து முழுமையான ஆவணமாக்கப்படும் என்று வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது;

வடக்கு மாகாணத்தில் மாநகர சபை , நகர சபை, பிரதேச சபை உட்பட 34 உள்ளூராட்சி சபைகளுக்குட்பட்ட வீதிகள் மற்றும் சிறு ஒழுங்கைகள் என்பவற்றின் நீளம், அகலம்,வீதியின் ஆரம்பம், முடிவிடம் உள்ளிட்ட விவரங்கள் அண்மையில் ஜி.பி.எஸ். அளவைத் திட்டத்தினூடாக தொகுக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு தொகுக்கப்பட்ட வீதிகளின் விவரங்கள் வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கேதுவாக விரைவில் என்னால் அனுமதித்து வழங்கப்படும். எனவே அனைத்து உள்ளூராட்சி சபைகளும் வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கேதுவாக விரைந்து செய்துதருமாறு அனைத்து உள்ளூராட்சி மன்றங்களின் தவிசாளர்கள் மற்றும் செயலாளர்களைக் கோரியுள்ளேன் - என்றார். (ஐ-50)

## சவூதியில் வாடும் பெண்கள் விரைவில் நாடு திரும்புவர்

### தொழில் அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு,ஏப்.22
சவூதி அரேபியாவில் சிறைகளிலும், தடுப்பு முகாம்களிலும் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கைப் பணி பெண்களை மீண்டும் நாட்டுக்கு அழைத்து வருவதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று தொழில் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார். சவூதி அரசுடன் மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடல்களை அடுத்து, இலங்கைப் பணி பெண்களை விடுவிக்க சவூதி அரசு ஒப்புக் கொண்டுள்ளது. அதற்கமைவாக சவூதி எயார்லைன்ஸ் மூலம் அவர்கள் இலங்கைக்கு அனுப்பப்படுவர் என்றும் அவர் தெரிவித்தார். இதேவேளை குறைந்தது 41 இலங்கைப் பெண்கள், சவூதி அரேபியாவில் உள்ள நாடு கடத்தல் மையங்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று சர்வதேச மன்னிப்புச் சபை அண்மையில் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ப-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லைத்தீவு கடலில் சட்டவிரோத மீன்பிடி; விழித்துக்கொண்டது நீரியல் திணைக்களம்

*4 படகுகளுடன், 6 மீனவர்கள் அதிரடியாக கைது*

முல்லைத்தீவு, ஏப்.22
முல்லைத்தீவு கடற்பரப்பில் சட்டவிரோத கடற்றொழில் நடவடிக்கையில் ஈடுபட்ட னர் என்ற குற்றச்சாட்டில் 6 மீனவர்கள் கைது செய்யப்பட்டதுடன், அவர்களின் 4 படகுகளும் கைப்பற்றப்பட்டுள்ளன என்று மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்திணைக்கள உதவிப் பணிப்பாளர் வி.கலிஸ்ரன் தெரிவித்தார்.



இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;
முல்லைத்தீவு கடற்பரப்பில் தடைசெய்யப்பட்ட சட்டவிரோத கடற்றொழில் நடவடிக்கையைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையில் மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களம் கடற்படையினருடன் இணைந்து தொடர்ச்சியான நடவடிக்கைகளை முன்னெடுக்க வுள்ளது
இதன் ஒரு நடவடிக்கையாக மாத்தளன் கடற்பரப்பில் கடற்படையினருடன் இணைந்து நேற்றுமுன் தினம் மேற்கொள்ளப்பட்ட கண்காணிப்பு நடவடிக்கையின்போது நான்கு படகுகளுடன் ஆறு மீனவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளார்கள். இவர்கள் சட்டவிரோதமாக ஒளிபாய்ச்சி மீன்பிடிக்கும் நடவடிக்கையை முன்னெடுத்திருந்தனர். ஒளிபாய்ச்சும் கருவிகள் பற்றறிகள், தடை செய்யப்பட்ட பொருள்களைப் பயன்படுத்தி பிடிக்கப்பட்ட மீன்கள் என்பவை மீட்கப்பட்டுள்ளன. முல்லைத்தீவு மாவட்ட கடற் பகுதியில் தொடர்ச்சியாக சட்டவிரோத கடற்தொழில் நடடிக்கையில் மீனவர்கள் ஈடுபட்டு வருகின்றனர். இவற்றைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கை தொடர்ச்சியாக முன்னெ டுக்கப்படும் என்றார்.
முல்லைத்தீவுக் கடலில் வெளி மாவட்டங்களைச் சேர்ந்த மீனவர்கள் சட்டவிரோத மீன்பிடியில் ஈடு பட்டு வருகின்றனர் என்றும், அவர்களைக் கட்டுப்படுத்துவதில் கடற் றொழில் நீரியல் வளத் திணைக்களம் பாராமுகமாக உள்ளது என்றும் மாவட்ட மீனவர்க ளால் தொடர்ச்சியாக குற்றச்சாட்டுக்கள் முன்னெடுக்க ப்பட்டிருந்த நிலையில் கடற்றொழில் திணைக்களம் இந்த நடவடிக்கையை முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ப-19)


## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
05 . 01 . 1950



மறைவு
24 . 04 . 2018

அமரர் தம்பிமுத்து சிவபாதம்
திதி - தசமி

அன்பின் பிறப்பிடமான அன்புத் தந்தையே!
அன்பின் வழி நின்று
பிள்ளைகளினை நன்மை பெற உயர்த்திய பிதாவே!
ஆலயப் பணிகளில் ஆர்வமுடன் ஈடுபட்டீர்
ஆன்மா இவ்வுலகத்தினை விட்டு நீங்கினாலும்
ஆண்டவன் அருளினால்
மோட்சம் தனை பெற்று உயர்வீராக.

பழைய தபாற்கந்தோர் வீதி,
கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.

குடும்பத்தினர்


# வடக்கு மீனவரின் பிரச்சினையையும் அரசு கவனத்தில் எடுக்க வேண்டும்

*தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கம் கோரிக்கை*

மன்னார்,ஏப்.22
வடக்கு மாகாண மீனவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைக் கவனத்தில் எடுத்து, அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கம் கோரிக்கை விடுத்துள்ளது.
இது தொடர்பில் தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் மன்னார் மாவட்ட இணைப்பாளர் ஏ.பெனடிற் குரூஸ் தெரிவித்துள்ளதாவது;
வடக்குக் கடலுக்குள் இந்திய மீனவர்களின் அத்துமீறிய வருகைகள் அதிகரித்துள்ளதால் எமது கடல் வளம் முழுமையாக அழிக்கப்பட்டுள்ளது. இதனால் எதிர்காலத்தில் எமது மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிப்படையும் நிலைமை ஏற்பட்டுள்ளது. தலைமன்னார், பேசாலை மற்றும் சிறுத்தோப்பு போன்ற மீனவக் கிராமங்களில் இருந்து மீன்பிடிக்கக் கடலுக்குச் செல்லும் மீனவர்கள் பலர் இந்தியக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் இன்று வரை விடுவிக்கப்பட வில்லை. மன்னாரில் இருந்து தொழிலுக்குச் சென்ற மீனவர்களைக் கடலில் வைத்து கடற்படையினர் தாக்கித் துன்புறுத்திய சம்பவங்களும் நடந்துள்ளன - என்றார். (ப-4)

# சட்டவிரோதமாக ஏற்றிய மணலை வீதியில் கொட்டி தப்பித்தார் சாரதி

சட்ட விரோதமாக மணல் ஏற்றிச் சென்ற டிப்பர் வாகனச் சாரதியை பொலி ஸார் துரத்திச் சென்றதால், டிப்பர் பெட்டியை உயர்த்தி வீதியில் மணலைக்கொட்டி விட்டு, வாக னத்தை நிறுத்தி விட்டு, அவர் தப்பிச் சென்றுள்ளார்.
இந்தச் சம்பவம் கடந்த திங்கட்கிழமை வரணியில் இடம்பெற்றுள்ளது.
கொடிகாமம் பருத்தித்துறை வீதியில் கொடிகாமம் பொலிஸார் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டனர். இதன்போது டிப்பர் வாகனம் வேகமாகச் செல்வதை அவதானித்து, அதனை நிறுத்துமாறு சமிக்ஞை செய்துள்ளனர். அதனைப் பொருட்படுத்தாமல் வாகனம் சென்றதால் பொலிஸார் அதைத் துரத்திச் சென்றனர். இதனால் சாரதி வாகனத்தில் கொண்டு செல்லப்பட்ட மணலை வீதியில் கொட்டியவாறு வாகனத்தைக் செலுத்தியுள்ளார். தொடர்ந்து பொலிஸார் துரத்தி வரவே டிப்பர் வாகனத்தை தனது வளவுக்குள் நிறுத்தி விட்டு அவர் தப்பியோடியுள்ளார். துரத்திச் சென்ற பொலிஸார் வாகனத்தை மீட்டு பொலிஸ் நிலையத் துக்கு கொண்டு சென்றனர். வீதியில் கொட்டப்பட்ட மணலால் சைக்கிள் மற்றும் மோட்டார் சைக்கிளில் சென்றவர்கள் சிரமங்களை எதிர்நோக்கினர் என்று தெரிவிக்கப்பட்டது. (ப-9)

# வெளிச்சக் கூடுகள் தயாரிக்கும் போட்டிக்கு விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம்,ஏப்.22
தேசிய வெசாக் நிகழ்வை முன்னிட்டு வெசாக் வெளிச்சக்கூடு அமைக்கும் போட்டி எதிர்வரும் மே மாதம் 23 ஆம் திகதி தொடக்கம் 29 ஆம் திகதி வரை யாழ்ப்பாணம் கோட்டைப் பகுதியில் நடைபெறவுள்ளது.
இப் போட்டிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது. போட்டியில் அரச பிரிவு, பாடசாலை பிரிவு மற்றும் திறந்த பிரிவு ஆகிய பிரிவுகளை பிரதி நிதித்துவப்படுத்தி அரச நிறுவனங்கள், பாடசாலைகள், அறநெறிப் பாடசாலைகள் மற்றும் தனியார் ஆக்கதாரர்கள் இப் போட்டியில் கலந்து கொள்ள முடியும்.
இப் போட்டிக்கான அறிவுறுத்தல்களை சகல பிரதேச செயலகங்களிலும் பார்வையிட முடியும் என்பதுடன் போட்டிக்காக விண்ணப்பித்தவர்களில் ஒவ்வொரு பிரிவிலும் தெரிவு செய்யப்படும் 25 போட்டியாளர்களுக்கு வெசாக்கூடு தயாரித்தலுக்கான செலவாக ரூபா 20 ஆயிரம் ரூபா வழங்கப்படுவதுடன் வெற்றியீட்டும் முதல் மூன்று இடங்களுக்கு பெறுமதியான பணப்பரிசில்களும் வழங்கப்படும்.
அத்துடன் ஏனைய போட்டியாளர்களுக்கும் பணப்பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படும். மேலும் இப்போட்டிக்கான விண்ணப்பப் படிவங்களை பிரதேச செயலகங்களில் பெற்று எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் மாவட்டச் செயலக நிர்வாகக்கிளைக்கு கிடைக்க கூடியவாறு அனுப்பி வைக்குமாறு யாழ்.மாவட்ட செயலர் க.மகேசன் அறிவித்துள்ளார். (ஐ)

# முள்ளம்பன்றி வேட்டை; மூவர் கைது

கிளிநொச்சி, ஏப்.22
சுண்டிக்குளம் காட்டுப் பகுதியில் முள்ளம் பன்றியை வேட்டையாடினர் என்ற குற்ற ச்சாட்டில் நேற்றுஅதிகாலை மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.
அவர்களிடம் இருந்து 5 கிலோ முள்ளம்பன்றி இறைச்சி, உள்நாட்டு துப்பாக்கி, அதற்கு பயன்படுத்தும் வெடி மருந்துகள் என்பன மீட்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர். (ப-113,26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல் 2 ஆம் ஆண்டு நினைவேந்தல்

யாழ்ப்பாணம்,ஏப்.22

**உயிர்த்த ஞாயிறு தின தாக்குதலின் இரண்டாம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள் நாடளாவிய ரீதியில் நேற்று நடைபெற்றன.**

கடந்த 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதி உயிர்த்த ஞாயிறு தினத்தன்று தேவாலயங்கள் மற்றும் நட்சத்திர விடுதிகளில் இடம்பெற்ற தொடர் குண்டுவெடிப்பில் 39 வெளிநாட்டவர்கள் உள்ளிட்ட சுமார் 250 க்கும் மேற்பட்டோரின் உயிர்கள் காவு கொள்ளப்பட்டதுடன் 500 க்கும் மேற்பட்டோர் காயங்களுக்கு உள்ளாகினர்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக நாட்டின் பல பாகங்களிலும் உள்ள தேவாலயங்களில் காலை 8.45 மணிக்கு மணியோசை எழுப்பி வழிபாடுகளில் ஈடுபடுமாறும், வீடுகளில் விளக்கேற்றி இரு நிமிடங்கள் மௌன அஞ்சலி செலுத்துமாறும் பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை கோரிக்கை விடுத்திருந்தார்.

இதன்படி நாட்டின் பல பாகங்களிலும் நேற்று அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்றதுடன், தேவாலயங்களில் சிறப்பு ஆராதனைகளும் இடம்பெற்றன.

### யாழ்ப்பாணம்





யாழ்ப்பாணம் மரியன்னை தேவாலயத்திலும் சிறப்பு வழிபாடுகள் இடம்பெற்றன. காலை 8.45 மணி அளவில் தேவாலய மணி ஒலிக்கப்பட்டு , மௌன அஞ்சலிகள் செலுத்தப்பட்டு மெழுகுதிரி ஏற்றப்பட்டு சிறப்பு ஆராதனைகள் இடம்பெற்றன

### கொழும்பு



உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் உயிரிழந்தவர்களை நினைவுகூரும் விதமாக கொழும்பு கொச்சிக்கடை தேவாலயத்தில் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகையின் பங்களிப்புடன் சிறப்பு வழிபாடுகள் இடம்பெற்றன.

### வவுனியா



உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் கொல்லப்பட்ட மக்களை நினைவுகூரும் வகையில் வவுனியா அந்தோனியார் தேவாலயத்தில் நேற்று சிறப்பு வழிபாடுகள் நடைபெற்றன.

அருட்தந்தை ஜெயபாலன் அடிகளார் தலைமையில் மெழுகுவர்த்தி ஏற்றி விசேட வழிபாடு இடம்பெற்றது. தேவாலயத்தில் பொலிஸ் மற்றும் இராணுவத்தினரின் பலத்த பாதுகாப்புடன் வழிபாடு இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

### மட்டக்களப்பு



ஈஸ்டர் தாக்குதலில் உயிர்நீர்த்தவர்களை நினைவுகூர்ந்து, வாழைச்சேனை பிரதேச சபையின் ஏற்பாட்டில், தாக்குதலில் உயிரிழந்தவர்களின் ஆத்ம சாந்தி வேண்டி ஈகைச்சுடர் ஏற்றி நேற்று அஞ்சலி செலுத்தப்பட்டது. (ப-4)

### மன்னார்





உயிர்த்த ஞாயிறு தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் உயிர் நீத்த மக்களுக்காக மன்னாரில் சிறப்புத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. மன்னார் தூய செபஸ்தியார் பேராலயத்தில் காலை 5.45 மணியளவில் அருட்தந்தை எஸ்.ஞானப்பிரகாசம் அடிகளார் தலைமையில் விசேட திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது. இதன்போது தாக்குதலில் உயிர் நீத்த மக்களுக்காக இறைபிரார்த்தனைகள் மேற்கொள்ளப்பட்டதோடு, மலர் தூவி அஞ்சலியும் செலுத்தப்பட்டது.

இதேவேளை மன்னார் மறைமாவட்டத்தின் புனித தலங்களில் ஒன்றான வேதசாட்சிகளின் இராக்கிணி தேவாலயத்தில் சிறப்பு வழிபாடுகள் மேற்கொள்ளப்பட்டன. பங்குதந்தை அருட்பணி அலெக்சாண்டர் பெனோ அடிகளாரின் ஏற்பாட்டில் கூட்டுத்திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

### மலையகம்



உயிர்த்த ஞாயிறு தற்கொலை குண்டுத்தாக்குதல்களில் கொல்லப்பட்ட மக்களை நினைவுகூரும் வகையில் மலையகத்திலும் நேற்று சிறப்பு வழிபாடுகள் நடைபெற்றன.

ஹற்றனில் இலங்கை மெதடிஸ்த திருச்சபையில் அருட்தந்தை தேவதாசன் செங்கன் தலைமையில் இரு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தி, மெழுகுவர்த்தி ஏற்றி உயிரிழந்தவர்களை நினைவுகூர்ந்தனர்.

மிகவும் பாதுகாப்பான முறையில் சமூக இடைவெளியைப் பின்பற்றியே வழிபாடுகள் இடம்பெற்றன. (ஜ-18,110,60)

## உறவுகளை நினைவேந்த தமிழர்களுக்கு வழிவிடுக

### மட்டு.மேயர் கோரிக்கை

மட்டக்களப்பு,ஏப்.22

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலில் உயிர்நீர்த்தவர்களை நினைவுகூருவதற்கு இன்று (நேற்று)ஒத்துழைப்பு வழங்கியதைப் போன்று, தமிழர்கள் தங்கள் உறவுகளை நினைவுகூருவதற்கான ஏனைய நிகழ்வுகளுக்கும் அரசு வழிவிடவேண்டும் என்று மட்டக்களப்பு மாநகரசபையின் முதல்வர் தி.சரவணபவன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாநகர சபையால், நகரில் நிர்மாணிக்கப்பட்டுள்ள உயிர்த்த ஞாயிறு படுகொலை நினைவுத்தூபியில் விசேட நிகழ்வு நேற்று நடைபெற்றது. அதில் அவர் இதனைத் தெரிவித்தார். நிகழ்வில் நினைவுத்தூபிக்கு மலரஞ்சலி செலுத்தி, மெழுகுதிரி ஏற்றி, உயிர்நீர்த்தவர்களுக்காக அஞ்சலி செலுத்தப்பட்டது.

இலங்கையை உலுக்கிய உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் நடைபெற்று நேற்றுடன் இரண்டு வருடங்கள் நிறைவு பெறுகின்றன. இந்தத் தாக்குதலில் உயிர்நீர்த்தவர்களை நினைவுகூரும் நிகழ்வுகள் மட்டக்களப்பு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் நேற்று நடைபெற்றன. (ப-4)

## கொடியேற்றம்

யாழ்ப்பாணம் மீசாலை வடக்கு வேம்பிராய் கலட்டி பிள்ளையார் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா இன்று வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்து 10 நாள்கள் திருவிழா நடைபெறும். எதிர்வரும் 29 ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 5 மணிக்கு சப்பறத் திருவிழாவும்,30 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு தேர்த்திருவிழாவும்,மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும் என்று ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

சாவகச்சேரி,ஏப்.22
சாவகச்சேரி ஆதார மருத்துவமனை நோயாளர் நலன்புரிச் சங்கத்தின் பொதுக் கூட்டமும், நிர்வாகத் தெரிவும் கடந்த சனிக்கிழமை நடைபெற்றன.

நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி சுதோகுமார் மற்றும் மாகாண சுகாதார பணிப்பாளர் அலுவலகத்தின் திட்டப் பணிப்பாளர் மருத்துவர் குமரவேள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நிர்வாகத் தெரிவில் தலைவராக மருத்துவ அத்தியட்சகர் திருமதி டயாளினி மகேந்திரன், செயலாளராக ந.பாலச்சந்திரன்,பொருளாளராக கு.அரசநாதன், உபதலைவராக எஸ்.சபாரத்தினம், உப செயலாளராக வை.இராசரத்தினம் ஆகியோருடன் நிர்வாக உறுப்பினர்களாக வை.விஜயபாஸ்கரன், யோ.ஜெயக்குமார்,செ.வைரவநாதன்,திருமதி ம.கீர்த்திநாதன்.எஸ். ஜெய்சங்கர், மு.சற்குணதேவன், வி.சிறிதரன்,கு.சிவானந்தம், எஸ்.ஜெயராஜசிங்கம், கே.சேதுகாவலர் மற்றும் எஸ்.வி.ஜெயக்குமார் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (ஐ-159)

தென்மராட்சியில்

# வீட்டு திட்டத்துக்கு தெரிவான குடும்பங்களின் இரண்டாவது பெயர்ப்பட்டியல் வெளியாகியது

**சாவகச்சேரி ஏப். 22**

**தென்மராட்சி பிரதேசத்தில் நிரந்தர வீடுகள் இல்லாதவர்களுக்கு வீடுகள் வழங்குவதற்கான புள்ளிகள் அடிப்படையில் தகைமையுள்ளவர்களின் இரண்டாவது பெயர்ப்பட்டியல்கள் பிரதேச செயலகம் மற்றும் கிராம மட்ட அலுவலர்களின் அலுவலகங்கள் போன்ற இடங்களில் நேற்று காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.**

மாவட்டச் செயலகத்தால் வழங்கப்பட்ட அறிவுறுத்தலுக்கு அமைவாக ஏற்கனவே புள்ளிகள் அடிப்படையில் 2009 ஆம் ஆண்டுக்கு முன்னர் திருமணம் செய்த குடும்பங்கள், மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட அங்கத்தவர்களைக் கொண்ட குடும்பங்கள் என்ற அடிப்படையில் பிரதேச செயலகத்தால் முன்னுரிமை அடிப்படையில் 200 குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு, அவர்களின் விவரங்கள் ஆட்சேபனைக்காக பிரதேச செயலகம் மற்றும் கிராம மட்ட அலுவலர்களின் அலுவலகங்கள் போன்ற இடஙகளில் காட்சிப்படுத்தப்பட்டு. கடந்த 20 ஆம் திகதிக்கு முன்னர் தெரிவு தொடர்பான ஆட்சேபனைகள் இருப்பின் எழுத்து மூலமாக அறிவிக்குமாறு கோரப்பட்டிருந்தது.

பிரதேசத்தில் 4 ஆயிரத்து 849 குடும்பங்களுக்கு நிரந்தர வீடுகள் தேவை என்பதால் மாவட்டச் செயலகத்தால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கு அமைவாக கிராம மட்ட அலுவலர்களால் பெறப்பட்ட மதிப்பீடுகளின் பிரகாரம் ஆயிரத்து 500 பேர் வீடுகள் பெறத் தகைமையுடையவர்களாகக் காணப்பட்டனர். இதனால் ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவுகளிலும் புள்ளிகள் அடிப்படையில் தகைமையுள்ளவர்களின் பெயர்ப்பட்டியல் நேற்று காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. இவைகளில் மாவட்டச் செயலகத்தால் வழங்கப்படும் வீடுகளின் எண்ணிக்கையின் பிரகாரம். புள்ளிகள் அடிப்படையில் முன்னிலை வகிப்போர் தெரிவு செய்யப்படுவர். பட்டியலில் ஒவ்வொரு குடும்பமும் பெற்ற புள்ளிகளும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. தெரிவு செய்யப்படுபவர்களுக்கு தலா 10 லட்சம் ரூபா பெறுமதியான வீடுகள் அமைக்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (ப-9)

## விசேட வழிபாடுகளும் அருளாசி உரையும்

யாழ்ப்பாணம், ஏப்.22
நாட்டில் வாழும் மக்களும், உலகெங்கிலும் வாழும் மக்களும் கொரோனாத் தாக்கத்திலிருந்தும் அனைத்து நோய்களிலிருந்தும் மீள்வதற்காக இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் இறை ஆசி வேண்டி நாளை வெள்ளிக்கிழமை காலை 6.30 மணிக்கு தென்மராட்சி மிருசுவில் நெல்லிக்கிணத்தடி தான்தோன்றி கந்தசுவாமி தேவஸ்தானத்தில் விசேட பூசை வழிபாடுகள் இடம்பெறவுள்ளன.

விசேட பூசை வழிபாடுகளின் நிறைவில் தேவஸ்தான பிரதம அர்ச்சகர் பிரம்மஶ்ரீ தி.ஆர்நிகன்சர்மாவின் அருளாசி உரையும் வேதபாராயணமும் இடம்பெறவுள்ளன. (ச)

## சின்னம் சூட்டும் நிகழ்வு



மிருசுவில் விடத்தற்பளை கமலாசனி வித்தியாலய மாணவத் தலைவர்களுக்கு சின்னம் சூட்டும் நிகழ்வு நேற்றுமுன்தினம் அதிபர் இ.நாகேந்திரன் தலைமையில் வித்தியாலய மண்டபத்தில் இடம்பெற்றது. (ச-9)

## திருநாவற்குளத்தில் வீதிகள் சீரமைப்பு

வவுனியா,ஏப்.22
வவுனியா நகர சபை உறுப்பினர் சுந்தரலிங்கம் காண்டீபனின் நிதி ஒதுக்கீட்டில் திருநாவற்குளம் கிராமத்தில் வீதிகளின் சீரமைப்பு பணிகள் நடைபெற்று வருகின்றன.

மாணிக்கதாசன் மைதான வீதியில் 206 மீற்றர் தூரம் கிரவலிடும் பணிகளுடன் , சிவன் ஆலய சுற்றுவட்ட வீதியில் 350 மீற்றர் கிரவலிடும் பணிகளும் நடைபெற்று வருகின்றன.

வீதி அபிவிருத்தி தொடர்பாக கிராம மக்கள் தெரிவித்ததாவது;

கடந்த 20 வருடங்களாக களிமண் வீதியாக இருந்த எமது கிராமத்தின் வீதிகள், தற்போது சீரமைக்கப்பட்டு வருகின்றன. அதன்படி திருநாவற்குளத்தில் 90 வீதமான வீதிகள் சீரமைக்கப்பட்டுள்ளன என்றனர். கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் சந்திரேஸ்வரன் ரவி, சனசமூக நிலைய உபதலைவர் அன்னலதா, விளையாட்டுக் கழகச் செயலாளர் புவிராஜ் மற்றும் நகர சபை உறுப்பினர் சுந்தரலிங்கம் காண்டீபம் ஆகியோர் வீதி அபிவிருத்தித் திட்டங்களைப் பார்வையிட்டனர். (ப-110)





## புதிய தவிசாளர் தெரிவுக்கான ரகசிய கலந்துரையாடல்

முல்லைத்தீவு,ஏப்.22
கரைதுறைப்பற்று பிரதேச சபையின் புதிய தவிசாளர் தெரிவு தொடர்பில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் ரகசிய கலந்துரையாடலை நடத்தியுள்ளனர்.

முல்லைத்தீவு முள்ளியவளைப் பகுதியில் நேற்றுமுன்தினம் கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக்கட்சிகளில் ஒன்றான தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தை (புளொட்) பிரதிநித்துவப்படுத்தும் கனகையா தவராசா, கடந்த மூன்று வருடங்களாக கரைதுறைப்பற்று பிரதேச சபையின் தவிசாளராக பதவிவகித்து வந்தார். ஏற்கனவே செய்யப்பட்ட ஒப்பந்தத்துக்கு அமைவாக, கடந்த மார்ச் மாதம் 18 ஆம் திகதியன்று, அவர் தனது பதவி விலகலை உத்தியோகபூர்வமாக அறிவித்திருந்தார்.

இந்த நிலையில் பிரதேச சபையின் புதிய தவிசாளருக்கான தேர்வு இன்று இடம்பெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. அதனால் புதிய தவிசாளர் தேர்வு தொடர்பாக தமிழ்த்தேசியக்கூட்டமைப்புச் சார்ந்தோர் ஒன்றுகூடி, இரகசிய கலந்துரையாடலை நடாத்தியுள்ளனர்.

தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வினோநோ கராதலிங்கம், வடமாகாண சபை முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரன் மற்றும் கரைதுறைப்பற்றுப் பிரதேச சபையின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் இந்தக் கலந்துரையாடலை நடாத்தியுள்ளனர். (ப-4,246)

## விபத்தில் முதியவர் காயம்

வவுனியா, ஏப்.22
வவுனியா, பட்டாணிச்சூர் பகுதியில் நேற்றுமுன்தினம் மாலை 6 மணியளவில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் மற்றும் சைக்கிள் விபத்தில் முதியவர் ஒருவர் காயமடைந்துள்ளார்.

வவுனியா - மன்னார் பிரதான வீதியூடாக வவுனியா நகர் நோக்கி சைக்கிளில் முதியவர் ஒருவர் பயணித்துக்கொண்டிருந்தவேளை அதே திசையில் பயணித்த மோட்டார் சைக்கிள், சைக்கிளில் பயணித்த முதியவரை மோதியுள்ளது.

இதில் காயமடைந்த முதியவர் சிறு காயங்களுடன் மருத்துவனையில் [illegible] அனுமதிக்கப்பட்டார். (ச-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, முல்லைத்தீவு

## விலைக்கேள்விக்கானகோரல் - 2021

1. பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை முல்லைத்தீவுற்காக. பிராந்திய பெறுகைக்குழுவின் தலைவர் கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட வேலைகக்கான தகமையுடையோரும் தகைமை பெற்றவருமான விலைக்கேள்வியாளர்களிடமிருந்து குறியீடுசெய்யப்பட்ட விலைக்கேள்விகளைக் கோருகின்றேன்.

2. விலைக்கேள்வியானது தேசிய போட்டிவிலைக்கேள்வியின் மூலம் நடாத்தப்படும். இருப்பினும் வியாபார பதிவினை கொண்டுள்ள விலைக் கேள்வியாளர்களே விண்ணப்பிக்கமுடியும்.

3. விலைக்கேள்வியாளர்கள் கறுப்புப் பட்டியலில் பெயர் இடம் பெறாதவராயிருப்பவரும் 04/2016(i) ம் இலக்க30.09.2016 ம் திகதிய பொது நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நிர்மாணத் தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA) கட்டடம் நிர்மாணிப்பதற்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தரத்தினை பதிவு செய்யப்பட்டிருப்பதுடன் செல்லுபடியான வியாபார / கம்பனி பதிவினையும் கொண்டிருத்தல் வேண்டும்.

4. தகைமைகள் பற்றிய தேவைப்பாடுகள் விலைக்கேள்வி ஆவணத்தில் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் விலைக்கேள்வி ஆவணத்தில் Schedule (பகுதி 5) , Schedule (பகுதி 3) இல் உள்ளடக்கப்பட்டுள்ளது.

5. தகுதி வாய்ந்த மற்றும் இதில் நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர்கள் மேலதிக தகவல்களை அலுவலக நேரங்களில் (021 229 0111) பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை. முல்லைத்தீவிலிருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

6. நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர்கள் இப் பணிமனையில் கிடைக்கும் "Application for Bid documents" என்ற படிவத்தினை பூர்த்தி செய்து மேற்காட்டிய ஒவ்வொரு பெறுகைக்கும் மீளளிக்கப்படாத பெறுகைக் கட்டணமாக கீழ்வரும் அட்டவணையின் படி காசாக செலுத்தி ஆங்கில மொழியிலான பெறுகைப்பத்திரங்களை அலுவலக நாட்களில் 22.04.2021 **தொடக்கம்** 11.05.2021 **வரையான காலப்பகுதியில்** 09.00 **மணி தொடக்கம்** 15.00 **மணிவரை** நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

7. விலைக்கேள்விகள் 12.05.2021 ஆந் திகதி 10.30 மணிக்கு முன்பதாக பதிவுத்தபாலிலோ அல்லது நேரடியாகவோ பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை. முல்லைத்தீவு நிதிக்கிளை அறையில் பேணப்படும் பெறுகைகள் பெட்டியில் சேர்ப்பிக்கப்படல் வேண்டும். இவ்விலைக்கேள்விகள் 12.05.2021 ஆம் திகதி 10.30 மணிக்கு எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் முல்லைத்தீவு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் திறக்கப்படும்

8. முன்னாயத்த விலைகூறல் தொடர்பான ஒன்றுகூடல் முல்லைத்தீவு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் 04.05.2021 ஆம் திகதி 11.00 மணிக்கு நடைபெறும்.

9. கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறான கேள்விப் பிணைப்பொறுப்பு இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

| Bid No | Description of Work | Estimated Cost /(Rs in millions) | Contract Period | Required Grade | Required Bid Security | | Non-refundable fees(Rs.) |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | Security Amount | Valid Period | |
| NP/MU/2021/04/PSSP/B2/01 | Construction of Nurses Quarters at DH-Oddusuddan | 12.77 | 147 Days | C6 and C5 (Buildings) | 128,000.00 | Till 28.07.2021 | 5,000.00 |
| NP/MU/2021/04/PSDG/B2/02 | Internal Road (250 m) access to Mortuary BH Mankulam | 1.5 | 74 Days | C9 and C8 (Roads) | 15,000.00 | Till 30.06.2021 | 2,000.00 |
| NP/MU/2021/04/PSSP/B2/03 | Modification and Improvement of OPD block at PMCU Thunukkai | 1.93 | 78 Days | C9 and C8 (Buildings) | 20,000.00 | Till 30.06.2021 | 2,000.00 |
| NP/MU/2021/ 04/PSDG/B2/04 | IMPROVEMENT WORK (MALE, FEMALE WARD DINNING AREA AND CAR PARK) AND ROOF GUTTER REPAIR WORK (MALE WARD RAMP AREA) AT BASE HOSPITAL PUTHUKKUDIYIRUPPU, MULLAITIVU. | 1.00 | 70 Days | C9 and C8 (Buildings) | 10,000.00 | Till 30.06.2021 | 2,000.00 |
| NP/MU/2021/04/PSDG/B2/05 | Renovation and Improvement of Midwife Quarters No 01 BH Mallavi | 1.67 | 76 Days | C9 and C8 (Buildings) | 17,000.00 | Till 30.06.2021 | 2,000.00 |
| NP/MU/2021/04/PSDG/B2/06 | Renovation and Improvement of Midwife Quarters No 03 BH Mallavi | 1.67 | 76 Days | C9 and C8 (Buildings) | 17,000.00 | Till 30.06.2021 | 2,000.00 |
| NP/MU/2021/04/Line/B2/07 | Improvement & Renovation of Drug store at BH Mallavi | 1.46 | 74 Days | C9 and C8 (Buildings) | 15,000.00 | Till 30.06.2021 | 2,000.00 |

**"Bidding will be conducted through National Competitive Bidding (NCB). Since the Estimated Value of Work to be performed under this procurement (excluding VAT and other taxes) is below Rs. 50 Mn., regional preference and CIDA grade preference shall apply as stipulated in Public Finance Circular No. 04/2016 (iii)" dated 18.02.2021 and Public Finance Circulars No 03/2020 and 03/2020(i) dated 09.10.2020 and 11.01.2021 respectively will also be adopted.**

**வைத்திய கலாநிதி. மு.உமாசங்கர்**
**தலைவர்,**
**பிராந்திய பெறுகைகள் குழு,**
**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, முல்லைத்தீவு.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பட்டப்பகலில் வீடு புகுந்து தையல் இயந்திரம் திருட்டு

கொடிகாமம், ஏப். 22

இடைக்குறிச்சி வரணிப் பகுதியிலுள்ள முன்பள்ளி ஆசிரியை ஒருவரின் வீடொன்றில் கடந்த செவ்வாய்க்கிழமை எவரும் இல்லாத சமயத்தில் ஒன்றரை லட்சம் ரூபா பெறுமதியான தையல் இயந்திரம் மற்றும் அதனோடு இணைந்த உபகரணங்கள் என்பவை இனந்தெரியாதோரால் திருடப்பட்டு பட்டா ரக வாகனத்தில் ஏற்றிச் செல்லப்பட்டுள்ளது.

வேலைக்கு சென்று திரும்பி வந்தபோது வீட்டு விறாந்தையில் இருந்த தையல் இயந்திரம் திருடப்பட்டிருந்ததை அவதானித்த ஆசிரியர் சம்பவம் தொடர்பில் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். சம்பவம் தொடர்பில் கொடிகாமம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச-159)

## வெல்ல உற்பத்தியில் பனை அபிவிருத்தி சபை

யாழ்ப்பாணம், ஏப்.22

பனை அபிவிருத்திச் சபையும் பனை வெல்ல உற்பத்தியில் ஈடுபட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. சமார் நாற்பது ஆயிரம் கிலோ வரையான பனை வெல்லத்தை சபை இந்த போகத்தில் உற்பத்தி செய்யுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

யாழ்ப்பாணத்தில் வடமராட்சி சிங்க நகர், மன்னாரில் தருவன் கோட்டை, படப்படி, திருகோணமலையில் வரதோய நகர் போன்ற இடங்களில் இந்த பனை வெல்ல உற்பத்தி இடம் பெற்று வருகிறது என்று பனை அபிவிருத்திச் சபை தெரிவித்தது.

அதனைவிட பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களால் உற்பத்தி செய்யப்படும் பனை வெல்லங்களையும் சபை கூடுதலாக கொள்வனவு செய்யவுள்ளது. இதே வேளை குறிப்பிட்ட அளவு பதனிரையும் போத்தலில் அடைப்பதற்கு பனை அபிவிருத்திச் சபை நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. (ப-17)

**வேலையாள்கள் தேவை**
**அந்திய கால சேவை** ஒன்றிற்கு
**சுத்திகரிப்பாளர்** தேவை.
076 584 6523, 076 167 2593

**புதிய முத்துச்சப்பறம்**
அச்சுவேலியிலிருந்து ஆலயங்களுக்கு தேவையான முத்துச்சப்பறம், அன்னச் சப்பறம், படல் சப்பறம், வைபர் சப்பறம் போன்றன மிகக் குறைந்த வாடகையில் பெற்றுக்கொள்ளலாம்.
தொடர்பு: சிவஸ்ரீ பா.மனோகரக் குருக்கள்
தீர்த்தாங்குளம், அச்சுவேலி.
077 725 4627


அழிகிய வீடொன்றினை கட்டவேண்டுமா?
உங்கள் விருப்பத்திற்கேற்ப கட்ட வேண்டுமா? அல்லது திருத்தங்கள் மேற்கொள்ள வேண்டுமா? உங்கள் பணவசதிற்கேற்ப தகுதிவாய்ந்த பொறியியலாளர்களின் மேற்பார்வையின் கீழ் கட்டித் தரப்படும்.
10 வருட உ[illegible]
உபார்[illegible] சேவைக்கு அழையுங்கள்.
0776 644 832

# 125 வருட யூபிலி விழாவைக் கொண்டாடும் யா/இளவாலைக் கன்னியர் மடம் ம.வி

# 1896 - 2021



## யாழ் மறை மாவட்ட ஆயரின் ஆசிச்செய்தி

யாழ் இளவாலை கன்னியர் மடம் மகா வித்தியாலயத்தின் 125 ஆவது ஆண்டு விழா மலருக்கான ஆசிச் செய்தி தருவதையிட்டு மகிழ்ச்சி அடைகின்றேன். நல் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.
திருக்குடும்ப சபை அருட்சகோதரிகளின் வாழ்வும், பணியும் யாழ் மறை மாவட்டத்தால் என்றும் நினைவு கூரப்படவேண்டியதொன்றாகும். ஏனெனில் எமது யாழ் மறைமாவட்டத்தை என்றும் நேசித்து, இம் மறைமாவட்டத்தை கட்டியெழுப்பியவர்களில் முக்கியமானவர்கள் இவர்களே. அன்றைய காலத்தின் தேவையை அறிந்து பெண்கள் கல்வியிலே, ஆன்மீகத்திலே முன்னேறவேண்டும் என்பதற்காக திருக்குடும்ப சபை அருட்சகோதரிகளை யாழ் மறைமாவட்ட ஆயர் அவர்கள் 1862 இல் பணிசெய்ய இங்கு அழைத்தார். இவர்களின் உருவாக்கத்தின் பயனாக பல பெண்கள் கல்விமான்களாக, நல்ல தலைமைத்துவப்பண்பு கொண்டவர்களாக, சமூகத்தில் நல்ல பொதுநிலையினர்களாக, அருட்சகோதரிகளாக உருவாகியிருக்கிறார்கள். இவர்களின் இத்தகைய பணிகளுக்கு எனது பாராட்டுக்களையும், நன்றிகளையும் கூறிநிற்கின்றேன்.
அந்த வகையில் அதிவந்தனைக்குரிய யூலன் ஆண்டகை அவர்களால் 15.04.1895 இல் அத்திவாரக்கல் நாட்டப்பட்டு 13.05.1896 இல் அருட்சகோதரி விக்ரறீன்தாயார் அவர்களால் இளவாலை கன்னியர் மடம் ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்ப காலங்களில் 1 - 5ஆம் வகுப்புக்களுடன் இப் பாடசாலை ஆரம்பமாகியது. படிப்படியாக பல்வேறு வளர்ச்சிப் படிகளுடாக இப் பாடசாலை உயர்ந்து க.பொ.த உயர்தரப் பிரிவுகள் ஆரம்பிக்கப்பட்டு மகா வித்தியாலயமாக இன்று திகழ்கின்றது. நான் புனித கென்றியரசர் கல்லூரியில் அதிபராக இருந்த காலங்களில் இதன் வளர்ச்சியை முழுமையாக அறிந்திருக்கின்றேன். இவர்கள் கல்வியோடு மட்டும் நின்று விடாது ஏனைய செயற்பாடுகளிலும் பல்வேறு சாதனைகளை படைத்து இக் கன்னியர் மடம் மகா வித்தியாலயத்திற்கு பெருமை சேர்த்து இருக்கின்றார்கள். தொடர்கின்ற வருடங்களிலும் இன்னும் பல சாதனைகளைப் படைத்து இக் கன்னியர் மடம் மகா வித்தியாலயத்தின் புகழ் மேன்மேலும் வளர எனது வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.
இக் கன்னியர் மடம் மகாவித்தியாலயத்தின் முதன்மை அதிபராக இருக்கின்ற அருட் சகோதரி அவர்களுக்கும், ஆசிரியர்கள், மாணவிகள் எல்லோருக்கும் பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும், நன்றிகளையும் கூறி நிற்கின்றேன்.
இறைவனின் ஆசீர் என்றும் உங்களோடு இருப்பதாக.
கிறிஸ்துவிலும் மரியன்னையிலும் பக்தியுள்ள

**பேரருட்திரு கலாநிதி யஸ்ரின் பேனாட் ஞானப்பிரகாசம்**
**யாழ் ஆயர்**



## யாழ் மறைமாவட்ட குரு முதல்வரின் ஆசிச்செய்தி

இளவாலை கன்னியர் மடம் மகாவித்தியாலயம் தனது 125வது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் இத்தருணத்தில் இப்பாடசாலையின் தற்போதைய அதிபர், ஆசிரியர்கள், மாணவர்களுக்கும், முன்நாள் அதிபர்கள், முன்நாள் ஆசிரியர்கள், பழைய மாணவர்கள் மற்றும் பாடசாலை சமூகத்தினர் அனைவருக்கும் இறை ஆசீர் நிறைந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.
திருக்குடும்ப கன்னியர் சபையினரால் நிறுவப்பட்டு, இச் சபையைச் சேர்ந்த அருட்சகோரிகளின் ஆளுமையும் அர்ப்பணிப்பும் நிறைந்த தலைமைத்துவத்தைக் கொண்டு இக்கல்லூரி ஆற்றிய மகத்தான பணிகள் எண்ணிலடங்காதவை. கல்வியிலும், ஒழுக்கத்திலும், சிறந்து முன்மாதிரிகையான வாழ்வு வாழும் ஆயிரக்கணக்கான மகளிரை உருவாக்கிவிட்ட பெருமையை இப்பாடசாலை கொண்டுள்ளது.
தமது சபை நிறுவப்பட்டதன் 200 ஆண்டுகள் நிறைவையிட்டு இறைவனுக்கு நன்றி கூறும் போர்டோவின் திருக்குடும்ப சபையினரின் அருங்கொடைகளை கடந்த 125 ஆண்டுகளாக எம் மண்ணில் பிரதிபலித்த இளவாலை கன்னியர் மடம் மகாவித்தியாலயம் மேலும் பல்லாண்டுகள் தொடர்ச்சியான அர்ப்பணிப்போடு சிறப்பான பணியாற்றிட அன்போடு வாழ்த்துகிறோம். இயேசு, மரி, சூசையின் ஆசீருடன் கூடிய வழிநடத்தல் அனைவருக்கும் கிடைப்பதாக!

**அருட்பணி. ப. யோசப்தாஸ் ஜெபரட்ணம்**
**குரு முதல்வர்.**
**யாழ். மறைமாவட்டம**



## வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி

யா/இளவாலை கன்னியர் மடம் மகா வித்தியாலயத்தினது 125ஆவது ஆண்டு நிறைவினையொட்டி வெளியிடப்படும் மலரிற்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் மகிழ்வடைகின்றேன்.
1896ஆம் ஆண்டில் ஐரோப்பிய நாட்டு திருக்குடும்ப சபைத் துறவி அருட்சகோதரி விக்ரறின் அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை தற்போது 1AB வகைப் பாடசாலையாக வலிகாமம் கல்வி வலயத்தில் இயங்கி வருகின்றது. க.பொ.த(உ.த) இல் கலை, வர்த்தகம், கணிதம், விஞ்ஞானம் ஆகிய நான்கு பிரிவுகளையும் கொண்டு இயங்கிவரும் இப்பாடசாலை சிறந்த பெறுபேறுகளைப் பெற்று வருகின்றது.
இப்பாடசாலையானது திருக்குடும்ப சபையைச் சார்ந்த அருட் சகோதரிகளின் தலைமைத்துவத்தின் கீழ் சிறப்பாக நிர்வகிக்கப்பட்டு வருகின்றது. சிறந்த ஆளுமை மிக்கவர்களாக, ஒழுக்க, விழுமியப் பண்புகளுடன் கூடியவர்களாக மாணவியர்களை உருவாக்கி சமூகத்திற்கு தரும் பணியினை இப்பாடசாலை ஆற்றி வருகின்றது. இப் பாடசாலை மாணவியர்கள் கல்வியுடன், இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் தங்களது திறமைகளை தொடர்ந்து வெளிக்காட்டி வருகின்றனர். வலய, மாகாண, தேசிய மட்டங்களில் இப்பாடசாலை மாணவிகள் பதக்கங்களைப் பெற்று வருவதைக் காணமுடிகின்றது.
இவ்வாண்டில் 125ஆவது ஆண்டினை நிறைவு செய்யும் இப்பாடசாலை இப்பிரதேசத்தில் உள்ள பெண்களுக்கான சிறந்த கல்வியை தொடர்ந்து வழங்க வாழ்த்துவதோடு இப்பாடசாலை மென்மேலும் வளர்ச்சி பெற்றுத் திகழ வாழ்த்துகின்றேன்.

**திரு. செ. உதயகுமார்**
**மாகாணக் கல்வி பணிப்பாளர்,**
**வடக்கு மாகாணம்.**



## வலிகாமம் கல்வி வலயக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச்செய்தி

இளவாலை கன்னியர் மடம் மகாவித்தியாலயம் 125 ஆண்டு நிறைவைக் கொண்டாடுவதையிட்டு வெளியிடப்படும் மலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.
இப் பாடசாலையின் பரீட்சை அடைவுகளின் சித்தி வீதமும் அண்மைக் காலங்களில் மிகவும் உயர்ச்சி பெற்றிருந்தமை இதன் ஆக்கபூர்வமான வளர்ச்சியைக் காட்டுகின்றது. அத்துடன் 2017 -2019 தொடர்ச்சியாக தேசிய மட்டத்தில் பெருவிளையாட்டுக்களில் தங்கம், வெள்ளி, வெண்கலப் பதக்கங்களை வென்றமை பாராட்டிற்குரியது.
அருட்சகோதரி.வ.சகாயநாயகி அவர்களது நேரிய வழிகாட்டலில் அர்ப்பணிப்பான ஆசிரியர்களின் சேவையில் இத்தகைய சாதனைகளும் அபிவிருத்திகளும் இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். 125 ஆண்டு நிறைவைக்காணும் இப்பாடசாலை மேலும் பல சாதனைகளில் சிறந்து ஓங்க எனது வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்வதுடன் இந்த 125 ஆண்டு விழா, மற்றும் மலர் வெளியீடு ஆகியவற்றிற்காகப் பாடுபட்டு உழைத்த அதிபர், ஆசிரியர்கள் உள்ளிட்ட பாடசாலை சமூகத்திற்கு எனது பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திரு.கூ.சுந்தரசிவம்**
**வலயக் கல்விப்பணிப்பாளர்**
**வலிகாமம் வலயக்கல்வி அலுவலகம்**
**மருதனார்மடம்.**



## பாடசாலையின் வரலாற்றுச் சுருக்கம்

- பாடசாலையின் பெயர் - யா/இளவாலை கன்னியர் மடம் ம.வி
- ஆரம்பம் - 1896 வைகாசி 13 ம் திகதி
- நிறுவுனர் - அருட்சகோதரி விக்ரறின் தாயார்
- 15.04.1895 - அதிவந்தனைக்குரிய யூலன் ஆண்டகை அவர்களால் அத்திவாரக்கல் நாட்டப்பட்டது
- தரம் 1 - 5 வகுப்புக்களுடன் ஆரம்பமாகியது
- 1901 இல உதவி நன்கொடை பெறும் பாடசாலையாக இயங்கியது
- 1923 இல் ஆங்கில வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டன அருட்சகோதரி நீசா அதிபராகவும், அருட்சகோதரி அக்னஸ் உதவி ஆசிரியராகவும் பணியாற்றினார்
- 15.01.1930 இல் ஆங்கிலப் பாடசாலை அரசின் கீழ் பதிவு செய்யப்பட்டு தனித்து இயங்கியது. இவ்வேளையில் அருட்சகோதரி கொலற் பொறுப்பேற்றார்.
- 15.01.1930 இல் 3 – 8 (கனிஸ்ட வகுப்பு) வரையிலான வகுப்புக்கள் வரை கல்வி விஸ்தரிக்கப்பட்டது.
- 1928 இல் 1ஆவது தமிழ் ஆசிரியர் பயிற்சிகலாசாலை ஆரம்பிக்கப்பட்டது.
- 1935 - 1952 வரை அருட்சகோதரி சலோமையினால் புதிய நிலம் கொள்வனவு செய்யப்பட்டது. மேல்மாடிக் கட்டடம் நிர்மாணிக்கப்பட்டது.
- 1938 இல் மனையியல் கூடம், நூல் நிலையம், நுண்கலைக்கூடம் என்பன நிர்மாணிக்கப்பட்டன.
- 1935 - 1949 வரை ஆங்கிலப் பாடசாலை அதிபராக அருட்சகோதரி லூட்ஸ் பதவி வகித்தார்.
- 1937 இல் சிரேஸ்ட பத்திரதரப் பரீட்சைக்கு ஆங்கில பாடசாலை மாணவிகள் பத்துப் பேர் தோற்றி 4 பேர் சித்தி அடைந்தமை பெரும் வெற்றியாக அமைந்தது.
- 1939 இல் சிறுவர் இல்லம் ஆரம்பிக்கப்பட்டது. பாலர் வகுப்பில் இருந்து பயிற்றப்பட்ட ஆசிரியராக வெளியேறும் வாய்ப்பினை தகுதிவாய்ந்த மாணவர் இக் கல்லூரியினூடாகப் பெற்றனர்.
- 1946 - 1954 இல் இலவசக் கல்வி அமுலாக்கப்பட்டதனால் ஆங்கிலப் பாடசாலை தொகை அதிகரித்தது.
- 1959 இல் கா.பொ.த உயர்தர கலைப்பிரிவு வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டன.
- 1960 இல் ஆண்டு மார்கழி மாதம் எமது பாடசாலை அரசினால் சுவீகரிக்கப்பட்டது.
- 1963.5.1 இல் தமிழ் மொழி பாடசாலையும் ஆங்கில மொழி பாடசாலையும் ஒருங்கிணைக்கப்பட்டது
- 1968 - 1974 எமது வித்தியாலயத்தின் முதன்மை மாணவியான அருட்சகோதரி லூசில்லா அதிபராகப் பொறுப்பேற்றார்.
- 11.05.1977 ல் அருட்சகோதரி பெற்றனிலா அதிபராக இருந்த காலத்தில் க.பொ.த உ.த விஞ்ஞானப்பிரிவு ஆரம்பிக்கப்பட்டது. இக் காலத்திலும் மருத்துவ பீடத்திற்கும், விஞ்ஞான பீடத்திற்கும் மாணவிகள் தெரிவானவை ஒரு வரலாற்றுப் பதிவாகும்.
- 1992.08.20 இல் பாடசாலையானது இராணுவ நடவடிக்கை காரணமாக இடம் பெயர்ந்து சென்று யா/மானிப்பாய் மகளிர் கல்லூரியில் மாலை நேரப் பாடசாலையாக இயங்கியது.
- 1993 - 1995 வரை "வசந்தம்", பார்மசி வீதி, மானிப்பாய் எனும் முகவரியில் தனியார் கட்டடத்தில் இயங்கியது.
- 1995 -1996.04.28 வரை கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்தில் இயங்கியது.
- 1996.05.01 ஆண்டு முதல் மீண்டும் சொந்த இடமான இளவாலையில் புதுப் பொலிவுடன் இயங்கி நூற்றாண்டு விழாவையும் கொண்டாடியது பெருமைக்குரிய விடயமாகும்.
- 2008 ஆம் ஆண்டு உயர்தர விஞ்ஞானப் பிரிவில் செல்வி ந.சாகினி மருத்துவ பீடத்திற்கு தெரிவு செய்யப்பட்டார். சகல மாணவர்களும் விஞ்ஞான பிரிவில் சித்தியடைந்ததுடன் மூவர் உயிரியல் பிரிவிற்கு பல்கலைக்கழக அனுமதியைப் பெற்றனர்.
- 2015 இல் எமது பாடசாலையின் முன்னாள் பிரதி அதிபரின் மகன் மகேன்குமார் அவர்களினால் வழங்கப்பட்ட நிதியினால் அழகான பாடசாலையின் நுழைவாயில் அமைக்கப்பட்டது. வெளிநாட்டில் இயங்கும் பழைய மாணவிகளினால் வழங்கப்பட்ட அன்பளிப்பு நிதியினால் சிறுவர்களுக்கான பூங்கா அமைக்கப்பட்டு 3 மாடிக் கட்டடம் முன்பக்க கற்பாதை அலங்காரவளைவும் அமைக்கப்பட்டது.
- 2015 - 2017 ஆரம்பப் பிரிவுகட்டிடம் முற்றாக அகற்றப்பட்டு புதிய கட்டிடம் அமைக்கப்பட்டுள்ளது.
- 2016.05.10 மினி சூறாவளியால் பாடசாலையின் திறந்த வெளி அரங்கு சேதமடைந்தது.
- 2016.09.22 அருட்சகோதரி சகாயநாயகி வஸ்தியாம்பிள்ளை 18 வது அதிபராக பாடசாலையில் பொறுப்பேற்றார்.
- 2016.10.29 20 வயதுப் பிரிவினருக்கான எறிபந்துப் போட்டியில் [Cபிரிவில்] தேசிய மட்டத்தில் 1ம் இடம் பெற்றனர்.
- 2017ம் ஆண்டு அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையில் தேசிய மட்டத்தில் நடைபெற்ற
- உடற்பயிற்சிப் போட்டியில் 35 வருடங்களிற்கு பின்னர் தங்கப் பதக்கம் வென்று சாதனை படைத்துள்ளனர். செல்வி மேரி லக்சியா சிறந்த அணித்தலைவராக தேசிய ரீதியில் தெரிவுசெய்யப்பட்டார்.
- கபடி அணி 20 வயதின் கீழ் 2ம் இடம் பெற்று வெள்ளிப் பதக்கம் வென்று சாதனை படைத்துள்ளனர்.
- தரம் 5 மாணவி செல்வி. ஜெறோனா அபிநய நடிப்பில் 2ம் இடத்தை பெற்றுள்ளார்.
- தரம் 10 மாணவி செல்வி.S.டயானாதர்சினி கலாச்சார பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தால் நடைபெற்ற கதாப்பிரசங்க போட்டியில் 1ம் இடத்தை பெற்றுள்ளார்.
- 2017 ம் ஆண்டு ஆரம்பப் பிரிவின் மேல் மாடித்தொகுதி அமைக்கப்பட்டு முழுவதும் வர்ணம் தீட்டப்பட்டுள்ளது.
- 2017 ம் ஆண்டு பளுதூக்கல் விளையாட்டு பாடசாலையில் முதன்முறையாக ஆரம்பிக்கப்பட்டது. இதற்கான உபகரணங்களை திரு.மகேன் பள்ளியகுரு அன்பளிப்புச் செய்தார்.
- 2017 இல் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 6 மாணவிகள் வெட்டுப்புள்ளிக்குமேல் பெற்று சித்தியடைந்ததோடு அனைத்து மாணவிகளும் சித்தியடைந்து 100% சித்தி வீதத்தை பெற்று பாடசாலைக்குப் பெருமை சேர்த்தனார்
- க.பொ.த சாதாரணதர பரீட்சையில் செல்வி. D.ஆன் எமிலினி 8A,B சித்திபெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளார்.
- க.பொ.த உயர்தர பரீட்சையில் வர்த்தகப் பிரிவில் B.அனற்வினித்தா 3A சித்தியும், கலைப் பிரிவில் N.துக்ஷாகினி 3A சித்தியும் பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளனர்.
- 2018ஆம் ஆண்டு அகில இலங்கை பாடசாலைக்கு இடையில் தேசிய மட்டத்தில் நடைபெற்ற
- உடற்பயிற்சி அணி 20 வயது கீழ் பிரிவினர் 3ஆம் இடம் பெற்று வெண்கலப் பதக்கம் பெற்றனர்.
- கபடி அணி 20 வயது கீழ் பிரிவினர் 2ஆம் இடம் பெற்று வெள்ளிப் பதக்கம் பெற்றனர்.
- எறிபந்து அணி 17 வயது கீழ் பிரிவினர் 3ஆம் இடம் பெற்று வெண்கலப் பதக்கம் பெற்றனர். இவ் வெற்றிக்கு பெரும்பாடுபட்டு உளைத்தவர் திரு ஜெனிஸ்ரன் இதயகுமார்
- மினி சூறாவளியால் 2015ஆம் ஆண்டு சேதமடைந்த திறந்தவெளி அரங்கும் வகுப்பறைகளும் வடக்கு மாகாண பிரதம செயலாளர் திரு.பத்திநாதன் அவர்களால் விடுவிக்கப்பட்ட நிதியில் மேல்மாடியோடு கூடிய கட்டடம் 2018இல் அமைக்கப்பட்டு 2019இல் முடிவடைந்தது.
- 2018ஆம் ஆண்டு பாடசாலையில் Smart Class Room பிரிவு உருவாக்கப்பட்டது. இதற்கான நிதியினை யாழ் ஆயர் அவர்கள் அன்பளிப்பு செய்துள்ளார்.
- 2019 இல்
  - தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 4 மாணவிகள் வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்ற சித்தியடைந்ததோடு 95% சித்தி வீதத்தை பெற்று மாணவிகள் பாடசாலைக்குப் பெருமை சேர்த்தனர்.
  - க.பொ.த சாதாரண தர பரீட்சையில் செல்வி. U.சியானி 8A,C சித்தி பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளார்.
  - க.பொ.த உயர்தர பரீட்சையில் வர்த்தகப் பிரிவில் 2A,B சித்தியும், கலைப்பிரிவில் A,B,C, கணிதப் பிரிவில் A,2C சித்தியும் பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளார்.
- 2019ம் ஆண்டு அகில இலங்கை பாடசாலைக்கு இடையில் தேசிய மட்டத்தில் நடைபெற்ற
  - தமிழ் மொழித்திறன் பேச்சுப்போட்டி பிரிவு நான்கில் செல்வி.அ.மேரி லக்சியா தங்கப்பதக்கம் வென்றார்.
  - உடற்தகைமை போட்டியில் 2ஆவது தடவையாகவும் சிறந்த அணித்தலைவராக செல்வி.அ.மேரி லக்சியா தெரிவுசெய்யப்பட்டார்.
  - பளு தூக்கல் போட்டியில் 17 வயது கீழ் பிரிவில் செல்வி.ஆ.மகிளினி 1ம் இடத்தினை பெற்று தங்கப்பதக்கத்தினையும் 20 வயதின் கீழ் பிரிவில் செல்வி.து டிலுசா 2ம் இடத்தினைப் பெற்று வெள்ளிப் பதக்கத்தினையும்இ 17 வயது கீழ் பிரிவில் செல்வி.ஆ டினுசா 3ம் இடத்தினைப் பெற்று வெண்கலப் பதக்கத்தினையும் பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்தனர்.
  - உடற்பயிற்சி அணி 20 வயது கீழ் பிரிவினர் 4ம் இடம் ெற்றனர்.
  - உலக குடியிருப்பு தொடர்பாக தேசிய வீடமைப்பு அதிகார சபையால் நடாத்தப்பட்ட கட்டுரைப்போட்டியில் செல்வி.ய.ஶ்ரீனி 3ம் இடத்தினை பெற்றார்
- 30.10.2019 பாடசாலையின் புலம்பெயர்வாழ் பழையமாணவர்களின் ஒன்றுகூடல் நிகழ்வு மிகவும் சிறப்பாக இடம்பெற்றது.
- 2019ஆம் ஆண்டு பாடசாலையில் 2ஆவது Smart Class Room பிரிவு அவுஸ்திரேலியா பழைய மாணவர்களால் உருவாக்கப்பட்டு அன்பளிப்புச் செய்யப்பட்டது.
- 2019ஆம் ஆண்டு 3வது Smart Class Room பிரிவிற்குரிய பொருட்கள் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் சரவணபவன் அவர்களின் பன்முகப்படுத்தப்பட்ட நிதிப்பங்களிப்பின் மூலம் சண்டிலிப்பாய் பிரதேசசபையினால் அன்பளிப்புச்செய்யப்பட்டது.
- 2020 இல் உலகளாவிய ரீதியில் பெருந் தொற்றாக அமைந்த கோவிட் 19 நோய் காரணமாக கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளும் இணைப்பாடவிதானச் செயற்பாடுகளும் ஸ்தம்பிதம் அடைந்தமை குறிப்பிடத்தக்கது.
- 2021 ஆம் ஆண்டு இறை அருளால் [illegible] கல்விச் செயற்பாடுகள் மீண்டும் புத்துணர்வுடன் செயலாற்ற ஆரம்பித்த வேளை இப்பொன்னான யூபிலி விழாவையும் நாம் நடாத்த கிடைத்த சந்தர்ப்பம் [illegible] இறைவனின் கொடையே.
- 2021-04-22 ஆகிய இந்நாளில் பாடசாலையின் அதிபர் அருட்சகோதரி சகாயநாயகி பஸ்தியாம்பிள்ளை அவர்களின் தலைமையில் முன்னெடுக்கப்படும் இவ் யூபிலி விழாவிற்கு யாழ் ஆயர் கலாநிதி அதிவந்தனைக்குரிய யஸ்ரின் பேனாட் [illegible]
- 125 ஆம் [illegible] மேலும் பல சிறப்புக்களையும் வளர்ச்சிகளையும் பெற்று நீடிய காலம் தனது கல்விச் சேவையை இம் மண்ணிற்கு வழங்க வாழ்த்துகின்றோம்.

வாழ்க! கல்லூரி அன்னை
வளர்க! நின் சேவை.



## அருளாசி செய்தி

அன்புசார் பெருந்தகையீர்!
யாழ்ப்பாணம் இளவாலைப்பகுதியில் நீண்ட காலமாக கன்னியர் மடம் மகா வித்தியாலயமாக மலர்ந்து கல்விப்பணியும் சமூக, சமயப்பணியும் ஆற்றி இன்று 125வது ஆண்டை அடைந்திருப்பதையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றேன்.
கல்வி என்பது மாணவரை முழு மனிதராக்கும் செயற்பாடாகும். இப் புனிதமான பணியை ஆற்றிய, ஆற்றி வருகின்ற அதிபர்கள், ஆசிரியர்கள் யாவரையும் வாழ்த்தி நிற்கின்றேன். இக் கல்லூரியின் வளர்ச்சிக்கும், உயர்ச்சிக்கும் அடி அத்திவாரமாக அமைந்த ஐரோப்பிய நாட்டு மிசனறி சகோதரிகளின் தியாகத்தையும், தன்னலமற்ற சேவையையும் பாராட்டி நிற்கின்றேன்.
கல்வியிலும், ஒழுக்கத்திலும் ஏனைய துறைகளிலும் புகழ்பெற்று வருகின்ற இக் கல்லூரி தொடர்ந்தும் மக்கள் சமூகத்திற்கு சிறப்பான பணியாற்ற இறையாசீர் வேண்டி மகிழ்வுடன் வாழ்த்துகின்றேன்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு


**ஶ்ரீல ஶ்ரீ ஸ்வாமிகள்**
**நல்லை ஆதீனம்.**



## I have watched over them and not one is lost (Jn 17: 12b)

As the Ilavalai Convent Maha Vidyalayam Celebrates its 125 years, I commend the role it has played ever since its foundation encouraging and preparing the young generation to succeed in life the future making them identify and realize their own potentials for personal development in every sphere at the Zonal and National levels. 125 years have passed, but we cannot forget the experiences and the memories of our Early Mothers, our Pioneers and Sisters predecessors who sowed the seeds in the Ilavalai soil and especially in School. As soon as our sisters had entered into the village of Ilavalai they took over the responsibility of the school which had been in a humble state with thatched cadjan roof.
I observed with great interest and appreciate the students' performances, in National level exams and extra-curricular activities excelling in sports and literature. From 2000 onwards I always used to admire their programmes and especially their sports meets together their partner school for a longer period and their PT competitions. Applauses to you dear Sister Principal Sahayanayaki, Sisters, and Staff for your untiring dedicated efforts which has continued to create excellence in education, sports, dance, arts and culture events.
At this juncture, once again I express my sincere appreciation of this our school- our Mother with outstretched hands and you the Principals, staff and students - past and present, agents and instruments- with you whole hearted service and loyalty, on this occasion of great Jubilatiou. As you used to sing in your school Anthem: Alma mater, hearty cheers to you! Ad Multos Annos.

**Sr.Theophane Croos**
**Provincial Superior HF**
**Jaffna**



## எம் அதிபரின் இதயத்தில் இருந்து...

ஈழத்திருநாட்டில் வடமாநில வலிகாமம் தென் மேற்குப் பிரதேசத்தில் அழகுற அமைந்த இளவாலைக் கிராமத்தின் இதயமாக வீற்றிருப்பவள் தான் எம் அன்னை யா/இளவாலை கன்னியர் மடம் மகா வித்தியாலயம். "ஒவ்வொரு மரமும் அதனதன் கனியாலே அறியப்படும்" (லூக்கா 6: 44) என்ற இயேசுவின் வார்த்தையினைப் பிரத்தியேகமாக்கி என்றும் இளமை குன்றாதவளாய் நின்று நிறைந்த விளைச்சலை போரப் பொலிய பொழிந்து நிற்பவள். "இறைவனுக்கு மாத்திரமே மகிமை" என்ற விருது வாக்கினை இலக்காகக் கொண்டு வீரத்துடன் பயணிக்கும் எம் அன்னைக்கு முதற்கண் 125 ஆண்டு நிறைவின் யூபிலி வாழ்த்துக்களை மன நிறைவுடன் கூறி நிற்கின்றேன்.
1896 ஆம் ஆண்டு வைகாசித் திங்கள் 13 ஆம் நாள் அடித்தளமிடப்பட்டதே எம் கல்லூரித்தாயின் கல்வி மையம். இவளுக்கு இன்று அகவை 125 என எண்ணும் வேளையில் என் மனதிலே மட்டற்ற மகிழ்ச்சியும் பெருமையும் அடைகின்றேன். 125 வருட நீண்ட வரலாற்றுப் பயணத்தில் கால் பதித்து அன்னையின் வளர்ச்சிக்காகப் பற்பல பணிகள் புரிந்த அனைத்து நல் உள்ளங்களையும் நெஞ்சார நினைத்துக் கொள்கின்றேன். குறிப்பாக ஐரோப்பிய நாட்டு ஆரம்ப கர்த்தாக்களை ஆத்மார்த்தமாக நினைத்து தலை வணங்கிக் கொள்வதுடன் அவர்களது ஆன்மா இறைவனின் உன்னத மகிழ்வில் இளைப்பாறும் என்பதில் நம்பிக்கை கொள்கின்றேன்.
சிறந்த ஆளுமையும் நிர்வாகத்திறமையும் கொண்ட அதிபர்கள் ஆசிரியர்களின் நெறிப்படுத்தலின் கீழ் கல்வியிலும், ஒழுக்கத்திலும், ஆன்மீகத்திலும், இணைப்பாடவிதானச் செயற்பாடுகளிலும் அன்றும் இன்றும் வலிகாம கல்வி வலயத்தின் முன்னணிப் பாடசாலைகளுள் ஒன்றாக எம் பாடசாலையும் விளங்குகின்றமை கண்கூடு.
எம் கல்விக் கூடத்தின் 125 வருட நீண்ட பயணத்தின் ஆரம்பம் மிகச் சிறியது, எளிமையானது. கடுகை ஒத்த ஒரு சிறு விதை முளைவிட்டு வேரூன்றிக் கிளை பரப்பி நிழல் தந்து இன்று நாம் காணும் பெரு விருட்சமாகக் காட்சியளிக்கின்றது. மேடு பள்ளங்களை துணிவுடன் தாண்டி, மானிட அனர்த்தங்களுக்கும் வீரமுடன் முகம் கொடுத்து இன்று வரை கம்பீர நடைபோட்டுக் கொண்டிருக்கும் இத்தாபனம் சாதனைகளில் மட்டுமல்ல ஒழுக்கசீலத்தையும், ஆன்மீக அறநெறிகளையும், கலாசார பாரம்பரியங் களையும் கண்கொளப் பேணிக் காத்து கலங்கரை விளக்காக [illegible] நாட்டிற்கும் பெருமையீட்டிய மாணவ மாணவிகளை உருவாக்கியதிலும் பெருமை[illegible] கின்றது.

வாழ்க! பல்லாண்டு எம் கல்லூரி அன்னை
வளர்க! நின் சேவை நீடிய காலம்.

**அருட்சகோதரி. சகாயநாயகி வஸ்தியாம்பிள்ளை**
**அதிபர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தமிழ் ஆண்டுகள் வரிசையில் இந்த ஆண்டு 'பிலவ' வருடமாக தொடங்குகிறது. அதன்படி இன்று கும்ப ராசிக்கான பலன்களை பார்ப்போம்.**




# தமிழ்ப் புத்தாண்டு ராசி பலன்கள்

எல்லோரும் சமம் என்று நினைத்து அனைவருக்கும் தம்மிடம் இருப்பதைத் தந்து உதவும் கும்ப ராசி அன்பர்களே... உங்களுக்கு இந்தத் தமிழ்ப் புத்தாண்டு எப்படிப்பட்ட பலன்களைத் தரப்போகிறது என்பதைப் பார்ப்போம்.

தைரிய ஸ்தானமான 3வது ராசியில் இந்தப் பிலவ வருடம் பிறப்பதால் இழுபறியான வேலைகள் முழுமையடையும். பேச்சின் மூலம் சில காரியங்களை சாதிப்பீர்கள். உங்கள் வாழ்க்கையில் நல்ல மாற்றங்கள் வரும். கணவன் மனைவிக்குள் அந்நியோன்யம் அதிகரிக்கும். கசப்பு உணர்வுகள் விலகும். உறவினர்களால் உண்டான தொல்லைகளும் மறையும்.

குழந்தைப் பாக்கியம் எதிர்பார்த்துக் காத்திருந்தவர்களுக்கு அந்தப் பாக்கியம் உண்டாகும். செலவுகளை சமாளிப்பீர்கள். பணப்பை நிரம்பும். உங்களைத் தவறாக நினைத்த நண்பர்கள், மனம் மாறி வலிய வந்து பேசுவர்.




பிள்ளைகள் உங்களுக்குப் பிரியமாக நடந்துகொள்வார்கள். எதையும் அவர்கள் உணரும் வகையில் எடுத்துச் சொல்வீர்கள். புதிய ஆடைஅணிகலன்கள் சேரும். வைகாசி, ஆனி மாதங்களில் வீட்டில் சந்தோஷம் நிலைக்கும். எதிர்காலம் குறித்து முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். உடன் பிறந்தவர்கள் உறுதுணையாக இருப்பார்கள். கோபம் குறையும். பூர்வீகச் சொத்தில் மாற்றம் செய்வீர்கள்.

பொருளாதார முன்னேற்றம் ஏற்படும். அரசு விஷயங்களில் எச்சரிக்கை தேவை. வெளிவட்டாரத் தொடர்பு அதிகரிக்கும். ஆவணி மாதம் வீட்டில் சுப காரியம் நடக்கும். பெண்ணுக்கு நல்ல இடத்தில் வரன் அமையும். பிரபலங்களின் விசேஷங்களில் கலந்து கொள்வீர்கள். புண்ணிய ஸ்தலங்கள் சென்று வருவதால், மன நிறைவு கிட்டும். நல்ல வேலை இல்லையே என்று வருந்தியவர்களுக்கு புரட்டாசி மாதம் புது வேலை வாய்ப்புகள் தேடி வரும்.

நண்பர்களின் ஒத்துழைப்பு உண்டு. வழக்குகளில் வெற்றி பெறுவீர்கள்.

அரசியலில் ஈடுபாடு அதிகரிக்கும். சிலருக்கு அயல் நாட்டு யோகம் வாய்க்கும். விசா பிரச்னைகள் தீரும். பொது நிகழ்ச்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள். உங்களின் பேச்சைக் கேட்டு அனைவரும் வியப்பர். எதிர் வீட்டுக்காரர்களுடன் இருந்த சண்டை சச்சரவு விலகும். சுமுகமான நட்புறவு கொள்வீர்கள். வெளியூர் பயணம் ஆதாயம் தரும்.

**குரு என்ன பலன்கள் நல்குவார்?**

முன்கோபம் அதிகரிக்கும். உணர்ச்சிவசப்பட்டு வார்த்தைகளை விட வேண்டாம். ஆரோக்கியத்தில் கூடுதல் கவனம் செலுத்தப்பாருங்கள். உடல் அசதி, சோர்வு, எதிலும் ஒருவித சலிப்பு, ஆரோக்கிய பிரச்சினைகள் உண்டாகலாம். வெளி உணவுகளைத் தவிர்ப்பது நல்லது. கொஞ்சம் சிக்கனமாக இருங்கள்.

## தன்னம்பிக்கையோடு செயற்பட்டு சாதிக்க வேண்டிய பிலவ வருடம்...

அதே நேரம் அதிர்ஷ்ட வாய்ப்புகளும் உருவாகும். பணவரவு அதிகரிக்கும். குறிப்பாக கும்ப ராசி கும்ப லக்னக்காரர்களுக்கு பணவரவு அதிகரிக்கும். குருபகவானின் பார்வைகளும் சாதகமாகவே உள்ளது. நீண்ட நாள்களாகச் செல்ல வேண்டுமென நினைத்திருந்த கோயில்களுக்குக் குடும்பத்தாருடன் சென்று வருவீர்கள்.

**ராகு கேது தரும் பலன்கள்**

20.3.2022 வரை ராசிக்கு 4ல் ராகு நிற்பதால் தாயாருக்கு மருத்துவச் செலவு, தாய்வழி உறவினர்களிடையே பகைமை வரக்கூடும். அசைவ, கார உணவுகளை தவிர்ப்பது நல்லது.

21.3.2022 முதல் ராகு 3ல் நுழைவதால் எதிலும் வெற்றியுண்டாகும். புதிய முயற்சிகள் பலிதமாகும். வீடு கட்டும் பணி பணப்பற்றாக்குறையினால் பாதியிலேயே நின்று போனதல்லவா?, இனி வங்கிக் கடன் பெற்று வீட்டை கட்டி முடிப்பீர்கள். கேது 9ம் வீட்டிற்குள் நுழைவதால் இதுவரை உத்தியோகத்தில் இருந்த பிரச்சினைகள் குறையும். ஆனால் தந்தையாரின் உடல்நிலை பாதிக்கும். உங்களின் பிடிவாத குணத்தை மற்றவர்களுக்காக மாற்றிக் கொள்வது நல்லது.

**விரைய சனி எப்படிப்பட்ட பலன்களைத் தரும்?**

இந்தாண்டு முழுக்க சனி 12ல் மறைந்து விரையச் சனியாகத் தொடர்வதால் வீண் பழி, பண இழப்பு வந்து போகும். அதே நேரம் சனி பகவான் உங்கள் ராசி அதிபதியாகவும் இருப்பதால் செலவுகளில் பல சுப செலவுகளாகவே இருக்கும் என்பது ஆறுதல். தூக்கம் குறையும். தன்னம்பிக்கையுடன் செயற்படுங்கள். தாயாரின் உடல் நலனில் அக்கறை செலுத்துங்கள். உறவினர்களுடன் பனிப்போர் வெடிக்கும்.

இளைய சகோதரர்கள் தவறாகப் புரிந்துக் கொள்வார்கள்.

சந்தேகப் புத்தியால் நல்லவர்களை இழக்க வேண்டி வரும். யாரை நம்புவது என்கிற மனக்குழப்பத்துக்கு ஆளாவீர்கள்.

வியாபாரத்தில் புதிய யுக்திகளைக் கையாளுவீர்கள். கொடுக்கல் வாங்கலில் சுமூகமான நிலை காணப்படும். வேலையாட்கள் கடமை உணர்வுடன் செயல்படுவர். அவர்களது தேவையறிந்து உதவுவீர்கள். பங்குதாரர்களிடம் இருந்து வந்த கூச்சல் குழப்பம் விலகும். கடையை விரிவுப்படுத்துவீர்கள்.

**இந்தப் புத்தாண்டு, தாழ்வு மனப்பான்மை தடைகளை நீக்கி, தன்னம்பிக்கையையும், வசதி வாய்ப்புகளையும் தரும்.**

## இன்றைய நாள்



**மேடம்**: பணியில் இருந்த மந்த நிலை மாறும். கோபம் குறையும். விட்டுக் கொடுத்துச் செல்வதன் மூலமாக நல்ல பெயர் எடுப்பீர்கள். அலுவலகத்தில் பணிச்சுமை குறையும்.

**இடபம்**: பதவி உயர்வோடு வேறு இடங்களுக்கு மாற்றல் கிடைக்கக்கூடும். உடன் பணிபுரிபவர்களுடன் சுமுகமாக பழகி மகிழ்வீர்கள். உதவி கிடைக்கும்.

**மிதுனம்**: இத்தனை நாள்களை விட அதிக வழிபாடு செய்வீர்கள். சிக்கலைத் தவிர்க்க சுலப வழி கண்டறிவீர்கள். தன்னம்பிக்கை கூடும்.

**கடகம்**: அடைக்க வேண்டிய கடன் உங்களை அவசரப்படுத்தி முடிக்க வைக்கும். மற்றவர் சிரமத்தைப் புரிந்து கொண்டு கருணை காட்டுவீர்கள். விழாவில் கலந்து கொள்வீர்கள்.

**சிம்மம்**:அக்கம் பக்கத்தினரிடம் சுமுகமாக நடந்து கொண்டு வசீகரிப்பீர்கள். முயற்சியின் பேரில் குடும்பத்தில் பொருளாதார சிரமங்கள் தீரும். அலைச்சல் இருக்கும்.

**கன்னி**: விரும்பிய இடமாற்றமும், பதவி உயர்வும் கிடைக்கும். அதிகாரம் செய்வீர்கள். நின்று[illegible] பணியைத் ஆரம்பிப்பீர்கள். பணியில் இதுவரை இருந்து வந்த இறுக்கமான நிலை மாறும்.

**துலாம்**: பல நாள்களுக்குப் பிறகு சுப தேவையை நிறைவு செய்து கொள்வீர்கள். தொழில், பணியில் உள்ள ரகசியங்களை தெரிந்து கொள்வீர்கள். கடன் தொல்லையில் இருந்து விடுபடுவீர்கள்.

**விருச்சிகம்**: குழந்தைகளின் ஆசையை நிறைவேற்றி மகிழ்விப்பீர்கள். மற்றவர்களைப் பார்த்துப் புதிய விஷயங்களைக் கற்பீர்கள். உங்களின் அந்தஸ்து உயரும். வீட்டை விரிவாக்குவீர்கள்.

**தனுசு**: உங்களின் புதிய திட்டங்களை நிறைவேற்ற முயற்சி செய்வீர்கள். குடும்பச் சூழ்நிலை மகிழ்ச்சி தரும். பணிச்சுமை குறையும். சுபநிகழ்ச்சிகள் நடைபெறுவதற்கான அறிகுறிகள் தென்படும்.

**மகரம்**: உழைப்பை அதிகரிப்பீர்கள். உடல்நலம் மேம்படும். மற்றவர் சொல்லும் விமர்சனம் பற்றிக் கவலை வேண்டாம். பிரியமானவர்களிடம் நேற்று இருந்த சச்சரவுகள் நீங்கும்.

**கும்பம்**: வாழ்வின் சுக சௌகர்யங்களை அதிகரித்துக் கொள்வீர்கள். மனம் சந்தோஷம் அடையும்படியான சம்பவங்கள் நடைபெறும். சிக்கல் ஏற்படுத்தும்படியான விவாதங்கள் வேண்டாம்.


**மீனம்**: முன்பு செய்த குற்றங்கள் தலைதூக்க வாய்ப்புள்ளது. உங்களை மற்றவர்கள் புதிர்போல் பார்ப்பார்கள். பகை நீங்கும். பிள்ளைகளிடம் இருந்து நற்செய்தி வரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> 'ஒரு புரட்சிகர நிலைமை இல்லாமல் ஒரு புரட்சி சாத்தியமற்றது. ஒவ்வொரு புரட்சிகர சூழ்நிலையும் புரட்சிக்கு வழிவகுக்காது.'
> - விளாடிமிர் லெனின்

# லெனின் புரட்சியின் நாயகன்!

ஐ.வி.மகாசேனன்



> அடக்குமுறைகள் எப்போதுமே இந்தச் சமூகத்துக்காக, மக்களுக்காக உழைக்கப் பிறந்த புரட்சியாளர்களை அடையாளம் காட்டும். அந்த வகையில் ரஷ்யாவில் நிலவிய ஆதிக்கத்துக்கு எதிராக போராடி, 1917 நவம்பர் 7ஆம் திகதி சோவியத் ஆட்சி மலரக் காரணமாக இருந்த வரலாற்று நாயகன் லெனினை வரலாறு நமக்கு அடையாளம் காண்பித்துள்ளது.

புரட்சியை ஒரு வாழ்வாய் வகுத்து வென்றவர் மண்ணில் அவதரித்து இன்றுடன் 151 ஆண்டுகளாகிறது. கார்ல் மாக்ஸ் கண்ட சோசலிசக் கனவை புரட்சியின் மூலம் நிஜமாக்கிய விளாடிமிர் லெனின் 1870ஆம் ஆண்டு ஏப்ரல் 22ஆம் திகதி, ரஷ்யாவில் வால்கா நதியின் கரையோரம் உள்ள சிம்பிர்ஸ்க் எனும் நகரத்தில் பிறந்தார். தொழிலாளர் புரட்சியை நிலைநாட்டி மாக்ஸிச சித்தாந்தத்துக்கு லெனினிச வடிவம் கொடுத்த லெனினின் அரசியல் கருத்தியல்களைத் தேடு வதனூடாக லெனினை தேடுவதாகவே இக்கட்டுரை உருவாக்கப்பட்டுள்ளது.

சமூகத்தின் உரிமைக்காக போராடும் ஒவ்வொருத்தரும் லெனின் வாழ்க்கையிலிருந்து எவ்வளவோ பாடங்களைக் கற்றுக் கொள்ளலாம். நாட்டில் நடக்கும் அநீதிகளைக் கடந்துபோகும் மனிதர்களுக்கு மத்தியில் லெனின் என்ற சாதாரண மனிதன் மக்களை ஒன்றுதிரட்டி அடக்குமுறை ஆதிக்கத்தை எதிர்த்து வென்றுகாட்டியுள்ளார். அடக்குமுறைகள் எப்போதுமே இந்தச் சமூகத்துக்காக, மக்களுக்காக உழைக்கப் பிறந்த புரட்சியாளர்களை அடையாளம் காட்டும். அந்த வகையில் ரஷ்யாவில் நிலவிய ஆதிக்கத்துக்கு எதிராக போராடி, 1917 நவம்பர் 7ஆம் திகதி சோவியத் ஆட்சி மலரக் காரணமாக இருந்த வரலாற்று நாயகன் லெனினை வரலாறு நமக்கு அடையாளம் காண்பித்துள்ளது.

லெனின் புரட்சிகரமானவனாக வளர அவரது குடும்பச் சூழலே காரணமாயிருந்துள்ளது. லெனினும் அலெக்சாண்டரும் சிறுவயது முதலே, சுதந்திரமாகச் செயல்படுதல், சுயமாகச் சிந்தித்தல் என்று இருந்தனர். லெனினின் அண்ணன் அலெக்ஸாண்டர் முற்போக்குக் கொள்கை உடையவராகவும், அப்போதைய ரஷ்ய ஆதிக்க அரசுக்கு எதிரான தீவிர சிந்தனை கொண்டவராகவும் இருந்தார். இதனால் அலெக்ஸாண்டர் 1887ஆம் ஆண்டு மார்ச் முதலாம் திகதி கைதுசெய்யப்பட்டு, அதே ஆண்டு மே 8ஆம் திகதி ஜார் மன்னரின் காவல்துறையால் மரண தண்டனை வழங்கப்பட்டு உயிரிழந்தார். பின்னாளில் லெனின் உலகம் மறவா புரட்சியாளனாய் மிளிர இச்சம்பவங்களே ஆணிவேராய் அமைந்திருந்தன.

### லெனின் கொண்டிருந்த மொழியுரிமைக் கொள்கை

கார்ள் மாக்ஸின் தத்துவங்களை உள்வாங்கிய லெனின், 'சுரண்டும் வர்க்கத்துக்கு எதிராக மக்களை அணிதிரட்டாமல் சமூகப் புரட்சி சாத்தியமில்லை' என்பதை உணர்ந்தார். இதற்காகத்தான் படித்த சட்டத்தைப் பயன்படுத்தி மக்களுக்கு ஆலோசனைகளை வழங்க ஆரம்பித்தார். வாழ்வில் தான் கற்றுக்கொண்ட பாடங்களைப் புத்தகமாக எழுத ஆரம்பித்தார். மக்களை அணி திரட்டும் முயற்சியில் முழு மூச்சாக இறங்கினார். அதற்காக, விடுதலைக்கான போராட்டக் கழகம் என்ற ஓர் அமைப்பையும் 1895ஆம் ஆண்டு தோற்றுவித்தார். அதனைத் தொடர்ந்து கைதுகளும் நாடுகடத்தல்களும் லெனினை தொடர்ந்தபோதும் லெனின் மக்கள் மத்தியில் விதைக்கப்பட்ட புரட்சிக்கான விதையை விருட்சமாக்குவதில் கடும் பிரயத்தனத்துடன் செயற்பட்டார். அதன் பலனையே ரஷ்ய புரட்சியின் மூலம் அறுவடையும் செய்திருந்தார்.

லெனின் தனது புரட்சியில் சுயநிர்ணய உரிமை தொடர்பான உரையாடலுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தவராக காணப்படுகிறார். இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியானது முதலாளித்து வம், ஏகாதிபத்தியம், தேசிய விடுதலைப் போராட்டம் ஆகிய அனைத்தும் ஒருங்கிணைந்த சகாப்தமாய் காணப்பட்டது. இதன் பின்னணியிலே தேசங் களின் பிரிந்து செல்வதற்கான சுயநிர்ணய உரிமைக் கோட்பாட்டை லெனின் வடிவமைத்திருந்தார். தேசியவாதம், தேசிய விடுதலைப் போராட்டம், சுயநிர்ணய உரிமை என்பவற்றை சோசலிச சித்தாந்தத்தின் துணை அம்சங்களாகவே லெனின் நோக்கினார். சோவியத் குடியரசில் அந்தந்த குடியரசின் தாய்மொழி எதுவோ, அதுதான் நிர்வாக மொழியாகவும், போதனை மொழியாகவும் இருக்கவேண்டும் என்று லெனின் வலியுறுத்தினார்.

ரஷ்யர்கள் பெரும்பான்மையராக இருப்பதால், ரஷ்ய மொழியைக் கட்டாயப்படுத்தக் கூடாது என்பதில் உறுதியாக இருந்தார். அவர் ஒரு ரஷ்யர் ஆனால், பேரினவாதத்தை அறவே வெறுத்தார். அதுவே லெனினின் மக்கள் புரட்சி வெற்றிபெறவும் காரணமாகியது.

### வரலாற்று அறிவை ஆய்ந்து கற்றவர்

லெனினின் புரட்சி வெற்றிபெற பிரதான காரணமாயுள்ள மற்றொரு விடயம், வரலாற்றை ஆய்ந்து கற்றமையாகும். லெனின் வலியுறுத்தும் வரலாற்றை ஆய்ந்து கற்கவேண்டும் என்பது மாக்ஸிஸத்துக்கு மட்டுமானதல்ல. அது புரட்சிக்கான சித்தாந்தமாகும். உரிமைக்காக போராடும் ஒவ்வொரு சமூகமுமே தமது வரலாற்றை வரட்டுவாதம், புனிதத்துவம் என்ற மாயைகளை நீக்கி ஆழமாக அறிதல் அவசியமாகிறது.

லெனினின் புரட்சிக்கான சித்தாந்தங்களில் மற்றையது, புரட்சிக்கான சூழலைத் தீர்மானித்தல் வேண்டும். ரஷ்யாவில் எந்தவிதமான புரட்சி நடத்தவேண்டும், மாக்சிய தத்துவத்தை இங்கு எப்படி அமுல்படுத்த வேண்டும் என்பதை ஆய்வுநடத்தி அதில் முழுமையாகத் தேறினார்.



மாக்சிய தத்துவத்தை அப்படியே எல்லா நாடுகளிலும் ஒரே மாதிரியாக அமுல்படுத்திட முடியாது என்பதில் அவர் உறுதியாக நின்றார். ரஷ்யாவில் ஆரம்ப நிலையில் சமூக – ஜனநாயகக் கட்சியின் நிலைப்பாட்டில் உள்ள சில குறைபாடுகளை அவர் குறிப்பிட்டுள்ளார்.

### மாக்ஸிஸம் - லெனினிஸம்

ரஷ்சியாவில் நிலவும் சிறப்பு சூழ்நிலைகளுக்கு ஏற்ப மாக்சின் கொள்கைகளின் வடிவங்களை மாற்றி நடைமுறைப்படுத்தினார். 'பத்தொன்பதாம் நூற்றாண்டு மாக்ஸிசத்தை இருபதாம் நூற்றாண்டுக்குரிய மாக்ஸிசமாக ஆக்கியமைக்கு பெயர்தான்' லெனினிசம் என்கின்றார் ஸ்டாலின். ரஷ்யாவில் புரட்சியின் அடிப்படை விவசாயப் புரட்சியே, அதுவே இந்தப் புரட்சியின் குறிப்பான தேசியத் தன்மையைத் தீர்மானிக்கிறது. என்பதை ஆய்ந்து அதன் வழியேயே புரட்சிக்கான வடிவத்தை லெனின் அமைத்து வெற்றிபெற்றார். புரட்சிக்கான வடிவம் என்பது ஒரு குறித்த நிலையில் காணப்படுவதில்லை. சந்தர்ப்பங்களும், சூழ்நிலைகளும், வரலாற்று அனுபவங்களுமே சமூக போராட்டத்துக்கான வடிவங்களை தீர்மானிக்கின்றன என்பதையும் லெனின் நிரூபித்துக் காட்டியுள்ளார்.

ஆளுமைகளைத் தேடும்போது ஆளுமைகளின் பிறப்பு, இறப்பு என்பவற்றை வெளிப்போர்வையில் கற்பதற்கு மாறாக ஆளுமைகளின் செயற்பாடுகளையும், ஆளுமைகளின் சித்தாத்தங்களையும் உட்கிடக்கையாக ஆராய்தல் வேண்டும். அதுவே சமூகத்துக்குப் பயனுறுதியாகக் காணப்படும். லெனினின் புரட்சியின் வெற்றிக்குப் பின்னாலும் தேடல்கள் அதிகமாக இருந்துள்ளன. இலக்கியங்களை நேசித்த லெனினுக்கு புத்தகங்கள் படிக்கும் பழக்கமும் அதிகமாக இருந்தது.

அத்துடன் அவரே பல புத்தகங்களை எழுதி மக்களுக்கு கருத்தூட்டும் செயற்பாடையும் மேற்கொண்டுள்ளார். அவரது எழுத்துகள் 55 தொகுதிகளாக வெளிவந்திருக்கின்றன. பெரும்பாலும் ஆதிக்கத்துக்கு எதிராகக் குரல் கொடுக்கும் மாபெரும் புரட்சியாளர்களை, மக்கள் இனம் காண்பதற்கு முன்னர், சர்வாதிகாரிகளே அடையாளம் காண்கிறார்கள். அவர்களே மாபெரும் தலைவர்களை உருவாக்குகிறார்கள்.

அவ்வழியில் ஜார் மன்னன் லெனினைக் கட்டுப்படுத்த மேற்கொண்ட நடவடிக்கைகளே லெனின் எனும் புரட்சி விதையை பெரும் விருட்சமாக்கியது. புரட்சிக்கான அயராத உழைப்பால் தூக்கத்தை தியாகம் செய்தலெனின் இறுதியில் அதுவே நோயாகி, 1924ஆம் ஆண்டு ஜனவரி 21ஆம் நாள் தனது 54ஆவது வயதில் விண்ணுலகில் புரட்சிசெய்யச் சென்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை கடல்வள ஆய்வுக்கு நோர்வே தொடர்ந்தும் உதவி

கொழும்பு, ஏப். 22
இலங்கையின் கடல்வள ஆய்வுகளைத் தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்வதற்கு நோர்வேத் தூதரகம் உதவுவதற்கு முன்வந்துள்ளது. இது தொடர்பில் இலங்கையுடன் ஏற்கனவே கைச்சாத்திட்டுள்ள ஒப்பந்தத்தை மேலும் ஓராண்டுக்கு அது நீடித்துள்ளது.
இலங்கைக் கடல் பகுதிகளில் மீன் வள ஆய்வுகளை முன்னெடுப்பதற்கு தேசிய நீரியல் வள ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகாமை மற்றும் நோர்வே கடல்சார் ஆய்வுகள் நிறுவகம் ஆகியவை 2017ஆம் ஆண்டிலிருந்து கைகோர்த்துள்ளன. இதன் முதலாவது ஒப்பந்தம் முடிவடைந்துள்ள நிலையில் 2022ஆம் ஆண்டு வரையிலான புதிய ஒப்பந்தம் கொழும்பில் அண்மையில் கைச்சாத்திடப்பட்டுள்ளது.
இலங்கைக் கடற்பகுதியில் காணப்படும் மீன் இனங்கள் தொடர்பான ஆய்வுகளை முன்னெடுத்து, அதனூடாக நாட்டில் மேம்படுத்தப்பட்ட மற்றும் நிலைபேறான கடல் வளங்கள் முகாமைத்துவத்தை கொண்டிருப்பது தொடர்பில் இதன்போது கவனம் செலுத்தப்படும்.
நோர்வேயின் நிதி உதவியில், இலங்கையின் கடற்பரப்பில் 2018 ஆம் ஆண்டில் நோர்வே நாட்டின் ஆய்வுக் கப்பலான 'கலாநிதி பிரிட்ஜோவ் நான்சென்' சுற்றுப்புற அமைவு தொடர்பான ஆய்வொன்றை முன்னெடுத்திருந்தது. இந்தத் திட்டத்தின் முதற்கட்டம் வெற்றிகரமாக பூர்த்தியடைந்ததைத் தொடர்ந்து, இந்தத் திட்டத்தின் இரண்டாம் கட்டத்துக்கான அனுமதியையே நோர்வே தூதரகம் வழங்கியுள்ளது. 2022 ஆம் ஆண்டு வரை செயற்பாட்டிலிருக்கவுள்ள இந்தத் திட்டத்தினூடாக, கடற்றொழில் நிர்வாக சாதனங்கள் வடிவமைப்பு நடவடிக்கைகள் 8.75 மில். நோர்வே குரோன் (அண்ணளவாக 1 மில். அமெரிக்க டொலர்கள்) செலவில் மேற்கொள்ளப்படவுள்ளது.
'1970ஆம் ஆண்டு முதல் நோர்வேக்கும் இலங்கைக்கும் இடையில் கடற்றொழில் சார் இணைந்த செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. இதில், கடற்றொழில் முகாமைத்துவம், ஆய்வுகள் மற்றும் அறிவூட்டல் மற்றும் தனியார் துறை அபிவிருத்தி ஆகியவையும் அடங்கியுள்ளன. 2013ஆம் ஆண்டு முதல் 2019ஆம் ஆண்டு வரை கடற்றொழில்துறைக்காக 19.4 மில்லியன் நோர்வே குரோன் (அண்ணளவாக 2.3 மில். அமெரிக்க டொலர்கள்) செலவிடப்பட்டுள்ளது' என்று இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ட்ரைன யுரன்லி எஸ்கடேல் தெரிவித்துள்ளார். (ஒ)

## கொரோனாத் தொற்று
# தீவிர சிகிச்சைப் பிரிவில் நோயாளிகள் அதிகரிப்பு
### சுகாதார மேம்பாட்டு பணியகம் தெரிவிப்பு

**கொழும்பு,ஏப்.22**
**மருத்துவமனைகளின் தீவிர சிகிச்சைப் பிரிவுகளில் சேர்க்கப்படும் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கையில் விரைவான அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது என்று சுகாதார மேம்பாட்டு பணியகம் தெரிவித்துள்ளது.**

இது தொடர்பில் பணியகம் மேலும் தெரிவித்துள்ளதாவது,
கொரோனாத் தொற்று கடந்த சில நாள்களில் இலங்கையில் அதிகம் பதிவாகியுள்ளது. இது குறித்த விஞ்ஞான தரவு, மறுஆய்வு மற்றும் தகவல் ஆய்வு என்பவை ஏற்கனவே நடந்து கொண்டிருக்கின்றன. எனினும் மக்கள் அவதானத்துடன் இருக்க வேண்டும். தடுப்பு ஆலோசனைகளைப் பின்பற்றுவதன் மூலம் கொவிட்19 தொற்று நோய் பரவுவதை மிக விரைவாகக் கட்டுப்படுத்த முடியும். கடந்த பண்டிகைக் காலத்தில் சுகாதார வழிகாட்டுதல்களை மக்கள் கடைப்பிடிப்பது படிப்படியாகக் குறைந்து வந்தமை இந்த புதிய பாதிப்பை உருவாக்க வழிவகுத்துள்ளது. எனவே கடுமையான சட்டங்கள் மற்றும் பயணத்துக்கான கட்டுப்பாடுகளை விதிப்பது சிறந்தது. கைகளைச் சுத்தமாக வைத்திருத்தல், முகக் கவசம் அணிதல், சமூக இடைவெளியைப் பின்பற்றல், நெரிசலான இடங்களைத்தவிர்த்தல், இருமல், தொண்டை வலி அல்லது சளி போன்ற அறிகுறிகள் இருந்தால் கூட்ட நெரிசல்களைத் தவிர்த்தல் மிக அவசியம். ஆகவே வரவிருக்கும் காலப்பகுதி முழுவதும் சுகாதார ஆலோசனைகளை மக்கள் முழுமையாகப் பின்பற்ற வேண்டும்- என்றுள்ளது. (ப-4)

# மருத்துவத் தாவரங்கள் நடுகை; நாடளாவிய ரீதியில் ஆரம்பம்

கொழும்பு, ஏப்.22
நாட்டில் மருத்துவத் தாவரங்களை அதிகமாக உருவாக்கும் நோக்கில் சுதேச மருத்துவ அமைச்சின் கோரிக்கைக்கு அமைவாக மருத்துவத் தாவரங்கள் நடும் திட்டம் நாடளாவிய ரீதியில் கடந்த 16ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது.
திருகோணமலை முள்ளிப்பொத்தானையில் அமைந்துள்ள ஆயுள்வேத நடமாடும் மருத்துவ நிலைய வளாகம் மற்றும் கந்தளாய் கிராமிய ஆயுள்வேத வைத்தியசாலை வளாகம் போன்ற இடங்களில் மருத்துவத் தாவர கன்றுகள் நடப்பட்டன. (ச)

# தேங்காய் எண்ணெய் இறக்குமதி நிறுத்தம்?

கொழும்பு,ஏப்.22
சுத்திகரிக்கப்படாத தேங்காய் எண்ணெய் இறக்குமதி செய்யப்படுவது எதிர்காலத்தில் நிறுத்தப்படும் என்று தெங்கு, கித்துள் மற்றும் பனை பயிர்ச் செய்கை கள் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் அருந்திக்க பெர்ணாண்டோ தெரிவித்துள்ளார்.
அதேவேளை நாட்டில் தேங்காய் எண்ணெயை உற்பத்தி செய்வதற்கான, தேங்காய் சொட்டுக்களை இறக்குமதி செய்வதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.
அதேவேளை புற்றுநோயை ஏற்படுத்தக்கூடிய இரசாயனம் கலந்துள்ளமை உறுதி செய்யப்பட்ட தேங்காய் எண்ணெய் அடங்கிய கொள்கலன்கள் மலேசியாவுக்கு மீள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன.
15 மெற்றிக் தொன் தேங்காய் எண்ணெய் அடங்கிய 6 கொள்கலன்கள் இவ்வாறு மீள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ப-4)



# எகிறும் தொற்றாளர்கள்; அதிகரிக்கும் கொத்தணிகள்
### தொற்று நோய்ப்பிரிவு எச்சரிக்கை

கொழும்பு,ஏப்.22
நாட்டில் பரவலாக கொரோனாத் தொற்றாளர்கள் அதிக அளவில் அடையாளம் காணப்பட்டு வருவதால், பல கொத்தணிகள் உருவாகக் கூடிய அபாயம் ஏற்பட்டுள்ளது என்று தொற்றுநோயியல் பிரிவு எச்சரித்துள்ளது.
வங்கிகள் மற்றும் சுகாதாரப் பிரிவுகளில் எழுமாறாக முன்னெடுக்கப்படும் பி.சி.ஆர். பரிசோதனைகளில் அதிக அளவு தொற்றாளர்கள் இந்த வாரம் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.
இந்த நிலைமை இன்னும் அதிகரிக்க வாய்ப்புள்ளது என்று மருத்துவ நிபுணர் சுதத் சமரவீர தெரிவித்துள்ளார். அதேவேளை அரச வங்கியொன்றின் 70 ஊழியர்களுக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்று கொவிட் 19 பரவலைத் தடுப்பதற்கான தேசிய செயற்பாட்டு மையம் தெரிவித்துள்ளது.
வங்கியின் கொழும்பு, பதுளை, காலி, அம்பலாங்கொடை மற்றும் கேகாலை கிளைகளில் இவ்வாறு தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.
அத்துடன் பிலியந்தலை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் புதிதாக 31 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.
130 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனைகளில் இவர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.
எழுமாற்றாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் மற்றும் தொற்றாளர்களுடன் நெருங்கிப் பழகியவர்கள் இவ்வாறு தொற்றாளர்களாக இனங் காணப்பட்டுள்ளனர் என்று பிலியந்தலை பொதுச் சுகாதார பரிசோதகர் தெரிவித்துள்ளார். (ப-4)

# 59 விளையாட்டு வீரர்கள் ஒப்பந்தத்தில் இணைப்பு
### அமைச்சர் நாமல் தெரிவிப்பு



கொழும்பு,ஏப்.22
நாட்டில் தெரிவு செய்யப்பட்ட 59 விளையாட்டு வீரர்கள், தொழில் ரீதியில் ஒப்பந்தங்களில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளப்படுவர் என்று இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ச தெரிவித்தார்.
நாடாளுமன்ற உறுப்பினர் சாந்த பண்டார எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது;
சர்வதேச தொழிற்சந்தையை இலக்காகக்கொண்டு புதிய வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்படும். எதிர்வரும் இரண்டு ஆண்டுகளில் ஒரு லட்சம் தொழில் முயற்சியாளர்களை உருவாக்குவதே எமது இலக்கு. மஹேல ஜெயவர்தன தலைமையிலான தேசிய விளையாட்டு பேரவையின் மூலம் தேசிய விளையாட்டுத் துறையை மேம்படுத்துவதற்கான திட்டம் சமர்பிக்கப்பட்டுள்ளது. முதல் முறையாக தொழில் ரீதியில் விளையாட்டு வீரர்களுக்கான [illegible] மேற்கொள்வதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்படும்- என்றார். (ப-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் பூமியில் பௌத்த மதபீடம்; நாம் ஒன்றுதிரண்டு எதிர்க்க வேண்டும்

## மட்டு. தமிழ் உணர்வாளர்கள் அமைப்பின் தலைவர் வலியுறுத்து

**மட்டக்களப்பு, ஏப்.22**

**செங்கலடி, ஈரளக்குளம் மற்றும் புளுட்டுமானோடை போன்ற தமிழருடைய பூர்வீக இடங்களில், பௌத்த மத்தியஸ்தானம் அமைக்கும் முயற்சியை கட்சி பேதமின்றி, தமிழர்களின் பூர்விகம் எனும் அடிப்படையில் எதிர்ப்பதற்கு மக்கள் ஓரணியில், திரளவேண்டும் என மட்டக்களப்பு மாவட்ட தமிழ் உணர்வாளர்கள் அமைப்பின் தலைவர் க.மோகன் தெரிவித்துள்ளார்.**

மட்டக்களப்பில் இடம்பெற்று வரும் குழப்ப நிலைமைகள் தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் உள்ளதாவது;

கட்சிப் போட்டி, அதிகாரப் போட்டி என்பவற்றால் மாநகரத்தின் அபிவிருத்தி வேலைகளை முடக்கினால் பாதிக்கப்படப் போவது எமது மாநகரமாகும். அண்மைக் காலமாக மாநகர அதிகாரங்களை கைப்பற்றுவதற்காக நடத்தப்படும் ஆடுபுலி ஆட்டத்தை மக்கள் அவதானித்துக் கொண்டுதான் இருக்கின்றார்கள். இப்போது புதிய பரிமாணத்தில் இன்னுமொரு போட்டி நிலை உருவாகியுள்ளது. இது ஆரோக்கியமான செயற்பாடு அல்ல, ஒவ்வொரு நகர்வுகளையும் மக்கள் உன்னிப்பாக அவதானித்து வருகின்றனர். இதில் பின்னால் இருந்து யார் செயற்படுகின்றனர் என்பதையும் மக்கள் அறிவார்கள். எனவே எமது மாவட்டத்தையும், மாநகரத்தையும் நேசிக்கின்ற ஒவ்வொரு குடிமகனும் பொறுப்பு வாய்ந்தவராக இருக்க வேண்டும். மட்டக்களப்பு மாவட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக் காலத்தில் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சராக இருந்த தேவநாயகம் ஒரு பௌத்த துறவியை அடித்து விரட்டினார். செங்கலடி பிரதேச செயலக பிரிவில் புலுட்டு மானோடை எனும் கிராமத்தில்பௌத்தவிகாரை அமைக்க முயற்சித்ததற்காகவே அந்தச் சம்பவம் நடந்தது. அது வரலாறாகப் பதியப்பட்டுள்ளது. ஆனால் இன்று அதே இடத்தில் பௌத்த மத பீடம் நிறுவுவதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதை மக்கள் கட்சி பேதமின்றி திரண்டு எதிர்க்க வேண்டும் - என்றுள்ளது. (ப)

# பாடத்திட்டங்களை நடத்த ஆசிரியர்கள் திண்டாட்டம்

நாட்டில் கொரோனாத் தொற்றுக்கு மத்தியில், சுகாதார வழிகாட்டுதல்களைப் பின்பற்றி, பாடசாலைகளின் இரண்டாம் தவணைக்கான கற்றல் நடவடிக்கைகள் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

எனினும் கற்றல் நடவடிக்கைகளை முறையாகத் தொடர்வதற்கு ஆசிரியர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர் என்று இலங்கை ஆசிரியர் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

குறிப்பாக உரிய காலத்தில் பாடத்திட்டங்களைச் செயற்படுத்துவதற்கு, ஆசிரியர்கள் கடுமையான சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது என்று சங்கத்தின் தலைவர் பிரியந்த பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

அதேவேளை 2020 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள் இந்த மாதத்தின் இறுதி வாரத்தில் வெளியிடப்படும் என்று பரீட்சைகள் ஆணையாளர் சனத் பூஜித தெரிவித்துள்ளார். தற்போது பரீட்சை முடிவுகள் மதிப்பாய்வு செய்யப்படுகின்றன.

அத்துடன் நாட்டின் அனைத்து பல்கலைக்கழகங்களை ஏப்ரல் 27 ஆம் திகதி முதல் மீண்டும் திறப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ப-4)

*ஆலயச்சூழலில்*

# இறந்த கோழிக்குஞ்சுகளை வீசிச் சென்ற விசமிகள்!!

வவுனியா.ஏப்.22.

வவுனியா குடியிருப்பு பிள்ளையார் ஆலய வளாகத்தை அண்டிய பகுதியில் உயிரிழந்த கோழிக்குஞ்சுகளை வீசிச்சென்ற விசமிகளால் சுகாதாரச் சீர்கேடான நிலைமை உருவாகியுள்ளது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

நூற்றுக்கணக்கான கோழிக்குஞ்சுகளை இவ்வாறு வீசிச் சென்றமையால், குறித்த பகுதியில் துர்நாற்றம் வீசுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த பகுதிக்கு அருகில் சிறுவர் பூங்கா மற்றும் ஆலயம் அமைந்திருப்பதால் அதிகமான பொதுமக்கள் சென்றுவரும் இடமாகவும் இது காணப்படுகின்றது.

இந்நிலையில் இவ்வாறான நாசகாரச் செயலைச் செய்தவர்கள் அடையாளம் காணப்பட்டுச் கடுமையாக தண்டிக்கப்படவேண்டும் என்று சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (ஐ-110)

# புதிய தேர்தல் முறைமைக்கு இ.தொ.காங்கிரஸ் எதிர்ப்பு

கொழும்பு,ஏப்.22

புதிய தேர்தல் முறைமையின்படி, மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டம், அலரி மாளி கையில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. இதில் கட்சியின் பொதுச் செயலாளரும், இராஜாங்க அமைச்சருமான ஜீவன் தொண்டமான் மற்றும் இ.தொ.கா.வின் உப தலைவரும், பெருந்தோட்டங்களுக்கான பிரதமரின் ஒருங்கிணைப்புச் செயலாளருமானசெந்தில்தொண்டமான் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

இதில் மாகாண சபைத் தேர்தலை புதிய முறைமையில் இரு வழிமுறைகளில் நடத்துவது தொடர்பில் ஆராயப்பட்டது.

இதற்கு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் இரண்டு வழிமுறைகளுக்கும் நேரடியாக எதிர்ப்பைத் தெரிவித்தது.

மலைநாட்டில் 10 லட்சம் மக்கள் செறிந்து வாழ்கின்ற சூழ்நிலையில், புதிய தேர்தல் முறைமையின்படி, மாகாண சபை மூலம் அந்தப் 10 லட்சம் மக்களுக்கும் ஐந்து உறுப்பினர்கள் மாத்திரமே தேர்ந்தெடுக்கப்படுவர்.

தற்போதைய நிலைமையின்படி, மலையகமெங்கும் தமிழ் மாகாண சபை உறுப்பினர்கள் 25 பேர் காணப்படுகின்றனர். ஆனால், புதிய முறைமையின்படி ஐவர் மாத்திரமே கிடைக்கப்பெறுவர். அதனால் இதனை ஏற்றுக் கொள்ள முடியாது என்று செந்தில் தொண்டமான் தெரிவித்தார்.

தொடர்ந்து இரட்டைத் தொகுதி தொடர்பில் யோசனை முன்வைக்கப்பட்டது.

இதற்குப் பதிலளித்த செந்தில் தொண்டமான், இரட்டைத் தொகுதி எனும் பட்சத்தில், சிறுபான்மைக் கட்சிகள் கட்டாயமாகப் பெரும்பான்மை கட்சிகளோடு ஒத்துப் போகக் கூடிய சூழ்நிலைக்குத் தள்ளப்படுவர்.

அதனால், சுயமாகத் தனித்துப் போட்டியிடும் வாய்ப்பற்றுப் போகின்றது. இந்த முறைமையையும் ஏற்றுக்கொள்ள முடியாதென்றும் எதிர்ப்புத் தெரிவித்தார்.

குறைந்த மக்கள் தொகையைக் கொண்ட தனித் தமிழ் மக்கள் மாத்திரம் உள்ளடங்கும் வகையில், 25 தமிழ்த் தொகுதிகளை உருவாக்குங்கள். அதற்கு ஆதரவளிப்போம் என்றும் அவர் தெரிவித்தார். (ப-4)

# கர்ப்பிணியைத் தாக்கினாரென சக பெண் உறுப்பினர் கைது



கொழும்பு,ஏப்.22

கர்ப்பிணியான பெண் உறுப்பினரைத் தாக்கினார் என்ற குற்றச்சாட்டில், நகர சபையின் மற்றுமொரு பெண் உறுப்பினர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

மஹரகம நகர சபையின் பெண் உறுப்பினரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

தாக்குதலுக்கு இலக்கான பெண் உறுப்பினர் மஹரகம பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார். மேலதிக விசாரணைகளில், சந்தேகநபரான பெண் உறுப்பினர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இருவருக்கும் இடையில் ஏற்பட்ட முரண்பாட்டின் காரணமாக, சந்தேக நபரான பெண் உறுப்பினர் தன்னைத் தாக்கித் தள்ளிவிட்டார் என்று கர்ப்பிணியான பெண் உறுப்பினர் முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார். அவர் தற்போது ஸ்ரீ ஜயவர்தனபுர மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றார் என்றும் அவர் தெரிவித்தார். (ப-4)



மன்னார் மடுக்கரை கிராமத்தில் உள்ள நியூ சக்தி விளையாட்டு மைதானம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை துப்புரவு செய்யப்பட்டது. இளைஞர்கள் மற்றும் கிராமத்து மக்கள் இணைந்து துப்புரவுப் பணியை முன்னெடுத்தனர். (ஐ-213)


# அதிவேக நெடுஞ்சாலைகளால் ரூ.350 மில்லியன் வருமானம்

## அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ பெருமிதம்

கொழும்பு, ஏப்.22

தமிழ் சிங்களப் புத்தாண்டு காலப் பகுதியில் நாட்டின் அதிவேக நெடுஞ்சாலைகளில் 12 லட்சத்து 36ஆயிரத்து 288 மேற்பட்ட வாகனங்கள் பயணித்ததுடன், இதனால் சுமார் 350 மில்லியன் ரூபா வருமானமாக ஈட்டப்பட்டுள்ளது என்று அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

கடந்த ஏப்ரல் 8 தொடக்கம் 18 வரையான காலப் பகுதியிலேயே இந்த வருமானம் ஈட்டப்பட்டுள்ளது. ஏப்ரல் 10 ஆம் திகதி அதிக எண்ணிக்கையிலான வாகனங்கள் அதிவேக நெடுஞ்சாலையைப் பயன்படுத்தியுள்ளன. அதன்படி அன்றைய தினம் மொத்தம் ஒரு லட்சத்து 41 ஆயிரத்து 187 வாகனங்கள் நெடுஞ்சாலைகளில் போக்குவரத்து நடவடிக்கையை மேற்கொண்டுள்ளன. இதேவேளை மத்திய அதிவேக நெடுஞ்சாலையின் மீரிகம மற்றும் குருநாகல்



பிரிவுகள் மே மாதத்தில் திறக்கப்படவுள்ளன. இதனால் 39.7 கிலோ மீற்றர் தூரத்தை 25 நிமிடங்களுக்குள் கடக்க முடியும்" என்று அவர் மேலும் தெரிவித்தார். (ப)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாடாளுமன்றத்தில்....

சபாநாயகருக்கு ஏற்பட்டது. நாடாளுமன்றம் நேற்று முற்பகல் 10 மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடியது. ஆளுங்கட்சி உறுப்பினர்கள் கைகளில் கறுப்புப் பட்டியணிந்து சபை அமர்வில் பங்கேற்றிருந்தனர். பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் கறுப்பு ஆடை அணிந்து சபை அமர்வில் பங்கேற்றனர்.

பிரதான சபை நடவடிக்கைகள் முடிவடைந்த பின்னர் எதிரணி பிரதம கொறடாவான லக் ஷ்மன் கிரியல்ல ஒழுங்குப் பிரச்சினையொன்றை எழுப்பி, அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கைமீது நாளையும் (இன்று) நாளைமறுதினமும் (நாளை) விவாதம் நடைபெறவுள்ளது. இவ்விவாதத்தை நாமே கோரியிருந்தோம். கட்சித் தலைவர்கள் கூட்டத்திலும் சுட்டிக்காட்டியிருந்தோம். எனவே, விவாதத்தை ஆரம்பிப்பதற்கான வாய்ப்பு எமக்கே வழங்கப்படவேண்டும் என்று வலியுறுத்தினார். நாடாளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீமும் இந்தக் கோரிக்கையை விடுத்தார்.

இதற்குப் பதிலளித்த சபை முதல்வரான அமைச்சர் தினேஸ் குணவர்தன, கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின் பிரகாரமே நாம் செயற்படுகின்றோம். கடந்த ஆட்சியின்போது எமது தலைவர்களும், அரச அதிகாரிகளுமே அதிகம் பழிவாங்கப்பட்டனர். எனவே, விவாதத்தை ஆரம்பிப்பதற்கான தார்மீக உரிமை எமக்கே இருக்கின்றது. அரசியல் பழிவாங்கல்பற்றி கதைப்பதற்கான அருகதை ஐக்கிய மக்கள் சக்திக்குக் கிடையாது எனக் குறிப்பிட்டார்.

நாடாளுமன்ற உறுப்பினர் லக் ஷ்மன் கிரியல்ல கருத்துகளை முன்வைக்கும் போது அதற்கு ஆளுங்கட்சி உறுப்பினர்கள் எதிர்ப்பை வெளியிட்டு கூச்சலிட்டனர். பதிலுக்கு ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்களும் சொற்கணைகளைத் தொடுத்தனர்.

இவ்வாறு வாக்குவாதம் இடம்பெற்றுக் கொண்டிருக்கையில் இரு தரப்பினரும் சபைக்கு நடுவில் வந்தனர். ஒருசில நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இடையில் மோதலும் ஏற்பட்டது. எனினும், ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் நிலைமையைக் கட்டுப்படுத்தினர். குறிப்பாக ஹரின் பெர்னாண்டோவை தாக்குவதற்கு நாடாளுமன்ற உறுப்பினர் பிரசன்ன ரணவீர முற்பட்டார். ஐக்கிய மக்கள் சக்தியினர் கறுப்பு ஆடை அணிந்திருந்த நிலையில், அவர்களின் படத்தையும், சஹ்ரான் குழு கறுப்பு ஆடை அணிந்து வெளியிட்ட படத்தையும் ஒட்டிய பதாதைகளை ஆளுங்கட்சியினர் தாங்கியிருந்தனர். இவ்வாறு சர்ச்சை நீடித்ததால் சபை நடவடிக்கைகளை 10 நிமிடங்களுக்கு சபாநாயகர் ஒத்திவைத்தார். சஹ்ரான் குழுவை பாதுகாக்கும் தரப்பே இன்று எம்மையும் குழப்புகின்றது என்று சபைக்குள் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கோசம் எழுப்பினர். (ஒ.44)


# Job offer

**Do you know German language and do you like to work with young people?**

More and more students in Jaffna want to learn German. To meet the increasing demand to learn German in Jaffna, the **Goethe-Institut** (German Cultural Institute) is starting to offer German language courses and is seeking to employ **German language teachers** on a fee basis in **Jaffna.**

Requirements:
Good knowledge of German language. Experience in teaching languages is an asset. Training opportunities for teaching skills will be offered.



**If you are qualified and interested, please send us your information (and CV) to**

**GOETHE-INSTITUT**
No.39, R.G. Senanayeka Mw,
Colombo 07

info-colombo@goethe.de
**www.goethe.de/srilanka**
www.facebook.com/goetheinstitut.srilanka

**GOETHE INSTITUT**
Sprache. Kultur. Deutschland.


## மரண அறிவித்தல்

பிறப்பு 22 • 07 • 1964



இறப்பு 20 • 04 • 2021

### சுந்தரலிங்கம் ராசகுமார்

இணுவிலைப் பிறப்பிடமாகவும் Germany Dusseldorf ஐ வசிப்பிடமாகவும் கொண்ட சுந்தரலிங்கம் ராசகுமார் 20.04.2021 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சுந்தரலிங்கம் மற்றும் சிதம்பரேஸ்வரி தம்பதியரின் அன்பு புதல்வனும், குமாரசாமி - தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், சாந்தியின் அன்புக் கணவரும், மோகீதன் (ஜேர்மன்), பிரியாஸ் (ஜேர்மன்), சுயன் (ஜேர்மன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சுந்தரலிங்கம் விஜயகுமார்
(அண்ணா)

## அரசுடமையானது படகு

சாவகச்சேரி, ஏப். 22

கேரதீவு கடலில் உரிய அனுமதிப் பத்திரம் இன்றியும், உரிமம் புதுப்பிக்காத நிலையிலும் தொழிலில் ஈடுபட்ட யாழ்ப்பாணம் நாவாந்துறை வாசியின் படகு சாவகச்சேரி நீதிமன்றால் நேற்றுமுன்தினம் முதல் செய்யப்பட்டு அரசுடமையாக்கப்பட்டது. தென்மராட்சி தெற்கு பிரதேச கடலேரியில், வெளியிடங்களைச் சேர்ந்த கடற்றொழிலாளர்கள் தொழில் செய்வதால் தமது வாழ்வாதாரம், பாதிக்கப்படுகின்றது என்று தென்மராட்சி தெற்கு பிரதேச கடற்றொழில் அமைப்புகள் யாழ். மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்துக்கு முறையிட்டனர்.

கேரதீவு பகுதிக்கு கடந்த 2019 மார்ச் 6ஆம்திகதி சென்ற திணைக்கள அதிகாரிகள் திடீர் பரிசோதனையில் ஈடுபட்டனர்.

இதன்போது அனுமதிப் பத்திரமின்றியும், உரிமம் புதுப்பிக்கப்பட்ட நிலையிலும்தொழிலில் ஈடுபட்ட படகை அவர்கள் கைப்பற்றினர். இது தொடர்பாக படகின் உரிமையாளருக்கு எதிராக சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல்செய்திருந்தனர். இந்தவழக்குநேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது. குற்றச்சாட்டுகள் உறுதிப்படுத்தப்பட்ட நிலையில் அந்தப் படகு அரசுடமையாக்கப்பட்டுள்ளது. (ப-9)


## பரிபூரண சேவை

அனைத்து அந்தியகால சேவைகளாகிய
**மரபேழை, அமரர் ஊர்தி, அலங்காிப்பு**
ரூ.16,000 இற்கு செய்து தரப்படும்.
**021 432 7960, 076 584 6523**

சுய தொழிலாளர் அபிவிருத்தி கம்பனிக்கு
## பணியாளர் தேவை

மேற்குறிப்பிட்ட விவசாயக் கம்பனிக்கு வடக்கு மாகாணத்தில் உள்ள அத்தனை மாவட்டங்களுக்கும் மாவட்ட, பிரதேச, கிராமிய இணைப்பாளர்கள் தேவை. இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்

தொடர்புகளுக்கு: **074 000 3331**
**குறிப்பு:** பகுதிநேரப் பணியாளர்களும் விண்ணப்பிக்கலாம்.


## கண்ணீர் அஞ்சலி



**அமரர்
இரத்தினசபாபதி
சிவசண்முகநாதன்**

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**BOC Travels (Pvt) Ltd**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அடுத்தடுத்த...

தற்போதுள்ள கொரோனா நிலைமைகள் தொடர்பில் மதத் தலைவர்களுக்கும் மாகாண சுகாதார பிரிவினருக்கும் இடையில் யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற சந்திப்பின்போதே ஆ. கேதீஸ்வரன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாணத்தில் அண்மைய நாள்களில் கொரோனாத் தொற்று அதிகரிப்பதை அவதானிக்க முடிகின்றது. இதனால் சில பகுதிகளை முடக்க வேண்டி ஏற்பட்டது.

கடந்த வாரத்தில் யாழ்ப்பாணத்தில் ஐந்து பேர் கொரோனா காரணமாக உயிரிழந்தனர். கடந்த வருடத்தில் யாழ்ப்பாணத்தில் கொரோனா காரணமாக பெரியளவான இறப்புக்கள் ஏற்படவில்லை. ஆனால் கடந்த வாரத்திலேயே ஐவர் இறந்துள்ளமை கவலை தருகின்றது.

அதேபோல், சித்திரைப் புத்தாண்டுக் கொண்டாட்டங்களால் தென்பகுதியில் கொரோனா கொத்தணிகள் ஏற்படும் அபாயமும் வெளிப்பட்டுள்ளது. முக்கியமாக சுகாதார அமைச்சு அது சம்பந்தமாக அச்சத்தை வெளியிட்டிருக்கின்றது. அதன் தாக்கத்தை இந்த மாத கடைசி வாரத்திலும் மே மாத முதல் இரண்டு வாரங்களிலும் உணரக்கூடியதாக இருக்கும். இன்னொருபுறம் கூடுதல் வீரியத்துடன் திரிபடைந்த வைரஸ் இங்கே பரவலாம் என்றும் அஞ்சப்படுகின்றது. அது மிக ஆபத்தான நிலைக்குள் மருத்துவத்துறையைத் தள்ளிவிடும்.

இந்தத் திரிபு வைரஸால் இன்று முழு உலகும் பேரச்சத்துக்குள் தள்ளப்பட்டுள்ளது. இந்தியாவில் நேற்று (நேற்று முன்தினம்) 3 லட்சம் பேர் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர். இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட இறப்புக்கள் பதிவாகியுள்ளன. ஆகவே திரிவு வைரஸின் பரவலுக்கு நாம் இடங்கொடுத்தால் அது பேராபத்தான நிலையைத்தான் உருவாக்கும் என்பதையே இந்தப் புள்ளிவிவரங்கள் எமக்குக் கற்பிக்கின்றன.

வடக்கு மாகாண மக்கள் மத்தியில் தற்போது கொரோனா பற்றிய அச்சம் இல்லை. ஒரு மெத்தனப்போக்குக் காணப்படுகின்றது. எனவே உச்சக்கட்ட விழிப்புணர்வை நாம் ஏற்படுத்த வேண்டும். அதற்கு மதத் தலைவர்கள் தம்மாலான முழுமையான ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என்றார். குறித்த சந்திப்பில் இந்து, கிறிஸ்தவ, இஸ்லாம் மதத் தலைவர்கள் கலந்துகொண்டு தமது கருத்துக்களையும் பணிப்பாளரிடம் தெரிவித்திருந்தனர். (ம-20,26)

## அல்வாய்...

ஒருவர் வாள் வெட்டுக்கு இலக்காகி உயிரிழந்த நிலையில் இரு தரப்பிலும் நால்வர் கைது செய்யப்பட்டதுடன் மேலும் இருவர் தேடப்பட்டு வருகின்றனர். அவர்களில் இருவர்மீது கொலைக் குற்றச்சாட்டு முன்வைக்கப்படவுள்ளது.

அல்வாயில் நேற்றுமுன்தினம் பிற்பகல் இரு பகுதியினருக்கு இடையே இடம்பெற்ற மோதலில் இரண்டு பிள்ளைகளின் தந்தையான முருகராசா கௌசிகன் (வயது31) என்பவர் வாள் வெட்டுக்கு இலக்காகி உயிரிழந்தார்.

அல்வாய் வடக்கு முத்துமாரி அம்மன் கோவிலடியில் உறவினர்களுக்கு இடையில் காசு கொடுக்கல் வாங்கல் பிரச்சினை வாய்த்தர்க்கமாக ஆரம்பித்து வாள் வெட்டில் முடிந்தது என்று பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்தது.

சம்பவத்தில் ஒருவர் கொல்லப்பட்டதுடன் 6 பேர் படுகாயமடைந்து பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (ம-26)

## ஏழு....

இளமருதங்குளம் ஆலயத்துக்கு அருகிலுள்ள வீடொன்றிலேயே மேற்படி திருட்டு இடம்பெற்றுள்ளது. வீட்டில் உள்ளவர்கள் வெளிச்சென்றிருந்த நிலையிலேயே இந்தத் திருட்டு இடம்பெற்றுள்ளது.

நகைகளுடன் அதிதிறன் அலைபேசி மற்றும்சிறுதொகைப் பணம் என்பவையு திருடப்பட்டுள்ளன. மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-110)

## தவறிழைத்தோரை....

பழிவாங்குவதால் எவ்வித பயனும் கிடைக்கப்போவதில்லை என்பதை பாதிக்கப்பட்ட மக்களுக்காக கூறிக் கொள்வதுடன் அனைவரையும் ஆசிர்வதிக்கிறோம் என பாப்பரசர் தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டு இரண்டு ஆண்டுகள் நிறைவடைந்துள்ளமையை முன்னிட்டு நேற்று புதன்கிழமை கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோனியார் திருத்தலத்தில் இடம்பெற்ற விசேட நிழ்வில் பாப்பரசரின் செய்தியை அறிவிக்கும்போது பாப்பரசரின் இலங்கைக்கான வதிவிடப்பிரதிநிதி ப்ரையன் யுடைக்வே இதனைத் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் உரையாற்றிய ஹசன் மௌலானா மௌலவி, தீவிரவாத செயற்பாடுகளுக்கு முஸ்லிம் மதத்தில் ஒருபோதும் அனுமதி கிடையாது. இந்தத் தாக்குதல்களை உலகிலுள்ள சகல முஸ்லிம்களும் கடுமையாக எதிர்க்கின்றனர். அடிப்படைவாதக் கொள்கைகளை கொண்டவர்களின் செயற்பாடுகள் வேறு ரூபங்களில் முன்னெடுக்கப்படுகின்றன. இவ்வாறான விடயங்கள் தொடர்பில் தகவல்கள் தெரிந்தால் பொலிஸாருக்கு அறிவிக்குமாறு மக்களிடம் கேட்டுக் கொள்கின்றேன்.

அத்தோடு கருணா அம்மான் மற்றும் பிள்ளையான் போன்றோரால் தற்போது சமூகத்தில் சாதாரண ஒரு பிரஜையாக வாழ முடிகிறது என்றால், அதேபோன்று அடிப்படைவாதக் கொள்கைகளைக் கொண்ட முஸ்லிம்களும் மனம் திருந்தி ஏன் வாழ முடியாது? அடிப்படைவாதத்தை கைவிட்டு சிறந்த பிரஜைகளாக வாழுமாறு வலியுறுத்துகின்றோம் - என்றார். (ஒ.இ)

## தடுப்பூசி...

தார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்தார். நாடாளுமன்றத்தில் நேற்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச கொவிட் தடுப்பூசிகளை செலுத்திக்கொண்டவர்களுக்கு உயிர் பாதிப்புகள் ஏற்பட்டுள்ளதா என்று எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே சுகாதார அமைச்சர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அஸ்ராஜெனகா மட்டுமல்ல எந்தத் தடுப்பூசி செலுத்தப்பட்டாலும், அவ்வாறு செலுத்தப்பட்டவர்களில் சிலருக்கு ஒவ்வாமை ஏற்படுவது வழமை. அந்த வகையில் அஸ்ராஜெனகா தடுப்பூசி ஏற்றப்பட்டு சில வாரங்களுக்குள், சில நாடுகளில் ஒரு சிலருக்கு குருதி உறைவு ஏற்பட்ட சம்பவங்கள் பதிவாகின. இலங்கையிலும் அவ்வாறான 6 சம்பவங்கள் பதிவாகியுள்ளன. அதில் மூவர் உயிரிழந்துள்ளனர்.

உலக சுகாதார நிறுவனத்தின் பக்க விளைவுகள் தொடர்பான குழுவின் அறிக்கையின் பிரகாரம் குருதி உறைவு மற்றும் தடுப்பூசிக்கு இடையில் நேரடித் தொடர்புகள் எவையும் கண்டறியப்படவில்லையென கூறப்பட்டுள்ளது. எனினும், ஒரு மில்லியன் சனத்தொகையில் 4 முதல் 6 பேருக்கு இவ்வாறு ஒவ்வாமைகள் ஏற்படக்கூடும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. அஸ்ராஜெனகா தடுப்பூசியைத் தொடர்ந்து செலுத்திக் கொள்ள உலக சுகாதார நிறுவனம் அனுமதியளித்துள்ளது. இலங்கையில் தடுப்பூசி ஏற்றும் பணி நிறுத்தப்படவில்லை. மே முதல் வாரம் முதல் அஸ்ராஜெனகா தடுப்பூசியின் இரண்டாம் டோஸ், முதல் சுற்றில் செலுத்தப்பட்டவர்களுக்கு செலுத்தப்படும்.

அதேவேளை, தடுப்பூசி தொடர்பில் மக்கள் மத்தியில் சந்தேகம் ஏற்படும் விதத்திலான கருத்துகளை வெளியிடாமல் இருப்பது மக்கள் பிரதிநிதிகளின் பொறுப்பாகும் என்றார். (ம-ஒ.44)

## தரமிறக்கப்பட்டுள்ளது...

மாக தரமுயர்த்துமாறு தமிழ் மக்கள் பல ஆண்டுகளாக கோரிக்கையை முன்வைத்து வந்தனர். எனினும், முஸ்லிம் அரசியல்வாதிகளின் எதிர்ப்பினால் அது இதுவரை சாத்தியமாகவில்லை.

நல்லாட்சி காலத்தில் பிரதேச செயலகத்தை தரமுயர்த்த கடுமையான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. நிர்வாக அதிகாரங்கள் இல்லாத நிலையிலும், கல்முனை தமிழ் பிரிவு பிரதேச செயலகம் என்று சம்பிரதாயபூர்வமாக அங்கீகரிக்கப்பட்டிருந்தது. கணக்காளர் ஒருவரை நியமிக்க நடவடிக்கையெடுத்து, அதுவும் இழுபறியாகி, கடந்த ஆட்சியில் அதுவும் சாத்தியமாகாமல் போனது.

இந்த நிலையில், தற்போதைய அரசு பதவியேற்றதைத் தொடர்ந்து, தற்போது பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சிடமிருந்து கல்முனை பிரதேச செயலகத்துக்கு கடிதமொன்று அனுப்பப்பட்டுள்ளது. அதில், கல்முனை தமிழ் பிரதேச செயலகம் என்று நாட்டப்பட்டுள்ள பெயர்ப்பலகையை அகற்றி, கல்முனை உப பிரதேச செயலகம் என்று புதிய பெயர்ப்பலகையை நாட்டுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன், பிரதேச செயலாளர் இனி மேல் பிரதேச செயலாளர் என இலட்சினை பாவிக்க முடியாது, உப பிரதேச செயலாளர் என்றே பாவிக்க முடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ.இ)

## இலங்கைக்...

கருத்து சர்ச்சையாகியிருந்த நிலையில், தான் ஒருபோதும் அதை 'முடிவாக' தெரிவிக்கவில்லை என்றும், அது என்முன்னர் கொண்டுவரப்பட்ட ஒரு 'சுய ஆலோசனை' மட்டுமே என்றும் துறைசார் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார். கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே டக்ளஸ் மேற்படி தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்திய மீனவர்கள் இலங்கைக் கடல் எல்லைக்குள் நுழைவதைத் தடுப்பதற்காக, குறிப்பாக கடல் வளங்களை அழிக்கக்கூடிய இழுவைப் படகுகளை உபயோகிப்பதைத் தடுத்து நிறுத்துவதற்காக அதனை எனது நேரடிக் கண்காணிப்புக்குள் உட்படுத்தத் நான் தயாராக உள்ளேன்.

எங்கள் கடல் எல்லைக்குள் மீன் பிடிக்க இந்திய மீனவர்களுக்கு நான் அனுமதி வழங்குவேன்' என்று நான் தெரிவித்தேன் என்று வெளிவந்த கூற்றுத் தவறானது. அதனை ஒரு யோசனையாக மட்டுமே சிலர் முன்வைத்தனர். அதனை எனது முடிவாக ஒரு போதும் நான் சொல்லவில்லை. தற்போது எங்கள் கடலுக்குள் நுழைகின்ற அனைத்து இந்திய மீனவர்களையும் தொடர்ந்து கைதுசெய்யுமாறு கடற்படைக்கு அறிவித்துள்ளேன். எந்தவொரு நபரும் அத்துமீறுவதை நான் பொறுத்துக் கொள்ளமாட்டேன். நாம் நடைமுறைப்படுத்த எண்ணுகின்றவற்றை யோசனைகளாக முதலில் உள்ளூர் மீனவர்கள் மற்றும் மீனவர் அமைப்புகளிடத்தில் முன்வைப்போம். அதுபற்றி அவர்களுடன் விவா திப்போம். அவர்களிடம் கலந்தாலோசிக்காமல் எந்த முடிவும் எடுக்கப்பட மாட்டாது.

மீனவர்கள் கூட அவர்களுடன் நான் கலந்தாலோசிக்காமல் எந்த முடிவையும் எடுக்க மாட்டேன் என்ற நம்பிக்கையில் இருக்கிறார்கள். அவர்கள் என்னை நன்றாக அறிவர். ஆனால் சிலர் என் பேச்சைத் தவறாகப் பயன்படுத்துகிறார்கள். என்னைப் பார்ப்பதற்கு ஒரு கொலைகாரனைப் போன்று தோற்றமளிப்பவராக பொய்யான பரப்புரைகளைச் செய்கிறார்கள். ஆனால் நான் அப்படிப்பட்டவன் அல்லன் '- என்றார், (ம)

## வடக்கில்...

தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை மற்றும் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவபீட ஆய்வுகூடங்களில் 788 பேரின் மாதிரிகள் இன்று (நேற்று) பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. அவர்களில் 21 பேருக்குத் தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது. யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 15 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்களில் 11 பேர் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலைய உத்தியோகத்தர்கள். பொலிஸ் நிலையத்தில் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்ட உத்தியோகத்தர்களுடன் நெருங்கிய தொடர்புடைய அனைவரும் சுயதனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் தனிமைப்படுத்தல் விடுதியில் சிகிச்சை பெற்ற இருவருக்கு தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. கோப்பாய் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவிலும் நல்லூர் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவிலும் தலா ஒருவர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்கள் இருவரும் சுயதனிமைப்படுத்தலில் கண்காணிக்கப்பட்டவர்கள். மன்னார் மாவட்டத்தில் 5 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்களில் நால்வர் மன்னார் மருத்துவமனையின் வெளிநோயாளர் பிரிவுக்கு கொரோனா அறிகுறிகளுடன் சென்றவர்கள். ஒருவர் மருத்துவமனையின் விடுதியில் சிகிச்சை பெற்றவர். மல்லாவி மருத்துவமனைக்குச் சென்ற இராணுவ உத்தியோகத்தர் ஒருவருக்கு கொரோனாத் தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது' - என்றார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உடன் வேலைவாய்ப்பு

வவுனியாவிலுள்ள பிரபல்யமான **ஐஸ்கிறீம்** விற்பனை நிலையத்தில் பணியாற்றுவதற்கு **ஆண்** பணியாளர்கள் உடன் தேவை. (வயது 20 முதல் 50 வரை)

தொடர்பு: **077 378 8746**

## காணி விற்பனைக்கு

சங்கானை மெயின் வீதியில் கூடத்து மனோன்மணி அம்மன் கோவிலுக்கு பக்கத்தில் உள்ள ஒழுங்கையில் 200m தூரத்தில் 6 பரப்புக் காணி பழைய வீட்டுடன் (கடைசிக் காணி) விற்பனைக்குண்டு.

தொடர்பு: **077 248 7088, 077 361 8729**

## பணிப்பெண் தேவை

யாழ் நகரில் தங்கி இருந்து பணிபுரிவதற்கு பணிப்பெண் ஒருவர் தேவை.

**077 262 6944, 077 327 6502**


உ
சிவமயம்

# தசாக கிருஹயக்ஞ அழைப்பு



சார்வரி வருடம் பங்குனிமாதம்
26 ஆம் நாள் (08.04.2021)
வியாழக்கிழமை
அபரபட்ச த்வாதசி திதியில்
சிவபதமடைந்த
எங்கள் அன்பு அம்மா

**ஸ்வர்கஸ்ரீ. ஸ்ரீமதி. லக்ஷ்மிகாந்தம் ஐயர் காயத்ரிதேவி**
அவர்களின்
ஆத்ம சாந்தி கிரியைகள் கீழ்வரும் தினங்களில் நடைபெறும்

- தசாகம் - 23.04.2021 (வெள்ளிக்கிழமை) காலை : 10.00 மணி
- ஏகோதிஷ்டம், மாசியம் - 24.04.2021 (சனிக்கிழமை) காலை : 10.00 மணி
- சபிண்டீகரணம் - 25.04.2021 (ஞாயிற்றுக்கிழமை) காலை : 10.00 மணி
- கிரஹயக்ஞம் - 26.04.2021 (திங்கட்கிழமை) மதியம் : 12.00 மணி

மேற்படி தினங்களில் வந்து கலந்து அன்னாரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்தனை செய்யுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சிவஞானம்பிள்ளையார் கோயிலடி,
மானிப்பாய் வீதி, உடுவில்.

**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

## மரண அறிவித்தல்



பிறப்பு 05 . 04 . 1941
இறப்பு 21 . 04 . 2021

**வேலுப்பிள்ளை மாணிக்கவாசகர்**
(ஓய்வுபெற்ற அதிபர்)

மூளாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை மாணிக்கவாசகர் நேற்று (21.04.2021) புதன்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் சிவதேவியின் அன்புக் கணவரும், ஜெயசீலன் அவர்களின் அன்புத் தந்தையும், பிரதாயினியின் அன்பு மாமனாரும், ஹரீஸ்சாந், தர்ஷனா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.04.2021) வியாழக்கிழமை காலை 9.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பித்தனை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**மூளாய் கிழக்கு,**
**076 880 6350, 077 911 2997**

**தகவல்:**
**மனைவி, மகன்.**

# மரண அறிவித்தல்



## தம்பையா சுந்தரலிங்கம்

**தோற்றம்**
**22.09.1948**

**மறைவு**
**21.04.2021**

பலகாடு, காரைநகரைப் பிறப்பிடமாகவும், ஞானவைரவர் கோயில் வீதி, உரும்பிராய் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பையா சுந்தரலிங்கம் நேற்று (21.04.2021) புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பையா சிவக்கொழுந்து தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான அரியரட்ணம் தவமணி தம்பதியரின் மருமகனும், கிருஸ்ணகுமாரி (கிளி) அவர்களின் அன்புக் கணவரும், சுஜீவன் (லண்டன்), சுஜிந்தன் (லண்டன்) ஆகியோரின் தந்தையும், பாரதி (லண்டன்), நிரோசா (லண்டன்) ஆகியோரின் மாமனாரும், ஆழ்வார், ஆரன் ஆகியோரின் பேரனும், காலஞ்சென்றவர்களான குமாரசாமி, சங்கரப்பிள்ளை, இலட்சுமணன் (லிங்கேசு), சிவசுப்பிரமணியம், சரோயினிதேவி மற்றும் விசாலாட்சி, அருளம்பலம், தேவராசா, மகேஸ்வரி, தங்கபுஸ்பம், ஜெயகுமார், சந்திரகுமார் ஆகியோரின் பாசமிகு சகோதரரும், சோதிமலர், விஜயகுமாரி, காலஞ்சென்ற பராசக்தி, மற்றும், காந்திமலர், மகேஸ்வரன், ரதி, தயாளினி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.04.2021) வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, முற்பகல் 11.00 மணியளவில் கிரியைகள் நடைபெற்று தொடர்ந்து தகனக் கிரியைக்காக உரும்பிராய் இளங்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**ஞானவைரவர் வீதி,**
**உரும்பிராய் கிழக்கு.**

**தகவல்:**
**மனைவி, பிள்ளைகள்**
**மனைவி-077 755 4456**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பு துறைமுக நகர சட்டவரைவு நிறைவேறும்

*பெரும்பான்மை ஆதரவு கிடைக்கும் என்கிறார் கெஹெலிய*

**கொழும்பு,ஏப்.22**

**கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்ட வரைவை பெரும்பான்மை ஆதரவுடன் நிறைவேற்றுவோம் என்று அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல தெரிவித்தார்.**



அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

சட்ட வரைவொன்று சமர்ப்பிக்கப்பட்டு 7 நாள்களுக்குள் நீதிமன்றத்தில் ஆட்சேபனை தெரிவிப்பதற்கு நாட்டின் எந்தவொரு பிரஜைக்கும் உரிமை காணப்படுகிறது. இது சாதாரணமானதொரு விடயமாகும்.

நாட்டில் சட்ட வரைவொன்று தயாரிக்கப்பட்டால் அதனை முதற்கட்டமாக அமைச்சரவையில் சமர்பித்து, அனுமதி பெற்றுக் கொண்ட பின்னர், சட்ட வரைவுத் திணைக்களத்துக்கும் பின்னர் சட்டமா அதிபர் திணைக்களத்துக் கும் வழங்கப்படும்.

குறித்த சட்ட வரைவு தொடர்பில் சட்டமா அதிபரிடம் அரசமைப்புக்கு முரணானதா இல்லையா என்ற நிலைப்பாடு கோரப்படும். இந்தச் சட்ட வரைவுக்கு சட்டமா அதிபரின் நிலைப்பாடு தற்போது கிடைக்கப் பெற்றுள்ளது. எனினும் அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் சட்டமா அதிபரின் நிலைப்பாடு ஸ்திரமானதாகக் காணப்படாது. நீதிமன்றச் செயற்பாடு இதிலிருந்து மாறுபட்டதாகும்.

நீதிமன்றில் சட்ட வரைவு அரசமைப்புக்கு முரணானதா இல்லையா என்பது குறித்து தீர்மானிக்கப்படும். சில உறுப்புரைகளை சாதாரண பெரும்பான்மையுடன் நிறைவேற்ற முடியும். அல்லது மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்ற முடியும். அல்லது சர்வசன வாக்கெடுப்புக்குச் செல்ல வேண்டும் என்று பலவாறு தீர்ப்புக்கள் வழங்கப்படக் கூடும்.

இதற்கு சிறந்த உதாரணம் 20 ஆவது அரசமைப்புத் திருத்தம் ஆகும். நாட்டுக்கு மேலுமொரு சுமையை ஏற்படுத்த நாம் விரும்ப வில்லை. சர்வசன வாக்கெடுப்பை நடத்துவதில் சிக்கல் இல்லை.

இதே வழிமுறையையே துறைமுக நகர விவகாரத்திலும் நாம் பின்பற்றுகின்றோம். மாறாக எதிர்த்தரப்பினர் கூறும் வகையில் இதில் எந்த விடயமும் மறைக்கப்படவில்லை- என்றார். (ப-4)

## சந்திரிகாவுக்கு தயாசிறி கடிதம்

கொழும்பு,ஏப்.22

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கூட்டம் தொடர்பில், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளரான இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகரவால், முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவுக்குக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

கடந்த 5 ஆம் திகதி நடத்தத் திட்டமிடப்பட்டிருந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கூட்டத்தை இரத்துச் செய்யுமாறு அறிவித்து சந்திரிகாவால் வெளியிடப்பட்ட கடிதம் தொடர்பாக தயாசிறியால் இந்தக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

கட்சியின் கூட்டம் மற்றும் ஏனைய செயற்பாடுகள் தொடர்பில், முன்னாள் ஜனாதிபதிக்கு அழைப்பு விடுக்கப்படாமை, சூழ்ச்சியானதல்ல. மனச்சாட்சிக்குஅமைய உண்மையைப் புரிந்து கொள்ள வேண்டும் என்று அவர் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். (ப-4)

## மாகாண சபைகளுக்கான தேர்தல் இவ்வருட இறுதிக்குள் சாத்தியம்

*கெஹெலிய எதிர்வுகூறல்*

கொழும்பு,ஏப்.22

மாகாண சபைகளுக்கான தேர்தலை இந்த வருட இறுதிக்குள் நடத்துவது சாத்தியப்படலாம். எனினும் அதனை உறுதியாகக் கூற முடியாது என்று அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

மாகாண சபைகளுக்கான தேர்தலை கடந்த அரசே காலம் தாழ்த்தியது. நாம் எமது கடந்த ஆட்சிக் காலங்களில் சகல தேர்தல்களையும் உரிய காலத்தில் நடத்தியுள்ளோம். ஒருபோதும் காலம் தாழ்த்தப்படவில்லை. எனவே விரைவில் தேர்தலை நடத்துவதே எமது எதிர்பார்ப்பாகும்.

அதற்கமைய இந்த வருடத்தின் இறுதியில் தேர்தலை நடத்துவது சாத்தியப்படலாம். மாகாண சபை சட்ட வரைவில் காணப்படுகின்ற சிக்கல்களுக்குத் தீர்வு கண்ட பின்னர் இறுதித் தீர்மானம் அறிவிக்கப்படும்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான கூட்டணியில் 12 கட்சிகள் அங்கத்துவம் வகிக்கின்றன. இவற்றுக்கிடையில் கருத்து முரண்பாடுகள் ஏற்படுவது சாதாரணமானதொரு விடயமாகும். எனினும் இந்த முரண்பாடுகளுக்கு இனக்கப்பாடுகள் ஊடாகத் தீர்வு காணப்படும்.

எத்தகைய முரண்பாடுகள் ஏற்பட்டாலும், தேர்தல்களின்போது சகல கட்சிகளும் ஒன்றிணைந்து அவற்றுக்கு முகங்கொடுக்கும். இதனை அரசிலிருந்து விலகிச் செல்வதற்கான நடைமுறையாகக் கருத முடியாது - என்றார். (ப-4)

## இலங்கைக்கு சீனாவே உதவி

*போவோ மன்றில் ஜனாதிபதி பாராட்டு*

கொழும்பு,ஏப்.22

பல நூற்றாண்டு கால வரலாற்றில் இலங்கையும், சீனாவும் பரஸ்பர மரியாதை, நம்பிக்கை மற்றும் ஒத்துழைப்பு ஆகியவற்றின் அடிப்படையில் ஒரு வலுவான மூலோபாய ஒத்துழைப்பு கூட்டாண்மையைப் பகிர்ந்து கொள்கின்றன. இலங்கைக்கு நலன் பயக்கும் பல முக்கிய துறைகளுக்கு, சீன அரசு ஆதரவளித்து வருகின்றது என்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தெரிவித்தார்.

ஆசியாவுக்கான போவோ மன்றத்தில் ஜனாதிபதி ஆற்றிய உரை தொடர்பில் அவரது ஊடகப் பிரிவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதா வது:

இலங்கை ஒரு அமைதியான, அரசியல் ரீதியாக ஸ்திரமான நாடாகும். அது அதன் அபிவிருத்திக் கட்டமைப்பின் கீழ் தனது இலக்குகளைப் பூர்த்தி செய்ய, உள்நாட்டு நிர்வாகத்தை மேம்படுத்த பல நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களை வறுமையிலிருந்து உயர்த்துவதற்கும், கிராமப்புற உட்கட்டமைப்பை மேம்படுத்துவதற்கும், எதிர்காலத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக எமது கல்வித் தரத்தை வளப்படுத்துவதற்கும், நாடு முழுவதும் வினைத்திறனை மேம்படுத்த தொழில்நுட்பப் பயன்பாட்டை மேம்படுத்துவதற்கும் சிறந்த திட்டங்களை வகுத்துள்ளோம். எதிர்வரும் ஆண்டு களில் எமது பொருளாதாரத்தை கணிசமாக மேம்படுத்தி பலப்படுத்துவதற்கான சிறப்பான திட்டங்கள் எம்மிடம் உள்ளன.

இந்தச் செயன்முறைக்கு உதவ சர்வதேச பங்காளிகளின் பங்களிப்புக்களை நாங்கள் எதிர்பார்க்கின்றோம் - என்றுள்ளது. (ப-4)


**வேலையாட்கள் தேவை**

சைவ உணவகமொன்றிற்கு அனுபவமுள்ள சமையலாளர், சமையல் உதவியாளர் தேவை.
வண்ணை சாந்தையர்மடம்.
கற்பக விநாயகர் கோவில் அருகாமை (K.K.S. றோட்)
074 093 0200

**வேலையாள் தேவை**

K.K.S வீதியில் சுன்னாகத்திற்கும் மல்லாகத்திற்கும் இடையில் உள்ள உணவகம் ஒன்றிற்கு சமையல் உதவியாளர் தேவை. (பெண்)
பாதுகாப்பான தங்குமிட வசதி உண்டு.
சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்பு: 076 722 7047

**வேலையாள்கள் தேவை**

யாழ்ப்பாணத்தில் பிரபல
கவறிங் நகைக் கடைக்கு
வேலையாள்கள் தேவை.
(ஆண்,பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்)
நகை தொழில் செய்பவர்களுக்குரிய அறை வாடகைக்கு விடப்படும்
076 498 1951, 075 951 1635

**ALLIANCE FRANCAISE DE JAFFNA**

af பிரெஞ்சு மொழி

- யாழ்ப்பாணத்தில் French Embassy கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் Alliance Francaise மட்டுமே.
- அங்கீகரிக்கப்பட்ட Certificates International Diplomas (delf)
- தமிழ் மொழிமூலம் பிரஞ்சு நாட்டு ஆசிரியரினாலும் கற்பிக்கப்படும்
- French Embassy இன் அனுமதியுடன் திருமண அத்தாட்சிப் பத்திரங்கள் தமிழ் மொழி மூலம் மொழி பெயர்ப்புச் செய்து கொடுக்கப்படும். (இங்கே மட்டும்).



021 222 8093 17, Kandy Road, Jaffna

**காணி விற்பனைக்கு**

தெல்லிப்பழை கிழக்கு ஐயனார் வீதியில் 4 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு (நிலப்பரப்பு) 2 பரப்பாக பிரித்துக் கொடுக்கப்படும்.
(தெல்லிப்பழை வைத்தியசாலையில் இருந்து 600 m தூரம்)
பார்வையிடும் நேரம் காலை 8.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை (தரகர் தேவையில்லை)
ஒரு பரப்பு 5 இலட்சம்
077 814 7389, 077 614 7333


**மரண அறிவித்தல்**

தோற்றம் 08 . 11 . 1943



மறைவு 20 . 04 . 2021

**செபஸ்ரியாம்பிள்ளை மனுவல்பிள்ளை (பாலசிங்கம்)**

பாசையூரைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட செபஸ்ரியாம்பிள்ளை மனுவல்பிள்ளை (பாலசிங்கம்) அவர்கள் (20.04.2021) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (22.04.2021) வியாழக்கிழமை மாலை 3.00 மணியளவில் அன்னாரின் இல்லத்திலிருந்து எடுத்துச்செல்லப்பட்டு, பாசையூர் புனித அந்தோனியார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்பக் கொடுக்கப்பட்ட பின் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.
மனுவல்பிள்ளை அலஸ்ரீன் (மகன்)
முகாமையாளர் ஆசிரியர் வாண்மை விருத்தி நிலையம்
வேலணை.
076 308 8268

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org